www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

1 - 15 மே '89

4-12

விலை ரூ. 1-50

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு




## ஓட்டுச்சீட்டு தேவையில்லை! அதிகாரம்தான் வேண்டும்!

படிப்பகம்

www.padippakam.com

# ஈழம் பேச்சுவார்த்தைகள் அமைதிப்படை ஆக்கிரமிப்பு நோக்கம் அம்பலமானது

இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் மே இரண்டாவது வாரம் நடக்க உள்ளது. இலங்கை - ஈழப்பிரச்சினைகளுக்கு இந்தப் பேச்சு வார்த்தைகள் எந்தத் தீர்வையும் கொண்டு வந்துவிடமாட்டா. ஆனால் இந்திய ஆக்கிரமிப்பாளர்களின் சமாதான வேஷத்தைக் கலைத்து ஆதிக்க - விரிவாக்க வெறித்தனத்தை அவர்கள் தாமே வெளிச்சம் போட்டுக்காட்டிக்கொள்ள இந்தப் பேச்சு வார்த்தைகள் பயன்படும். இவ்வளவு நாள் அமைதி - சமாதானம் பற்றி வாய்கிழியப் பேசிவந்த இந்தியப் பாசிஸ்டுகள் பேச்சு வார்த்தை என்றதும் குலைபதறிப்போனது தெரிந்தது. முதலில் போர் ஒய்வுக்கு சம்மதிக்க மறுத்து இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்கிறது; பிறகு இந்திய - இலங்கை ஒப்பந்தத்துக்கு உட்பட்டு பேச்சு வார்த்தைகள் இருக்க வேண்டுமென எச்சரிக்கிறது. அப்புறம் புலிகள் நம்பிக்கைக்குரியவர்கள் அல்ல என்று அலறுகிறது. பேச்சுவார்த்தைகளில் இந்தியாவையும் இணைத்துக் கொள்ளவேண்டும் என்று தனது அடிவருடிகளான ஈழதுரோக கும்பல்களை விட்டு கெஞ்சுகிறது. இப்போது, இந்திய இராணுவம் ஈழத்தில் இருக்க வேண்டியதன் அவசியம், சிங்கள இனவெறி, தமிழர்களின் பாதுகாப்பற்ற நிலை குறித்து முதலைக் கண்ணீர் வடிக்கிறது. ஆக சிங்கள இனவெறி அரசு விரும்பினால் கூட இந்திய இராணுவம் வெளியேறாது; அதன் நோக்கம் ஈழப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதல்ல; தெற்கு ஆசிய பிராந்திய ஆதிக்கம் விரிவாக்கம்தான் என்பதை மீண்டும் ஒரு முறை நிரூபித்துவிட்டது.

இந்தப் பேச்சுவார்த்தைகளினால் இலங்கையில் அமைதி ஏற்பட்டுவிடாது; ஈழத்தமிழர்களின் நீண்ட கால கோரிக்கையான சுயநிர்ணய உரிமையும் கிட்டிவிடாது. விடுதலைப் புலிகளுக்குச் சில சலுகைகள் கொடுக்க பிரேமதாசா முன் வரலாம். ஜேவிபியிடமிருந்து முன்முயற்சியைப் பிடுங்கி சிங்கள மக்களிடம் ஆதரவு பெறவும், இந்திய அரசுடன் பேரம் பேசவும் பயன்படும் என்று பிரேமதாசா நம்பலாம். ஆனால் புலிகளுக்கு வழங்கும் வாக்குறுதிகள் சலுகைகளை நிறைவேற்றுவதோ, இந்திய அரசை நிர்பந்திப்பதோ எளிதானதும் இல்லை -சாத்தியமானதும் இல்லை. இது விரைவிலேயே தெரிந்துவிடும். ஈழமக்கள் ரத்தம் சிந்தும் அரசியலைத் தொடர்ந்து நடத்தி ஆக்கிரமிப்பாளர்களை விரட்டுவதைத் தவிர வேறு வழிஇல்லை!

மக்கள் திரள் படுகொலைகள், கற்பழிப்புகள், ஒரு இனத்துக்கு எதிராக மற்றொரு இனத்தைத் தூண்டுவது - ஓரின மக்களையே பிரித்து மோதவிடுவது ஆகியவற்றினால் மனித இரத்தம் குடிப்பது -எல்லா ஆக்கிரமிப்பாளர்களுக்கும் உரிய இதே காரியங்களை இந்திய இராணுவமும் ஈழத்திலே அன்றாடம் செய்து வருகிறது. சிங்கள இனவெறி இராணுவமும், ஈழத்தமிழ் துரோகிகளும் இந்த அக்கிரமங்களுக்கு உடந்தையாக இருந்து பங்கேற்கின்றன. இதோ இன்னும் சில சான்றுகள்:

**மக்கள் திரள் படுகொலையில் ஆக்கிரமிப்பாளர்களும் துரோகிகளும்**

இந்திய இராணுவத்தின் தூண்டுதலினால் துரோகிகளான ஈ.பி.ஆர்.எல்.எஃப் படையினர் கார்வெடிகுண்டு வைத்து 45 சிவிலியன்களைத் திரிகோணமலையிலே கொன்றது.

''கடந்த காலத்தில் செய்ததைப் போல இதுவும் புலிகளின் நடவடிக்கை; தமிழர் மாநில அதிகாரப் பகிர்வில் இருந்து திசை திருப்பவும், புலிகளுடன் நடத்திவரும் சமாதான பேரத்துக்காகவும் எங்கள் மீது பழி போடுகிறார்கள்'' என்று ஈ.பி.ஆர்.எல்.எஃப். மறுத்தது.

திரிகோணமலை கார் வெடிகுண்டு சம்பவத்துக்கும் தமக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என ஏப்ரல் 14ம் தேதி அறிக்கை மூலம் திட்டவட்டமாகப் புலிகள் மறுத்துவிட்டனர்.

அதன்பிறகு நடத்திய தாக்குதலில் (ஏப்ரல் 17) 21 சிங்கள இராணுவத்தினரைப் புலிகள் கொன்று நிறைய ஆயுதங்களைப் பறிமுதல் செய்துள்ளனர்; முஸ்லீம்களை சிங்கள இராணுவத்தினர் கொல்வதையும், சிங்களக் குடியேற்றத்தையும் அம்பலப்படுத்தியுள்ளனர். ஏப்ரல் 14ம் தேதி நடந்த யாழ் வெடிகுண்டு சம்பவம் -விபத்தின் காரணமாக நடந்தது என்றும் இறந்துபோன பொதுமக்களுக்கு அனுதாபமும், தமது தோழர்களுக்கு அஞ்சலியும் செலுத்தியும் அதை ஒப்புக்கொண்டுள்ளனர். எனவே திரிகோணமலை கார் குண்டு வெடிப்பு ஈழத் துரோகிகளின் செயலென்றே நம்பிட முடியும்.

ஏப்ரல் பத்தாம் தேதி சூரன்கல், பனிச்சங்குளம், கச்சைக் கொடித்தீவு, பூவரசத் தீவு, காக்கா முனை போன்ற பல கிராமங்களில் புகுந்து இந்திய இராணுவம் சூறையாடியது. இதனால் 3,303 முஸ்லீம் குடும்பங்கள் ஆயிலிப்பு, வானாறு போன்ற இடங்களுக்கு அகதிகளாகச் சென்றுள்ளனர். இத்தாக்குதல்களில் 20க்கும் மேற்பட்ட முஸ்லீம்கள் கொல்லப்பட்டனர். வெளியோயா அருகே புல்மோட்டை கிராமத்தில் சிங்கள இராணுவம் மிதி கண்ணிவெடி வைத்து முகமது குஞ்சன், லுருசிப் இஸ்மாயில் ஆகிய இரு இளைஞர்கள் கொல்லப்பட்டனர். இன்னொரு முஸ்லீம் இளைஞனை சுட்டுக் கொன்றனர். பலர் படுகாயமுற்றனர்.

**ஆக்கிரமிப்புப் படையும் துரோகக் கும்பலும்**

மக்கள் திரள் படுகொலைகளோடு கற்பழிப்புகளிலும் ஆக்கிரமிப்புப் படையினர் தொடர்வதற்கு இன்னும் சில சான்றுகள் வந்துள்ளன. ஏப்ரல் மூன்றாம் வாரம் முல்லைத்தீவு மாவட்டம் தங்கபுரம் மீனவர் கிராமத்தின் மீதும் பீடி படகுகள் மீதும் இந்திய இராணுவ ஹெலிகாப்டர்கள் தாக்கின. துப்பாக்கிகளால் சுட்டு 'ஷெல்' குண்டுகளை வீசினர். இத்தாக்குதலில் தம்பிராஜா தயாநிதி என்ற பெண் கொல்லப்பட்டார். பலர் படுகாயமுற்றனர். தப்பியோடிய கிராம மக்களை நோக்கி அலம்பில் இராணுவ முகாமில் இருந்து இந்திய ஆக்கிரமிப்புப் படையினர் சுட்டனர். பலியானவர்களின் விவரம் தெரியவில்லை.

இந்திய இராணுவத்தின் இத்தகைய அட்டூழியங்களுக்கு உதவவே மக்கள் தொண்டர் படை அமைக்கப்படுகிறது. பண ஆசை காட்டியும், பலவந்தமாகவும் ஈழ இளைஞர்கள் தொண்டர் படையிலே சேர்க்கப்படுகின்றனர். பொதுமக்களை அடித்தும், துன்புறுத்தியும், கொலை செய்தும், தமிழ்ப் பெண்களைக் கடத்திச் சென்று இந்திய உயர் அதிகாரிகள் கற்பழிக்கக் கொடுப்பதும் என்ற வெட்கக்கேடான இழிசெயல்களுக்கு இவர்கள் பயன்படுத்தப் படுகிறார்கள்.

மார்ச்சு 30ம் தேதி கிளிநொச்சி மாவட்டம் தர்மபுரம் என்ற இடத்தில் ஜீவராணி என்ற 17 வயது பள்ளி மாணவியை வீட்டிலிருந்து இராணுவ முகாமுக்குக் கடத்திப் போய்விட்டனர். ஏப்ரல் 6ம் தேதி சோதனை இடுவதாகக் கூறி பேருந்து ஒன்றை நிறுத்தி இரு இளம் பெண்களை இழுத்துப்போக முயன்றனர். அவர்களைத் தப்புவித்த டிரைவரை வீடுபுகுந்து 'மக்கள் தொண்டர் படையினர்' கொன்றனர். நகரக் கடைவீதிகளில் சைக்கிளில் போகும் சிறுமிகள் மீது இராணுவ வாகனத்தைக் கொண்டு மோதி, கீழே தள்ளிவிட்டு மருத்துவமனைக்குக் கூட்டிப் போவதாகக் கூறிக் கடத்திப்போய் கற்பழிப்பதும் பலமுறை நடந்துள்ளது.

ஈழத்திலே ஆக்கிரமிப்பு அக்கிரமங்களைத் தொடர்வதன் மூலம் இந்திய இராணுவம் நீடிப்பதை நியாயப்படுத்த இந்திய அரசு முயலுகிறது. அதற்காக தனது கைக்கூலிகளும் ஈழ துரோகிகளுமான கும்பல்களை விட்டு, ''இந்திய அமைதிப்படை இருப்பதனால் தான் தமிழர்களுக்கு பாதுகாப்பு கிடைத்துள்ளது. நிம்மதியான அமைதியான புனர்வாழ்வளிக்கிறோம். எனவே இந்தியப் படை விலகக் கூடாது'' என்று அறிக்கைகள் விடுகிறார்கள். ஆனால் ஆக்கிரமிப்புப் படை ஈழத்தில் இருக்கும் ஒவ்வொரு நாளும் ஈழ மக்களின் துயரங்களே அதிகரிக்கின்றன என்பதை மேற்கண்ட சான்றுகள் கூறுகின்றன.

படிப்பகம்

www.padippakam.com


**புதிய ஜனநாயகம்**

மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு

நான்காமாண்டு

12

1- 15 மே '89

உள்நாடு

தனி இதழ் : ரூ.1.50

ஆண்டு சந்தா : ரூ.36

வெளிநாடுகள் (வான் அஞ்சலில்)

ஆண்டு சந்தா : U S $ 11

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்

எஸ். மதியழகன்
ஆசிரியர், 'புதிய ஜனநாயகம்'
21, பாலாஜிசிங் தெரு
சைதாப் பேட்டை
சென்னை-600 015.


# பாசிஸ்டுகளின் ஆயுதமாகும் பஞ்சாயத்துக்கள்

பஞ்சாயத்து 'ஆட்சி' அமைப்பு முறையில் சில முக்கியமான மாற்றங்களைக் கொண்டு வருவதற்கான தயாரிப்பிலே ஈடுபட்டிருக்கிறது பாசிச ராஜீவ் கும்பலின் அரசு. ஜனநாயக அமைப்பை வலுப்படுத்துவது; அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பது; வளர்ச்சிப் பணிகளில் அடிமட்ட மக்களைப் பங்கேற்க வைப்பது; கீழ் மட்டத்திலிருந்து திட்டமிட்டு அமுலாக்குவது; கடைசியாக, காந்தி கனவு கண்ட கிராம ராஜ்ஜியத்தை நிர்மாணிப்பது; தாழ்த்தப்பட்டவர்கள், மலைவாழ் மக்கள், பெண்கள் ஆகிய நலிவடைந்த பிரிவினருக்கு உரிய இடமளிப்பது என்றெல்லாம் அடிக்கடி பேசுகிறார் பாசிச ராஜீவ்.

பஞ்சாயத்துக்களை உயிர்ப்பித்து, அதற்கு நேரடி அதிகாரங்களை வழங்குவதாகக் கூறுகிறார். இதற்காக வடமாநிலங்களின் பஞ்சாயத்து மாநாட்டை டெல்லியிலும், கிழக்கு -வடகிழக்கு மாநிலங்களின் பஞ்சாயத்து மாநாட்டை கல்கத்தாவிலும், தென் மாநிலங்களின் பஞ்சாயத்து மாநாட்டை பெங்களூரிலும் கூட்டி பிரதமரே உரையாற்றினார். கல்கத்தா மாநாட்டைத் தாமே நடத்தி ஒத்துழைத்த எதிர்த் தரப்பினர் கர்நாடக ஆட்சிக் கவிழ்ப்பைக் கண்டித்து பெங்களூர் மாநாட்டைப் புறக்கணித்து விட்டனர்; இன்னும் மேற்கு மாநிலங்களின் பஞ்சாயத்து மாநாட்டை கூட்ட இருக்கிறார்கள்.

பஞ்சாயத்து மாநாடுகளுக்கு முன்னோடியாக மாவட்டக் கலெக்டர்கள், நீதிபதிகளின் மாநாடுகளைக் கூட்டியும் ராஜீவ் உரையாற்றினார். ராஜீவ் அரசின் இந்த முயற்சிகள் மாநில அரசுகளின் அதிகார உரிமைகளைப் பறிப்பவையென ஏற்கனவே எதிர்க் கட்சியினர் அச்சம் தெரிவித்தனர். அது உண்மைதான் என்பதை இப்போது பிரதமர் மறைமுகமாக ஒப்புக்கொண்டுள்ளார். அதாவது விரைவிலேயே பஞ்சாயத்துக்கள் பற்றி வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சட்டம் ஒன்றை நிறைவேற்றப்போவதாகவும், பஞ்சாயத்துக்களை இயக்கும் - மேற்பார்வையிடும் உரிமை மத்திய அரசின் அதிகாரப்பட்டியலில் வரவேண்டும் என்றும் பகிரங்கமாகவே அறிவித்துள்ளார். புதிய கல்வி்க்கொள்கை, சுற்றுச் சூழல் பாதுகாப்பு போன்றவைகளைக் காட்டி மாநிலங்களின் அதிகார உரிமைகளைப் பறித்துக்கொண்டதைப் போலவே, பஞ்சாயத்துக்களை சீரமைப்பது என்கிற பெயரில் இதே வேலையைச் செய்கிறது. மலட்டுத்தனமான எதிர்ப்போடு எதிர்க்கட்சிகளும் அதை ஏற்றுக்கொள்ளும் நிலையிலேயே உள்ளன.

காலனிய ஆட்சிக்கு எதிராகக் குமுறிக் கொண்டிருந்த இந்திய மக்களை ஏய்க்கவும், உள்ளூர் நிலப்பிரபுக்கள், ஜமீன்தார்கள், மிட்டா மிராசுகளுக்கும், தரகு முதலாளிகளுக்கும் பதவிகள் கொடுக்கவும், கிராம - நகர மக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து தரவேண்டிய பொறுப்புக்களைத் தட்டிகழிக்கவும் ஆங்கிலேயக் காலனி ஆட்சியாளர்கள் திணித்ததுதான் பஞ்சாயத்து - உள்ளூராட்சி அமைப்புமுறை. அதைக் கொண்டு வந்ததற்காக, ''ரிப்பன் எங்கள் அப்பன்'' என்று இன்னமும் வெட்கமின்றி நமது பள்ளிப் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்கிறார்கள். இன்று நாம் காணும் நாடாளுமன்ற - சட்டமன்ற அராஜகம், ஆபாசம், ரௌடித்தனம் ஆகிய அனைத்துக்குமான அறிமுகமேடையாக விளங்கியவை உள்ளூராட்சி அமைப்புகள்தான்! பஞ்சாயத்து தேர்தல்கள் ஜாதி-மத அடிப்படையில் நடப்பதும், உறுப்பினர்களை அண்டை மாநில நகர ஆடம்பர விடுதிகளுக்குக் கடத்திப் பணம், பெண், சாராயம் ஆகிய போதையில் மிதக்கவிட்டு பேரம் பேசுவதும், பதவிகளைப் பிடிப்பதும், கவிழ்ப்பதும் துவங்கிய இடமே பஞ்சாயத்துக்கள்தாம்!

மாநில, மத்திய அளவிலான ஒட்டுக்கட்சி அரசியல் தலைவர்களின் பயிற்சிக் களமாகவும், அவர்களின் பினாமிகள் மற்றும் உள்ளூர் பிழைப்புவாத அரசியல் பிரமுகர்களுக்கு வீசி எறியப்படும் அதிகார சன்மானமாகவும் இப்போது பஞ்சாயத்துக்கள் உள்ளன. விதிவிலக்கான முறையிலே சில கிராமப் பஞ்சாயத்துக்களில் உள்ளூர் சீர்திருத்தவாதிகள் தலைமைக்கு வருகிறார்கள்.

இப்போது பெரும்பான்மையான மாநிலங்களில் மூன்று மட்டங்களிலான உள்ளூராட்சி அமைப்புகள் உள்ளன. கிராமப் பஞ்சாயத்துகள், மண்டல மற்றும் மாவட்ட வாரியங்கள். சமீபகாலம்வரை அதன் தலைவர்கள் உறுப்பினர்களால் மறைமுகத் தேர்தல் மூலம் - தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இப்போது நேரடித் தேர்தல்கள் நடைபெறுகின்றன. தமிழ் நாட்டில் மண்டல வாரியங்களுக்குப் பதில் பஞ்சாயத்து ஒன்றியங்களும், மாவட்ட வாரியங்கள் ஒழிக்கப்பட்டு எம்.எல்.ஏ., எம்.பி.க்கள், ஒன்றியத் தலைவர்களை ஆலோசனையாளர்களாக மட்டுமே கொண்ட மாவட்ட வளர்ச்சிக் குழுக்களும் உள்ளது. ஆனால் இந்த உள்ளூராட்சி அமைப்புகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட ''மக்கள் பிரதிநிதி''களுக்கு எங்குமே நிர்வாக உரிமை கிடையாது. கிராம பஞ்சாயத்து - ஒன்றிய ஆணையாளர்கள், மண்டல வளர்ச்சி அதிகாரி மற்றும் மாவட்ட நிர்வாக நீதிபதி ஆகியோருக்கு மட்டுமே நிர்வாக - அமுலாக்க அதிகாரம் உண்டு.

பலமாநிலங்களில் பல ஆண்டுகள் இந்த அமைப்புகளுக்கும் தேர்தல்கள் நடத்தப்படாமல் அதிகாரிகளைக் கொண்டு மாநில அரசுகளே நேரடியாக இயக்கின. எதிர்க்கட்சிகள் ஆட்சிக்கு வந்த பிறகு சில மாநிலங்களிலும் அதன் விளைவாக காங்கிரசு ஆளும் மாநிலங்களிலும் தோதல்கள் நடந்தன. இந்த ஆண்டு நடத்த வேண்டிய பொதுத் தேர்தல்களைத் தள்ளி வைக்கவோ, தவிர்க்க முடியாமல் நடத்த வேண்டி வந்தாலோ தனது நேரடி அதிகாரத்தின் கீழுள்ள பஞ்சாயத்துத் தலைமையை உருவாக்கிக்கொள்வது வசதியாக இருக்குமென பாசிச ராஜீவ் கும்பல் கருதுகிறது. எதிர்க்கட்சியினர் மற்றும் தனது கட்சிக்குள்ளாகவே அதிருப்தியாளர்களின் பிடியில் உள்ள மாநில அரசுகளைத் தாண்டிச் சென்று நேரடி நிர்வாக அமைப்பு முறை இருப்பது அதற்கு அவசியமாக உள்ளது. எனவே தான் இந்தப் பஞ்சாயத்துச் சீர்திருத்தம்.

படிப்பகம்

www.padippakam.com

தலையங்கம் தொடர்ச்சி....

பஞ்சாயத்து அமைப்பு முறை நிர்வாகத்தில் போலிக் கம்யூனிஸ்டுகள் ஆளும் மேற்கு வங்கத்தைப் பாராட்டும் ராஜீவ் அதை ஒரு முன்மாதிரி என்கிறார். அங்கு உள்ளூராட்சித் தலைவர்களைத் தலைவராகவும் அரசு அதிகாரிகளைச் செயலாளராகவும் கொண்ட வளர்ச்சிக் குழுக்களிடம் தான் முடிவெடுக்கும் அதிகாரம் உள்ளது. செயலாளர் என்கிற முறையில் அதிகாரிகளிடம் தான் நிர்வாக அதிகாரம் உள்ளது. மக்கள் பிரதிநிதிகளுக்கு ஆலோசனை கூறும் உரிமை மட்டும்தான்! இப்படிப்பட்ட அதிகாரவர்க்க அரசின் ஒரு பகுதியிடம் சில சில்லறை உரிமைகளைக் கொடுத்துவிட்டு, அதையும் மத்திய அரசே இயக்கும் அதிகாரத்தைப் பறித்துக்கொள்வதுதான் அதிகாரப் பகிர்வாம்! ஜனநாயகத்தை வலுப்படுத்துவதாம்! மக்கள் பங்கேற்பாம்! அத்தனையும் மோசடி!

நிலம் உட்பட நிலப்பிரபுக்கள், கோயில் - மடங்கள், பண்ணைமுதலாளிகளின் அனைத்துச் சொத்துக்களையும் பறிமுதல் செய்து கூலி ஏழை விவசாயிகளிடம் பகிர்ந்தளிப்பது; பரந்துபட்ட மக்களின் கிராமப் புரட்சிக் கமிட்டிகளே அனைத்து நிர்வாக அதிகார உரிமைகளையும் பெறுவது என்கிற புரட்சிகர மாற்றம்தான் மக்களிடம் அதிகாரம் வருவதைக் குறிக்கும். மற்றபடி ஆளும் வர்க்கங்கள் கொண்டுவரும் சீர்திருத்தங்கள் மக்கள் அதிகாரத்தைக் கைப்பற்றுவதைத் தடுப்பதற்கான முயற்சிகள்தாம்!



பெங்களூரில் பஞ்சாயத்து மாநாடு: எதிர்க்கட்சிகள் புறக்கணிப்பு! காலியான நாற்காலிகள்; துப்புரவுப் பணியாளர் பங்கேற்பு.

# லஞ்ச ஊழல் ஓட்டுப்பொறுக்கிகளின் சட்டபூர்வ - மரபுவழி உரிமையாகிறது

உலகிலேயே மிகப்பெரிய, மகா குழப்பமான அரசியல் கொண்டது என்ற பெருமைக்குரியது இந்தியா. பொதுமக்கள் ஊழியர் என்று சொல்லிக் கொள்ளும் அரசியல் தலைவர்கள் குறிப்பாக அரசாங்கத்தை நடத்திச் செல்பவர்களின் நடத்தைகளை, கடமைகள், உரிமைகள், அதிகாரங்களை சட்டபூர்வமாக வரையறுக்கிறது, அரசியல் நிர்ணய சட்டம். அதுமட்டுமின்றி ஏராளமான மரபுகளை அவர்களாகவே வகுத்துக் கொண்டிருந்தார்கள். பொதுமக்கள் ஊழியர்கள் லஞ்ச ஊழல்களில் ஈடுபடுவது தண்டனைக்குரிய கிரிமினல் குற்றமாகும் என்று அது கூறுகிறது. லஞ்ச ஊழல்களில் ஈடுபடுவது வெறுக்கத்தக்க சமூகவிரோத இழிசெயல் என்கிற பாசாங்குத் தனமான மரபாவது இருந்தது.

''இனிமேல் லஞ்ச ஊழல் சட்டபூர்வமாகலாம்; குறைந்தபட்சம் அது அரசியல் தலைவர்களின் அதிகார உரிமை என்கிற மரபாகவாவது ஏற்றுக் கொள்ளப்படும்'' என்று மாண்புமிகு சர்வகட்சித் தலைவர்களும் அறிவித்திருக்கிறார்கள். இது ஏதோ மிகைப்படுத்தப்பட்ட செய்தியோ, அவதூறோ, கிசுகிசுவோ அல்ல. ஆதாரபூர்வமானது: தமிழக முதல்வர் கருணாநிதிதான் லஞ்ச ஊழலை சட்டமாகவோ, மரபாகவோ அரசியல் தலைவர்களின் அதிகார உரிமையாக்கும் பெரும்பணியைத் தலைமையேற்று செயல்படுத்துகிறார்.

சமீபத்திய தமிழக சட்டமன்றப் பொதுத் தேர்தல் வரை ஓராண்டுகாலம் ஓட்டுக் கட்சித் தலைவர்களின் லஞ்ச ஊழல் எக்கச்சக்கமாக அம்பலமாகி தமிழகமே நாறியது. புனிதர், புத்தர் என்று நடித்து, ஆட்சி நடத்தி மாண்டுபோன பாசிச எம்.ஜி.ஆர். கோடிகோடியாகக் கொள்ளையடித்தார். அவரது மனைவி ஜானகி சாக்கு மூட்டைகளிலே பணத்தை அள்ளிக் கொண்டுபோய் பதுக்கினார் மந்திரி திருநாவுக்கரசு அடுக்குமாடிக்கட்டி உரிமை வழங்கியதில் ஏழு கோடி லஞ்சம் வாங்கினார். மந்திரி முத்துசாமியின் தந்தையுடைய சமாதியிலே 32 கோடி ரூபாய் புதைத்து வைக்கப்பட்டுள்ளது - இப்படி ஏராளமான புகார்கள், குற்றச்சாட்டுகள்.

4000 ஏக்கர் நிலத்தை பினாமிச் சட்டம் வருமுன் மூப்பனார் அமுக்கிக் கொண்டார். இரும்புப் பெட்டிகளிலே 15 கோடி ரூபாய் கொண்டுவந்து கவர்னர் மாளிகையில் வைத்து காங்கிரசு தேர்தலுக்குச் செலவிட்டது. வி.பி.சிங்கிடம் பல கோடி ரூபாய் வாங்கிய கருணாநிதியின் லஞ்ச ஊழல் சர்க்காரியா கமிஷனிலேயே நிரூபிக்கப்பட்டுவிட்டது. சாராய முதலாளி விஜய் மல்லையா, துணிவியாபாரி கௌதம் சேட்டு சினிமா முதலாளி ஜீ.வி. போன்றவர்களிடம் பல் கோடி ஜெயலலிதா வாங்கினார்.

- இவை அனைத்தும் தேர்தல் காலத்தில் வெளிவந்த இரகசியங்கள் தூய்மையான - லஞ்ச ஊழலற்ற ஆட்சி அமைப்போம் என்று எல்லாக் கட்சிகளுமே வாக்களித்தன. தேர்தலில் வைக்கப்பட்ட அடையாள மை அழியும் முன்னமே ''தூய்மையான ஆட்சி'' என்ற வாக்குறுதியை அழித்துவிட்டன ஓட்டுக் கட்சிகள்.

மருங்காபுரி, மதுரைக் கிழக்கு இடைத் தேர்தல்கள் சட்டமன்ற ரௌடித்தனங்கள் என்று அவசியமான போது மட்டுமே முந்தைய ஆட்சியின் ஊழல்களை அவிழ்த்துவிட்டார் கருணாநிதி. அவ்வளவுதான்! இறந்துபோன தலைவரை - எம்.ஜி.ஆரை - பழிசொல்லி அவரது புகழை மாசுபடுத்துவதாகப் பத்திரிகைகள் ஓலமிட்டன. ஊழல் குற்றச்சாட்டுகள் எல்லாம் அரசியல் உள்நோக்கமுடையவை என்று திடலடியாக அடித்தார் ''வெண்ணிறஆடை'' கதாநாயகி ஜெயலலிதா. சட்டமன்ற ரௌடித்தனத்தால் தனிமைப்பட்டு பீதியடைந்த கருணாநிதி முன்னாள் மந்திரிகளின் ஊழல்களை ஒவ்வொன்றாக எடுத்துவிட்டார். அரசியல் ரீதியில் சந்திக்க முடியாத ஆளுங்கட்சியின் அவதூறுகள் என்றார் எதிர்க்கட்சித் தலைவர்.

கடைசியாக, ஆதாரமிருந்தால் விசாரணை வையுங்கள் தண்டனையை ஏற்கத் தயார் என்று எதிர்க்கட்சியினர் சவால்விட்டனர். கருணாநிதி அப்படிச் செய்யமாட்டார் என்று அவர்களுக்கும் தெரியும். ஏனென்றால் அவரது முந்தைய ஆட்சி ஊழல்களை எடுத்துவிடத் தயாராக இருந்தனர், எதிர்க்கட்சியினர்.

ஆகவே, பின்வாங்கிக் கொண்ட கருணாநிதி, ''ஊழல் செய்தவர்களைத் தண்டிக்கத் தேவையில்லை. அதைப்பற்றி சட்டமன்றத்தில் பேசினாலே போதும்; அப்படிப் பேசிவாதிப்பதே தண்டனைதான் என்று அண்ணாவே கூறியிருக்கிறார்'' என்று தெளிவுபடுத்திவிட்டார்.

தி.மு.க.வின் முதல் தவணை ஆட்சியிலே (1967-75) லஞ்ச ஊழலை சமூக மயமாக்கினார்கள். அதாவது அதற்கு முன்பு காங்கிரசு ஆட்சியிலே லஞ்ச ஊழல்கள் பெருந்தலைவர்களின் உரிமையாக இருந்தது. தி.மு.க. ஆட்சியிலே கீழ்மட்ட உடன்பிறப்புகளுக்கும் அந்த உரிமையைப் பகிர்ந்து கொடுத்துப் பரப்பினார்கள்; ''தேனழித்தவன் புறங்கையை நக்கத்தான் செய்வான்'' என்று அதை நியாயப்படுத்தினார்கள். இப்போது இரண்டாவது தவணை ஆட்சியிலே லஞ்ச ஊழலைக் காந்தீய மயமாக்குகிறார், கருணாநிதி. ''லஞ்ச ஊழல் குற்றத்துக்காகத் தண்டிக்க வேண்டியதில்லை; சட்டமன்றத்தில் பேசினாலேயே அவமானப்பட்டு ஊழல் செய்ய மாட்டார்கள்'' என்று காந்தீய போதனை அளிக்கிறார்.

வெட்கம், மானம், ரோஷம் போன்ற அனைத்தையும் உதிர்த்துவிட்ட சமூக கிரிமினல் குற்றங்களுக்கு அஞ்சாத பிழைப்புவாதிகள் தான் அரசியல் தலைவர்களும் பிரமுகர்களும். லஞ்ச ஊழல் பற்றிப் பேசுவதை அவர்களுடைய தடித்த தோலை ஒன்றும் செய்துவிடாது. எனவே கருணாநிதி கண்டுபிடித்துள்ள காந்தீய வழி உண்மையில் லஞ்ச ஊழலை சட்டபூர்வமாகவோ, மரபுவழியாகவோ அங்கீகரிப்பதுதான். இறந்துபோனவர்களின் லஞ்ச ஊழல் பற்றிப் பேசுவது நாகரீகமாகாது என்றும் மாற்றுக்கட்சிகளின் லஞ்சஊழல் பற்றி பேசுவதே அரசியல் நோக்கத்துக்குத் தான் என நிராகரித்தும் எதிர்க்கட்சிகளும் அதையே செய்கிறார்கள். ஆகவேதான் கூறுகிறோம், இனிமேல் லஞ்ச ஊழல்கள் சட்டபூர்வமாகிவிடும் அல்லது குறைந்தபட்சம் மரபுவழி உரிமையாகிவிடும்.

படிப்பகம்

www.padippakam.com

முதலாளித்துவ நரகத்தை நோக்கி நாலுகால் பாய்ச்சல்!

# போலி சோசலிச நாடுகளின் சிவப்புச்சாயம் வெளுக்கிறது

நவீன திரிபுவாதிகளின் குருபீடங்களான ரஷியாவிலும் சீனாவிலும் மீண்டும் கலகங்களும்போராட்டங்களும்வெடித்துப் பரவுகின்றன. ஏறத்தாழ ஒன்றரை ஆண்டுகளுக்குமுன் சீனாவில் முதலாளித்துவ ஜனநாயகத்துக்காக துவங்கிய மாணவர்களின் போராட்டம், இப்போது மீண்டும் தீவிரமாகியுள்ளது. ஏற்கனவே அர்மீனியக் கலவரத்தாலும் உள்நாட்டு உணவுப் பஞ்சத்தாலும் விழிபிதுங்கி நிற்கும் ரஷியாவின் கோர்ப்பசேவ் கும்பல், இப்போதைய ஜார்ஜிய தேசிய இன மக்களின் போராட்டத்தைக் கண்டு அரண்டு போய் நிற்கிறது.

ஜார்ஜியா. ரஷியாவின் தெற்கே கருங்கடலை ஒட்டியுள்ள மாநிலம். அர்மீனியாவைப் போலவே அதன் அண்டை மாநிலமான ஜார்ஜியாவிலும் கடந்த ஏப்ரல் மாதம் முதலாக தேசிய இனக்கலகம் தீவிரமாகி வருகிறது. "ஜார்ஜியாவுக்குச் சுதந்திரம் கொடு! அழுகிப்போன ரஷிய சாம்ராஜ்ஜியவாதிகள் ஒழிக!" என்ற முழக்கங்களுடன் ரஷியக் குடியரசிலிருந்து பிரிவினையைக் கோரி ஜார்ஜிய தேசிய இன மக்கள் பல பத்தாயிரக் கணக்கில் வீதிகளில் திரண்டு ஆர்ப்பாட்டங்களை நடத்திவந்தனர். ஜார்ஜிய தேசிய ஜனநாயகக் கட்சி, தேசிய சுதந்திரக்கட்சி என்று பல குழுக்களின் தலைமையில் திரண்டு போராடும் இம்மக்களின் கோரிக்கைகளை ஏற்க மறுக்கும் கோர்ப்பசேவ் கும்பல் அடக்குமுறையை ஏவிவிட்டது. வீதிகளில் பத்தாயிரக்கணக்கில் திரண்டு ஆர்ப்பாட்டம் செய்யும் மக்களை விரட்ட ராணுவக்கவச வண்டிகளை மக்கள் கூட்டத்தினுள் செலுத்தினர். இதனால் நூற்றுக்கணக்கான மக்கள் படுகாயமுற்றனர். இருநூறுக்கும் மேற்பட்ட முன்னணியாளர்கள் கைது செய்யப்பட்டனர். ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. ஆனாலும் போராட்டம் ஓயவில்லை.

ஆத்திரமடைந்த கோர்ப்பசேவ் கும்பல், ஒரு யுத்தத்தை நடத்துவது போல ஏராளமான துருப்புக்களையும் டாங்கிகளையும் கொண்டுவந்து குவித்து அடக்கு முறையை ஏவிவிட்டது. ஆனால் ஜார்ஜிய மக்கள், அரசு விசுவாச ஊழியர்களையும், ராணுவ வீரர்களையும் வீதிகளில் அவமானப்படுத்தியும், ராணுவம் முன்னேறாதபடி மறியலில் இறங்கியும் போராட்டத்தைத் தீவிரப்படுத்தினர். கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்யக்கோரி பத்தாயிரக்கணக்கில் ஜார்ஜிய மக்கள் தலைநகர் திபில்சியில் திரண்டு ஆர்ப்பாட்டம் செய்தபோது கொலைவெறி பிடித்த ரஷியக் கொடுங்கோலர்கள் போராடும் மக்கள் மீது நச்சுவாயுவைச் செலுத்தினர்.

பாசிச சர்வாதிகாரி இட்லர் கூட போராடும் மக்கள் மீது இத்தகைய அடக்குமுறையை ஏவியதில்லை. சோசலிசத்தையும் ஜனநாயகத்தையும் உதட்டளவில் உச்சரிக்கும் சிவப்புச்சாயம் பூசிய ரஷியாவில் புதிய ஜார்கள், இட்லரையும் விஞ்சிவிட்டார்கள். இக்காட்டுமிராண்டித் தனத்தால் 20க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதாக ஜார்ஜிய 'கம்யூனிஸ்ட்' கட்சிச் செயலாளரே ஒப்புக் கொண்டுள்ளார். "இல்லை, கைக்குழந்தைகளுடன் தாய்மார்கள் உட்பட நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டுள்ளனர்" என்று இருவார கால தடைக்குப்பிறகு அப்பகுதிக்குச் சென்று வெளிநாட்டு பத்திரிகை நிருபர்கள் உறுதிப்படுத்துகின்றனர். 600க்கும் மேற்பட்டோர் விஷவாயுத் தாக்குதலால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் உயிருக்குப் போராடுவதாகக் கூறுகின்றனர்.

மனிதகுல வரலாற்றில் இதுவரை கண்டிராத அளவுக்கு கொடிய அடக்குமுறையை ஏவியபோதிலும் ஜார்ஜிய மக்கள் தமது போராட்டத்தைக் கைவிட்டுவிடவில்லை. விஷவாயுத் தாக்குதலில் மாண்டவர்களின் நினைவாக நிறுவப்பட்ட நினைவுச்சின்னத்துக்கு அருகே அன்றாடம் ஆயிரக்கணக்கில் மக்கள் திரண்டு அஞ்சலி செலுத்திவிட்டு ஆர்ப்பாட்டத்தைத் தொடுக்கின்றனர்.

உள்நாட்டில் தீராத உணவுப் பஞ்ச நெருக்கடியில் சிக்கிக் கொண்டுள்ள கோர்ப்பசேவ் கும்பலுக்கு பெரும் தலைவலியாக இப்போது தேசிய இனங்களின் போராட்டங்கள் பெருகிவிட்டன. அர்மீனியா, ஜார்ஜியா மட்டுமின்றி மால்டவியா, லிதுவேனியா, எஸ்டோனியா என்று பல தேசிய இனங்களும் போராட்டத்தில் இறங்கிவிட்டன. ஒருபுறம், கோர்ப்பசேவ் கும்பலால் கட்சியிலிருந்தும் ஆட்சியிலிருந்தும் கழித்துக்கட்டப்பட்ட பிரஷ்னேவ் கும்பலைச் சேர்ந்தவர்கள் தமது இழந்த சொர்க்கத்தை மீட்க இப்போராட்டங்களின் தலைமையைக் கைப்பற்றி கண்ணில் விரலைவிட்டு ஆட்டுகின்றனர்.



படிப்பகம்

மறுபுறம் அப்பட்டமான முதலாளித்துவ ஆட்சியை நிறுவ கோர்ப்பசேவின் 'கிளாஸ்நாஸ்ட்' -சுதந்திரக் கொள்கையைப் பயன்படுத்திக் கொண்டு முதலாளித்துவ சக்திகள் இப்போராட்டங்களை உசுப்பிவிட்டு பல கட்சி 'ஜனநாயக' ஆட்சிமுறையைக் கோருகின்றன.

மையப் படுத்தப்பட்ட அதிகாரவர்க்க ஆட்சிமுறையைத் தக்கவைத்துக் கொண்டு முதலாளித்துவ சீர்திருத்தங்கள் மூலம் உள்நாட்டு பொருளாதார நெருக்கடிகளைத் தீர்த்து, உலக மேலாதிக்கப் போட்டியில் அமெரிக்காவை விஞ்சத் துடிக்கிறது கோர்ப்பசேவ் கும்பல். ஆனால் பெருகிவரும் புதிய நெருக்கடிகளில் சிக்கிக் கொண்டு ஆப்பசைத்த குரங்காக அலறுகிறது. "குடிகார பிரஷ்னேவின் கேடுகெட்ட ஆட்சிமுறை தான் இன்றைய நெருக்கடிகளுக்குக் காரணம்" என்று பழியை பிரஷ்னேவ் கும்பல் மீது போட்டுவிட்டு தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறது. பிரஷ்னேவ் கும்பலுக்கு எதிராக நடத்திவரும் ஆட்சிக் கவிழ்ப்பு யுத்தத்தின் அடுத்த தாக்குதலாக, சமீபத்தில் நூற்றுக்கணக்கான பிரஷ்னேவ் விசுவாசிகளை கட்சியிலிருந்தும் ஆட்சியிலிருந்தும் வெளியேற்றியுள்ளது கோர்ப்பசேவ் கும்பல்.

பெருகிவரும் நெருக்கடிகள் 'சீர்திருத்தச் செம்மல்' கோர்ப்பசேவின் கொள்கைகளை புஸ்வாணமாக்கிவிட்டது. அண்மையில் நடந்த பொதுத் தேர்தலில் அதிகாரபூர்வ 'கம்யூனிஸ்ட்' கட்சி வேட்பாளர்கள் படுதோல்வியடைந்து, கட்சிசாராத சுயேட்சைகளான முதலாளித்துவ ஆதரவாளர்கள் பெருமளவில் வெற்றி பெற்றிருப்பதும், பல கட்சி ஆட்சிமுறை - கூடுதல் ஜனநாயகத்துக்கான கோரிக்கைகள் வலுப்பெற்று வருவதும், மக்கள் மீதான அடக்குமுறைக்கு எதிராகவும், கோர்ப்பசேவ் கும்பலின் மனித உரிமை மீறல்களுக்கு எதிராகவும் ஆர்ப்பாட்டங்கள் பெருகுவதும் முதலாளித்துவ சக்திகளின் வளர்ச்சியையும் செல்வாக்கையும் தெளிவாகவே நிரூபித்துக் காட்டுகின்றன. விழிபிதுங்கி நிற்கும் கோர்ப்பச்சேவ் கும்பல் வேறுவழி தெரியாமல் இன்னும் கூடுதலாக முதலாளித்துவத்தைத் திறந்து விடுவதை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது.

☆ ☆ ☆

ரஷியாவைப் போலவே, இப்போது சீனாவில் மாணவர்களது போராட்டங்கள் தீவிரமடைந்து ஆளும் டெங்கும்பலை அச்சுறுத்துகின்றன. ஏறத்தாழ ஒன்றரை ஆண்டுகளுக்கு முன் 'கூடுதல் ஜனநாயகம்' கோரி துவங்கிய மாணவர்களது போராட்டம் சற்றே ஓய்ந்து இப்போது மீண்டும் வெடித்துப் பரவுகிறது. தொடர்ந்து இருவார காலத்திற்கும் மேலாக போராட்டம் நீடிக்கிறது.

கடந்த ஏப்ரல் 15 அன்று முன்னாள் கம்யூனிஸ்ட் கட்சி செயலாளரான ஹுயாவோபாங் காலமானார். முதலாளித்துவ சீர்திருத்தங்களைக் கூடுதலாக கோரிய அவர் 1987ல் கட்சியிலிருந்து கழித்துக் கட்டப்பட்டார். தமது கருத்துச்சிந்தனைகளைப் பிரதிபலித்த அவரை உன்னதத் தலைவராகச் சித்தரித்து அவரது மரணத்தைத் தொடர்ந்து கூடுதல் ஜனநாயகம், பத்திரிகைச் சுதந்திரம், முதலானவற்றைக் கோரி சீன மாணவர்கள் போராட்டத்தைத் தொடங்கினர். சீன வர

www.padippakam.com

லாற்றில், உலக வரலாற்றில் கூட இவ்வளவு பெரும் எண்ணிக்கையில் மாணவர்கள் அணிதிரண்டு போராடியதில்லை. ஏறத்தாழ 2 லட்சம் மாணவர்கள் பீகிங் நகரின் தியன் அன்மென் சதுக்கத்தில் கூடி, கூடுதல் ஜனநாயகம் - பல கட்சி ஆட்சி முறையைக் கோரியும், பிரதமர் லீ பெங்கை பதவிவிலகக் கோரியும் ஆர்ப்பாட்டம் செய்தனர். அமைதியான முறையில் நடந்துவந்த மாணவர் போராட்டம் சில நாட்களிலேயே கட்டுமீறிப் போனது. சியான் நகரில் அரசு வாகனங்களும் கட்டிடங்களும் கொளுத்தப்பட்டன. நூற்றுக்கும் மேற்பட்ட போலீசார் தாக்கப்பட்டனர். மாணவர்களிடையே கிரிமினல் சக்திகளும் காலிகளும் நுழைந்துவிட்டனர் என்று புலம்புகிறது சீனத்தின் ஆளும் திரிபுவாத டெங்கும்பல்.

நாட்டை நவீனப்படுத்துவது என்ற பெயரில் சோசலிச கம்யூன்களை உடைத்து நொறுக்கி தனியார் முதலாளித்துவத்தை ஊட்டி வளர்த்து சீனத்தை சீரழித்து வந்தது, டெங் கும்பல். ஆனால் டெங் கும்பலால் புத்துயிர் பெற்றுள்ள முதலாளித்துவவாதிகள், மாணவர்களைத் தூண்டி விட்டு சீனத்தின் பெருஞ்சுவரை உடைத்து 'விண்ணுலக சாம்ராஜ்ஜியத்தை' அடைய பெருமுயற்சி செய்கின்றனர். முதலாளித்துவ ஜனநாயகம் இல்லாமல் முதலாளித்துவப் பொருளாதாரத்தை நடைமுறைப்படுத்த விடமாட்டோம் என்று மறைமுகமாக எச்சரிக்கின்றனர். மாணவர்களது கோரிக்கையை ஏற்க மறுத்த டெங் கும்பல், போராட்டம் தொடர்ந்தால் அடக்குமுறை ஏவப்படும் என்று அச்சுறுத்திப் பார்த்தது. ஆனால் அதற்குப் பணியமறுத்து மாணவர்கள் விடாப்பிடியாகப் போராடியதைத் தொடர்ந்து அரண்டுபோன டெங் கும்பல் 'கூடுதல் ஜனநாயகம்' அளிப்பதாக ஒப்புக்கொண்டுள்ளது. சுருக்கமாகச் சொன்னால், உலகப் புரட்சியின் கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்த செஞ்சீனம், டெங் துரோகக் கும்பலின் தலைமையின் கீழ் இன்று ஒரு முதலாளித்துவ நாடாக வேகமாகச் சீரழிந்து வருகிறது.

● ○ ●

ரஷியா, சீனாவைப் போலவே கிழக்கு ஐரோப்பிய போலிக் கம்யூனிச நாடுகளும் வியட்நாமும் தங்கள் பங்குக்கு 'கிளாஸ்நாஸ்ட்' கொள்கையை அறிவித்து, தனியார் முதலாளித்துவத்தை வெளிப்படையாகவே அங்கீகரித்து ஆதரிக்கத் தொடங்கிவிட்டன. ரஷிய சமூக ஏகாதிபத்தியத்தின் தொங்கு சதை நாடான போலந்தில் சிவப்புச்சாயம் பூசிய ராணுவ சர்வாதிகாரி ஜாருஜெல்ஸ்கியின் கொடிய ஆட்சியையும், தீராத உணவுப் பஞ்சத்தையும் எதிர்த்து 70களின் இறுதியில் சுயேட்சையான 'சாலிடாரிடி' தொழிற்சங்கத் தலைவர் வாலேசா 'ஜனநாயக'த்துக்குக் குரல் கொடுத்தார். எல்லா ஏகாதிபத்திய நாடுகளும் கிறிஸ்துவ மத நிறுவனங்களும் அவரது போராட்டத்துக்குப் பக்கபலமாக நின்றன. பீதியடைந்த போலந்தின் ராணுவ சர்வாதிகாரிகள் ராணுவத்தை ஏவி போராட்டத்தை அடக்கினர். உலகின் தலைசிறந்த மனிதர் என்று 'டைம்' பத்திரிகை வாலேசாவைப் பாராட்டியது; அவருக்கு நோபல் பரிசு கூட வழங்கப்பட்டது.



கூடுதல் 'ஜனநாயகம்' கோரி சீன மாணவர்கள் நடத்தும் போராட்டம்

வாலேசாவின் ஜனநாயகத்துக்கான போராட்டம், முதலாளித்துவத்தை மீட்டெடுப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தது. அவரை பிற்போக்குவாதி என்று சாடி, சாலிடாரிடி தொழிற்சங்கத்தைத் தடை செய்த போலந்து சர்வாதிகாரிகள், தமது போலி சோசலிச ஆட்சி முறையின்மூலம் போலந்தின் பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க முடியாமல், இப்போது வாலேசாவுடன் சமரசம் செய்துகொண்டு பகிரங்கமாக முதலாளித்துவத்தை வரவேற்கின்றனர். ஏழாண்டு கால தடைக்குப் பிறகு சாலிடாரிடி சங்கத்துடன் சமரச ஒப்பந்தம் ஏற்பட்டதையடுத்து, அன்னியக்கடன் சுமையில் சிக்கித் தவிக்கும் போலந்தின் கடன் சுமையைத் தணிக்க உதவ முன் வந்துள்ளார், அமெரிக்க அதிபர் புஷ்.

தேக்கரண்டியிலிருந்து விண்கோள்கள் வரை அனைத்தும் எமக்கு உடனடியாகத் தேவை; மேற்கத்திய நாடுகளே, எங்கள் நாட்டில் வந்து முதலீடு செய்யுங்கள் என்று ஐரோப்பாவைச் சுற்றுகிறார் வாலேசா. எங்களுக்கு கடன் வேண்டாம்! சலுகைகள் தருகிறோம்; முதலீடு செய்ய வாருங்கள்! என்று ஏகாதிபத்தியங்களை அழைக்கிறார் போலந்தின் ராணுவ சர்வாதிகாரி ஜாருஜெல்ஸ்கி.

போலந்தின் 'சாலிடாரிடி சங்கத் தலைவர். லேக்வாலேசா



போலந்து போலிக் கம்யூனிஸ்டுகளின் திறந்துவிடும் கொள்கையைத் தொடர்ந்து, சீனாவைப் போலவே போலந்து பல்கலைக்கழக மாணவர்களும் ஆயிரக்கணக்கில் வீதிகளில் திரண்டு கூடுதல் ஜனநாயகத்தைக் கோரியும், கல்விச் செலவுக்காக கூடுதல் மானியம், கட்டாய ராணுவச் சேவையை நீக்குவது, பள்ளிகளில் மார்க்சிய - லெனினிய போதனையை நீக்குவது முதலானவற்றைக் கோரியும் ஆர்ப்பாட்டங்களை நடத்துகின்றனர். சுருங்கக் கூறினால் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலேயே முதன்முதலாக போலந்து ஒரு முதலாளித்துவ நாடாக உருமாற்றம் அடைவதை நோக்கி வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது.

போலி சோசலிச நாடுகளில் ஏற்பட்டுள்ள இத்தகைய புதிய நிலைமைகளைக் கண்டு ஏகாதிபத்தியவாதிகள் குதூகலிக்கிறார்கள். மரணப் படுக்கையில் கிடக்கும் தமது ஏகாதிபத்திய பொருளாதாரத்துக்குப் புத்துயிர் அளிக்கும் போலிக் கம்யூனிஸ்டுகளை மனதார வாழ்த்துகிறார்கள். குறிப்பாக, போலந்தில் நேரடியாக முதலீடு செய்து சூறையாடுவதற்கு கிடைத்த வாய்ப்பை எண்ணி பூரித்துப் போகிறார்கள்.

பல கட்சி ஜனநாயகத் தேர்தல் வைத்தால் இந்நாடுகளில் சர்வசாதாரணமாக முதலாளித்துவ கட்சிகள் வெற்றிபெற்று அதிகாரத்தையே கைப்பற்றிவிடக் கூடிய அளவுக்கு நிலைமை முன்னேறிவிட்டது. இந்திய போலிக் கம்யூனிஸ்டுகள் கூட இந்நாடுகளை 'சோசலிச' நாடுகளாக ஏற்றுக் கொள்ள முடியாத அளவுக்கு சிவப்புச் சாயம் வெளுத்து முற்றாக அம்பலப்பட்டுப் போயுள்ளன. அதேசமயம் போலி சோசலிசமும் போலி கம்யூனிசமும் எந்த அளவுக்கு தீங்கானது, நாட்டுக்கும் மக்களுக்கும் எதிரானது என்பதை எதிர்மறை அனுபவங்களாக உலகப் பாட்டாளிவர்க்கத்துக்கு இந்நாடுகள் போதிக்கின்றன.

— மணி

படிப்பகம்

www.padippakam.com



கவர்னரின் ஆலோசகர் ரிபைரோ; அரசு பயங்கரவாதத்தைத் தலைமையேற்று நடத்தும் சட்ட பூர்வ கிரிமினல் போர்வழி


பஞ்சாப் மக்களின் இன்றைய நிலைமை மிகவும் வேதனைக்குரியதாய் இருக்கிறது. அறிவிக்கப்படாத ஒரு உள் நாட்டு போரில் பஞ்சாப் மக்களைச் சுற்றி வளைத்து நர வேட்டையாடு கிறது, பாசிச ராஜீவ் கும்பல் . சீக்கிய மதவெறி பயங்கரவாதிகளைக் கார ணம் காட்டி மொத்த சீக்கிய மக்களின் தேசப் பற்றும் சந்தேகிக்கப்படுகிறது; கொச்சைப் படுத்தப் படுகிறது. எண் ணில் அடங்காத பல கறுப்புச் சட்டங் கள் மூலம் சொந்த மண்ணிலேயே அவர்களை அகதிகளாக்கி அந்நிய உள வாளிகள் போல் கேவலப்படுத்துகிறது, ராஜீவ் கும்பல்.

பாசிச ராஜீவ் கும்பலின் அரசு பயங்கர வாதத்தால், பொய் பிரச்சாரத்தால் சீக் கிய மக்களின் ரத்தமும், சதையும், மனித நேயமும், தன்மான உணர்ச்சியும், தேசப் பற்றும் கொடூரமாக சிதைக்கப் படுகிறது. ஒன்று: அவர்கள் மதவெறி பயங்கரவாதிகளாக மாற வேண்டும் அல்லது பாசிச கும்பலின் அடி வருடி களாக பணி புரிய வேண்டும். இந்த இரண்டுக்கும் எதிராக போரிடுவதற் கான, இதன் மூலம் உண்மையான தேசப் பற்று மிக்கவர்களாக வாழ்வதற் கான அனைத்து அடிப்படைகளையும் அவர்களிடமிருந்து பறிக்கிறது பாசிச ராஜீவ் கும்பல்.

குறிப்பாக, பர்னாலா அரசாங்கம் மதவெறிக்கு எதிராக கையாலாகாத் தனத்தை காண்பிப்பதாக காரணம் காட்டி, பஞ்சாபில் அவசர நிலை ஆட் சியை பிரகடனபடுத்திய பிறகு கடந்த ஒன்றரை ஆண்டுகளில், பல்வேறு வழி களில் பகிரங்கமாகவும் நயவஞ்சகமாக வும் சீக்கிய மக்களை ரத்த வெள்ளத்தி லும், பய பீதியிலும், அவமானத்திலும் மூழ்கடிக்கிறது பாசிச ராஜீவ் கும்பல்.

கொலை வெறியன் கவர்னர் சித் தார்த்த சங்கர் ரே வழிகாட்டுதலோடு இயக்கப்படும் கே.பி.எஸ்.கில், ஜே. எப் ரிபைரோ தலைமையிலான சட்ட பூர்வ போலீசுக் குண்டர் படையுடன், சட்ட விரோதமான முறையில் மிகக் கொடிய கிரிமினல்களைக் கொண்ட ரகசியக் கொலைப் படையையும் இயக் குகிறது. இதோடு, பல்வேறு துணை ராணுவ பாட்டாலியன்களையும் இறக்கிவிட்டுள்ளது, பாசிச ராஜீவ் கும்பல்.

தேச ஒருமைப்பாட்டுக்கு ஆபத்து என்ற மூடு திரையின் பின்னே பல வாய்ப்பூட்டு கறுப்புச் சட்டங்களை போட்டு · பத்திரிக்கையாளர்கள், ஜன நாயக சக்திகள், பஞ்சாப் மாநிலத்தின் உண்மை நிலைமையை ஆய்வு செய் வதை பிற பிரிவு மக்களிடம் எடுத் துச் சொல்வதை மூர்க்கமாகத் தடுக் கிறது. அது மட்டுமல்ல, பயங்கரவாதி களால் பாதிக்கப்பட்ட பகுதிகள் என்று முத்திரை குத்தி பஞ்சாப் மாநிலத்தை பல்வேறு பகுதிகளாக கூறுபோடுகிறது. துண்டித்த பகுதியில் கேள்விக்கிடமற்ற வகையில் ஒட்டு மொத்தமாக அரசு பயங்கரவாதத்தை ஏவி ரத்தக்களரியை ஏற்படுத்துகிறது.




சீக்கிய மக்களின் மீது பாசிச ராஜீவ் கும்பல் கட்டவிழ்த்து விட்டுள்ள மிரு கத்தனமான கொலை வெறிக்கு ரத்த சாட்சியாய் விளங்கும் இடம், மாண்ட்; பஞ்சாப் பின் வடமேற்கே நான்கு மாவட்ட எல்லைகளை உள்ளடக்கிய ஆற்றின் கரையோர கழிமுக பகுதி. 'யானைட் புற்கள்'' என்றழைக்கப் படும் அடர்ந்து உயர்ந்த புற்புதர்களை யும் ஆங்காங்காங்கே சிறுசிறு ஓடை களையும் தேங்கிய நீர் குட்டைகளையும் பரவலாகக் கொண்ட பகுதி. சுமார் 6000 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுக் கொண்ட இப்பகுதியில் 100 -க்கும் மேற்பட்ட சிறுசிறு கிராமங்கள் உள் ளன. அப்பகுதியின் கடை கோடி மேற் குப் பகுதி பாகிஸ்தான் எல்லையோடு முடிவடைகிறது. மதவெறி பயங்கரவா திகளுக்கு இயற்கையாகவே இப்பகுதி தலைமறைவுக்கான புகலிடமாக விளங் குகிறது. அதேப் போல அரசு பயங்கர வாதிகளின் · பெரும் தலைமை பீடமாக வும் இப்பகுதி இயங்குகிறது.

பல்வேறு கோஷ்டிகளாக இயங்கும், மதவெறி பயங்கரவாத அமைப்புகளின் மிகவும் பிரபலமான இருவேறு பிரிவு களான காலிஸ்த்தான் அதிரடி படை, (KCF) 'பாப்பர் கால்சா இண்டர் நேஷனல்' (BKI) ஆகிய இரண்டும் இப் பகுதியை தலைமைப் பீடமாகக் கொண்டு இயங்குகின்றன.

இப்பயங்கரவாத அமைப் புகளைச் சேர்ந்த இளைஞர்கள், கிராம மக்களிடையே கூட்டங்கள் நடத்தி அரசுக்கெதிரான அனல் கக்கும் சொற் பொழிவுகள், மத ஆதரவு பிரச்சாரங் களை நடத்திக்கொண்டிருப்பதாக பத் திரிக்கையாளர்கள் கூறுகிறார்கள். அர சால் கொல்லப்பட்ட தம் அமைப்பைச் சார்ந்தவர்களைத் தியாகிகளாக சித் தரித்து பாடல்கள் பாடி மக்களை ஈர்ப் பதாக கூறுகிறார்கள். மறுபுறம், மத விரோதிகள், துரோகிகள் என்று பட் டியல் போட்டு தேர்ந்தெடுத்தவர்களை கொலை செய்வது, இந்திய - பாகிஸ் தான் எல்லையில் இரும்புமுள் வேலி களை அமைக்கும் அரசுக் 'கான்ட் ராக்ட்' காரர்களை கடத்திச் சென்று பணம் வசூலிப்பது முதலான வேலையி லும் இறங்குகிறார்கள்.

இவையில்லாமல், புதுப்புது பெயர்களில் ஏராளமான சிறுசிறு கோஷ்டிகள் கிரிமினல் குற்றங்களையே தொழிலாகக் கொண்டு இயங்குகின் றன. மதவெறி அமைப்புகள் என்ற போர்வையின் பின்னே ஒளிந்து கொண்டு கொடூரமான முறையில் வெகுஜன படுகொலைகளை அரங் கேற்றுவது, அப்பாவி சீக்கிய மக்களைக் கொன்று தெரு முனைகளில் தொங்க விடுவது, வீடு புகுந்து கொள்ளையடிப் பது என்று பல்வேறு அட்டூழியங்களை புரிந்து தப்பியோடி விடுகின்றனர்.

மதவெறி பயங்கரவாதிகள், கிரி மினல் கும்பல்கள் கிராமங்களில் புகுந்து அக்கிரமங்கள் புரிந்து திரும்பும் வரையில், அரசு பயங்கரவாதிகளான

படிப்பகம்

www.padippakam.com

போலீசு புலிகள், ஆளரவமற்ற பகுதிகளில் மணல் மூட்டைகளுக்கு பின்னால் பதுங்கிக் கொண்டு பீதியுடன் வெறுமனே துப்பாக்கிகளை நீட்டிக் கொண்டிருக்கின்றன. அதன் பிறகு கிராமங்களில் நுழைந்து, பயங்கரவாதிகளுக்கு கிராம மக்கள் உதவிகள் புரிந்ததாகவும், அவர்களுடன் கூடிக் கூலாவியதாகவும், வெட்கங்கெட்ட முறையில் குற்றம் சாட்டி, துன்புறுத்துகிறது. இவ்வாறு ஒருவர் இருவரல்ல, 100 -க்கும் மேற்பட்ட கிராமங்களில் 1000 -க்கும் மேற்பட்ட அப்பாவி சீக்கிய மக்கள் இக்கொடிய மிருகங்களின் சித்திரவதைகளுக்குத் தொடர்ந்து வதைப்பட்டு வாழ்க்கையை இழந்து, குடும்பத்தை இழந்து இன்று நாடோடிகளாகவும், தலைமறைவாகவும் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இவர்களில் ஒருவர், பூட்டாராம். குர்தாஸ்பூர் மாவட்டத்தில் பாட்டாலா போலீசு நிலைய எல்லைக்குள் இருக்கும் கோகா கிராமத்தில் வசிப்பவர். விவசாய பண்ணை நடத்தும் இந்து குடும்பத்தவர். வசதிபடைத்தவர். சமீபத்தில் இவரது பண்ணையில் நுழைந்து, அவரை கடத்திச் செல்ல வந்த பயங்கரவாத கிரிமினல் கும்பலை, தம் கைத் துப்பாக்கியால் தாக்கி ஓட ஓட விரட்டியவர். அதன் பிறகு, அக் கும்பலிடமிருந்து வந்த மிரட்டல் கடிதத்திற்கும் அஞ்சாதவர். சில நாட்களில், போலீசுக் கும்பல் திடீரென இவரைக் கைது செய்தது. அவர் விரட்டியடித்த கிரிமினல் கும்பலுடன் அவருக்கு தொடர்பு இருப்பதாகவும், உதவிகள் புரிவதாகவும் பொய்க் குற்றம் சாட்டி பல நாட்கள் கொடூரமாக அவரை சித்திரவதைச் செய்து மிரட்டியனுப்பியது. வெளியில் வந்த பூட்டாராம், இப்போது தாடியும், டார்பனுடன் முழு சீக்கியராக மாறியதுடன் தன்னை "பூட்டாசிங்" என்றும் அழைத்துக் கொள்கிறார். இதனால் தனக்கு சீக்கிய பயங்கரவாதிகளிடம் இருந்தாவது பாதுகாப்பு கிடைக்கும் என்று வேதனையோடு கூறுகிறார்

கமாக்கார். பாகிஸ்தான் எல்லையை ஒட்டிய மாக்கு பகுதியில் வசித்தவர். தானே முன் வந்து சில விபரங்கள் சொன்ன இவரிடம் மேலும் விபரங்கள் கோரி மிருகத்தனமாக சித்திரவதைச் செய்தது, போலீசு. தற்போது, இவர் தலைமறைவாக வாழ்ந்துக் கொண்டு பயங்கரவாதிகளுக்கு உதவிகள் செய்து கொண்டிருக்கிறார். அமிர்தசரஸ், பெரோஸ்பூர் ஆகிய இரு மாவட்டங்களில் மட்டும் இவ்வாறு நூற்றுக் கணக்கான இளைஞர்கள் பயங்கரவாத அமைப்புகளுக்கு உதவி செய்வதில் புதிதாக இணைந்துள்ளனர்.

அரசு பயங்கரவாதிகளின் கொலைவெறி தாக்குதல்களை விட, மதவெறி பயங்கரவாதிகளின் நடவடிக்கைகள் எவ்வளவோ மேல்! என்று மக்களை பிரமையில் ஆழ்த்தும் அளவுக்கு, போலீசு அக்கிரமங்கள், சீக்கிய மக்களின் மீது முள்ளாய் கவிழ்ந்து கிடக்கிறது. கிராமப்புறங்களில் புதிது புதிதாக அமைக்கும் போலீசு நிலையங்

# சொந்த மண்ணில் அகதிகளாக பஞ்சாப் மக்கள்



உழவு முடித்து விட்டு வீடு திரும்பும் விவசாயிகளை பீதிகுள்ளாக்கும் இராணுவம்; சுற்றி வளைத்துச் சோதனையிடுகிறது.

களுக்கு தேவையான இடங்களுக்கு கூட சல்லிக்காசு செலவு செய்வது இல்லை. கிராம பஞ்சாயத்து அலுவலகங்களிலும் பள்ளிக் கூடங்களிலும் நுழைந்து ஆக்கிரமித்துக்கொள்கிறது. அவ்விடங்களில் வசதிகள் குறைவாக இருந்தால் அக்கிராம பஞ்சாயத்துக்காரர்களை அழைத்து புதிய குடியிருப்புகளை இலவசமாக அமைத்துத் தரும்படி நிர்பந்திக்கிறது. அதிகாரிகளுக்கு அதே போல், ஊரில் இருக்கும் வசதியான வீடுகளை இலவசமாக ஒதுக்கித் தருமாறு மிரட்டிச் சாதிக்கிறது. அதிரடி நடவடிக்கைகளுக்காக வந்திறங்கும் படைகளுக்குத் தேவையான உணவு கூட கிராம மக்கள்தான் வழங்க வேண்டும் என்று துப்பாக்கி முனையில் மிரட்டுகிறது.

இவற்றுக்கெல்லாம் உதாரணமாக ஓராயிரம் சம்பவங்கள் இருக்கிறது. அவற்றில் ஒரு சிலவற்றை மட்டும் இங்கு பார்ப்போம்: இப்பகுதியிலுள்ள கச்சூர்



என்ற கிராமமும், தாபாவாலே என்ற கிராமமும் பல மாதங்கள் கழிந்த பிறகும், போலீசுப் படை கட்டவிழ்த்து விட்ட கொலைவெறியின் மரண பயத்திலிருந்து இன்னும் மீளவில்லை. 11.1.89 அன்று மாலை 25க்கும் மேற்பட்ட லாரிகளில் வந்திறங்கிய 2000க்கும் மேற்பட்ட போலீசு-துணை ராணுவப் படை, கச்சூர் கிராமத்தை சுற்றி வளைத்து, முதலில் கண்ணில் கண்ட பொருட்கள் அனைத்தையும் சூறையாடியது. தேவையில்லாதவற்றைத் தாக்கி அழித்தது. பிறகு, அக்கிராமத்திலுள்ள எல்லா ஆண் பெண் விவசாயிகளையும், குழந்தைகளையும், முதியவர்களையும், இளைஞர்களையும், இளம் பெண்களையும் வெளியே கொண்டு வந்து தரையில் கவிழ்ந்து படுக்கும் படி கட்டளை பிறப்பித்தது. ஒரு மணி நேரத்திற்கும் மேலாக அவர்களை அதே நிலையில் படுக்க வைத்து, பெல்ட்டுகளையும் தடிகளையும் கொண்டு அடித்து துன்புறுத்தியது. தடிகளைக் கொண்டு அருவெறுக்க தக்கமுறையில் சீண்டி ரசித்தது. அதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்னால் இதே போல் இம்சையை தாபாவலே கிராமத்திலும் அக்கும்பல் அரங்கேற்றியது.

போலேவால் கிர்ராமத்தில், கடந்த மார்ச்சு மாதம் 10, 11-ந் தேதிகளில் 400-க்கும் மேற்பட்ட போலீசு படை சென்று, வக்கிரமான முறையில் சித்திரவதையை அரங்கேற்றியது. அக்கிராமத்திலுள்ள மக்கள் அனைவரையும் ஊருக்கு ஒதுக்குப் புறமாக உள்ள மைதானத்திற்கு இழுத்து வந்தது. அவர்களில் 10 வயதுக்கு மேற்பட்ட சிறுவர்களை மட்டும் தனியே இழுத்து, அவர்களின் பெற்றோர்கள் சகோதரிகள் முன்னிலையில் அச்சிறுவர்களை நாள் முழுக்க கொளுத்தும் வெய்யிலில் கிடத்தி 'பெல்ட்டு' வாரால் ரத்தம் ஒழுக அடித்து துன்புறுத்தி, அப்பச்சைக் குழந்தைகளின் உடம்பை கிழிந்த துணி போல் கசக்கி எறிந்து விட்டு சென்றது.

நூற்றுக் கணக்கான கிராமங்களுக்கு

படிப்பகம்

www.padippakam.com

பரவிய போலீசின் இந்த அட்டூழியங்களுக்கு எதிராக அப்பகுதி விவசாயிகள் அனைவரும் கொதித்தெழுந்தனர். அரசுடன் ஒத்துழைக்க மறுக்கும் முதல் கட்ட போராட்டமாக, கிராம பஞ்சாயத்துக்கு தலைவர்கள் அனைவரையும் ராஜினாமா செய்யச் சொல்லி வற்புறுத்தி அதை சாதித்தும் காட்டினர். பீதியடைந்த கொலைவெறியன் சித்தார்த்த சங்கர் ரே ஓடோடிச் சென்று சமரச நாடகமாடி, பேராட்டத்தை தற்காலிகமாக தணிப்பதில் வெற்றி பெற்றார்.

ஆனால், மேலும் மேலும் சீக்கிய மக்களின் மீது அரசு பயங்கரவாதத்தை முன்னிலும் தீவிரமாக கட்டவிழ்த்து விடுவதற்கு பாசிச ராஜீவ் கும்பல் இரு பெரும் சதித் திட்டங்களை தீட்டி நடைமுறைப்படுத்துவதில் வெற்றி கண்டுள்ளது. ஓராண்டுக்கு முன் பொற்கோவிலுக்குள் எடுக்கப்பட்ட கோடையிடி நடவடிக்கை போன்று கிராமப் புறங்களில் பலவித அதிரடி நடிவடிக்கைகள் எடுக்க முன் தயாரிப்புகள் அனைத்தையும் செய்து முடித்து விட்டது. பொற்கோவிலின் சுற்று சுவர்களை ஒட்டியிருந்த சிவிலியன் குடியிருப்புகளை அவர்களின் எதிர்ப்பையும் மீறி இடித்து தள்ளியதைப் போல, பயங்கரவாதிகளால் பாதிக்கப்பட்ட பகுதிகள் என்று பல கிராமப்புற சிவிலியன் குடியிருப்பு பகுதிகள், வேளாண்மை இடங்களை சுடுகளத்திற்கான இடமாக ஆக்கிரமித்துக் கொண்டு நிரந்தரமாக, மக்களை போர்பய பீதியிலும், பொருளாதார இழப்புகளிலும் தள்ளுவதற்கு துணிந்து விட்டது. மேலும், சர்வதேச அளவிலான அரசு பயங்கரவாத நவீன போர் உத்திகள் அனைத்தையும் சீக்கிய மக்களின் மீது ஏவி விடுவதற்கு முதல் கட்டமாக, பிரிட்டனிலிருந்து ''ஸ்காட்லாந்துயார்டு'' போலீசின் பயங்கர

புவியியல் நிலைமைகளை நேரிடையாக காட்டி ஆலோசனைகள் பெற்றிருக்கிறது.

இந்திய-பாகிஸ்தான் எல்லையோரம் வசிக்கும் சீக்கிய மக்களை, அவர்களுடைய பாரம்பரிய பிரதேசங்களிலிருந்து விரட்டியடிப்பது, அடையாள அட்டை வழங்கி அவமானப்படுத்துவது, அப்பிரதேசங்களுக்கான வளர்ச்சி துறை, சேவைத் துறைகளை அறவே புறக்கணிப்பது, பாசிசக் கும்பலுக்கு அடி பணியாத எவர் ஒருவரையும் படுகொலை புரிவது; பாகிஸ்தான் எல்லையிலிருந்து ஊடுருவிய போது மோதலில் இறந்ததாகக் கதைக் கட்டுவது - இப்படி பல்வேறு வழிகளில் எல்லையோர சீக்கிய மக்களை பழிவாங்குவதோடு, மொத்தமாகவே பஞ்சாப் மக்களின் அரசியல் உரிமைகள், பொருளாதார தேவைகள் இவற்றை வெட்டி, குறுக்கி நிரந்தரமாகவே அவர்களின் மனங்களில் தீராத பகையை ஏற்படுத்துகிறது, பாசிச ராஜீவ் கும்பல்.

ஈழ ஆக்கிரமிப்பு மற்றும் ஈழ மக்களின் மீதான இந்திய அரசுப் படைகளின் அட்டூழியங்களால், உலக அளவிலுள்ள ஜனநாயக சக்திகளிடமும் சர்வதேச மனித உரிமைக் கமிஷனிடமும் பாசிச ராஜீவ் கும்பல் அம்பலப்பட்டிருப்பது போலவே பஞ்சாப் மக்களின் மீது கட்டவிழ்த்து விடும் அக்கிரமங்களாலும் மூக்குடைப் பட்டு நிற்கிறது. பிரிட்டன், கனடா போன்ற நாடுகளில் வாழும் சீக்கிய மக்கள், பஞ்சாப் மக்களின் மீது பாசிச ராஜீவின் அரசு பயங்கரவாதத்தை, ரத்தத்தை உறைய வைக்கும் புகைப் படங்கள், ஆதாரப் பூர்வமான செய்திகள், புத்தகங்கள் மூலம் உலக மக்களிடம் அம்பலப் படுத்தி வருகிறார்கள். ஏற்றுக் கொள்ளப் பட்ட சர்வதேச மனித உரிமைகளை, பாசிச ராஜீவ் கும்பல், சொந்த



எதையும் விட்டு வைப்பதில்லை இந்திய ராணுவம்; விவசாயிகளின் படகுகளையே தேடுதல் வேட்டைக்குப் பயன்படுத்திக் கொள்கிறது.

ஆதாரப்பூர்வமான ஆய்வறிக்கைகள் மூலம் அம்பலப்படுத்தி வருகிறார்கள். சர்வ தேச அளவில், பல்வேறு நாடுகளின் நாடாளுமன்றங்களில் பஞ்சாப் படுகொலைகள், சர்வ தேச மனித உரிமைகளை மீறிய செயலாக விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. உலக அளவில் இவ்வாறு பாசிச ராஜீவ் கும்பலின் முகத்தில் கரிபூசப் பட்டதால் மேலும் மேலும் கொதிப் படைந்து மேலும் மேலும் நயவஞ்சக மான முறையில் பஞ்சாப் மக்களை படுகொலை புரிகிறது.

மறுபுறம், பாசிச ராஜீவ் கும்பலின் மக்கள் விரோத, தேசவிரோத நடவடிக்கைகளுக்கு எதிராக சீக்கிய மக்களின் உரிமைகளுக்காகப் போராடும் உண்மையான தொண்டர்களாக வெளிக் கிளம்பியுள்ள சீக்கிய மதவெறி அமைப்புகள் எந்த விதத்திலும் பாசிச ராஜீவ் கும்பலின் அரசு பயங்கரவாதத்துக்குத் தீர்வாகாது. இம் மதவெறி அமைப்புகளின் அடிப்படை நோக்கம், பஞ்சாப் மக்களுக்கு ஜனநாயக உரிமைகளை மீட்டு தருவதோ, அம் மாநிலத்தின் நியாயமான உரிமைகளை பாசிசக் கும்பலிடம் இருந்து போராடிப் பெறுவதோ அல்ல. மாறாக, பஞ்சாப் மாநிலத்தில் நிலப்பிரபுத்துவ சீக்கிய மதவெறி ஆதிக்கத்தை நிலை நிறுத்துவதும், புதுவகைப் பணக்கார நிலப் பிரபுக்களுக்கு அதிகாரப் பங்கீட்டில், திட்ட ஒதுக்கீட்டில் உரிமைக்கோருவது, அதை அங்கீகரிக்க, பாசிச ராஜீவ் கும்பலை நிர்பந்திப்பது - இந்த இலட்சியங்களை அடைவதுதான் மதவெறி அமைப்புகளின் உண்மையான நோக்கம். அந் நோக்கங்களை அடைவதற்கு தம் பலத்தை பெருக்கிக் கொள்வதற்கு பரந்துப் பட்ட சீக்கிய மக்களை கவர்ந்திழுக்க இம் மக்களின் உரிமைகளையும் உள்ளடக்கிய கோரிக்கைகளை வைத்து பம்மாத்து செய்கிறது, மதவெறி கும்பல்.

அரசுப் பயங்கரவாதம் எங்கெல்லாம் கட்டவிழ்த்து விடப்படுகிறதோ அங்கெல்லாம் எந்த அடிப்படையிலிருந்தாவது அதற்கெதிரான வேறொரு பயங்கரவாதம் வெடித்து கிளம்புவது இயல்பே! ஆனாலும் தனி நபர் பயங்கரவாதமா, மதவெறி பயங்கரவாதமோ அரசு பயங்கரவாதத்தை வேரறுக்க உதவாது! மாறாக அரசு பயங்கரவாதத்தை நியாப்படுத்தும் அடிப்படையை தான் ஏற்படுத்தி தரும். இவை அனைத்திற்கும் மாறாக பாட்டாளி வர்க்க தலைமையிலான மக்கள் திரள் பயங்கரவாதம் மட்டுமே அரசு பயங்கரவாதத்தை வேரோடும் வேரடி மண்ணோடும் அழித்தொழிக்கும்என்பதை பாதிக்கப்பட்ட சீக்கிய மக்கள் உணர வேண்டும். நிலப்பிரபுத்துவ ஆதிக்கத்தையும் அரங்கேற துடிக்கும் பாசிசத்தையும் கீழறத்துப் போடும் போது மட்டுமே மதங்களுக்கிடையிலான சமத்துவத்தையும் தேச ஒற்றுமையையும் பாதுகாக்க முடியும். மக்களின் அரசியல் உரிமைகளை மீட்டெடுக்க முடியும்.

படிப்பகம்

www.padippakam.com

## கர்நாடக ஆட்சிக் கவிழ்ப்பு:

ஆடுகளை மோதவிட்டு ரத்தம் குடிப்பதென்பது காங்கிரசு ஓநாய்களின் பிறவித்தொழில். இப்போது கர்நாடகத்தில் ஜனதாதளக் கட்சிக்குள் ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்து, ஆளும் பொம்மை அரசைக் கவிழ்த்து குடியரசுத் தலைவர் ஆட்சியைப் பிரகடனப்படுத்தியுள்ளது, பாசிச ராஜீவ் கும்பல். வரப்போகும் தேர்தலைக் குறி வைத்து தென் மாநிலங்களிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட கழிசடை காங்கிரசு கும்பல், மீண்டும் ஆட்சியைப் பிடிக்கும் நப்பாசையில் தமது கைக்கூலி கவர்னர் மூலம் ஜனநாயகப் படுகொலையைப் பட்டப்பகலில் அரங்கேற்றியுள்ளது. அதேசமயம் கொள்கை பூர்வ அரசியலும் ஆட்சியும் நடத்துவதாகப் பீற்றிக்கொள்ளும் ஜனதாதள கட்சியின் - ஆட்சியின் யோக்யதை அம்பலப்பட்டு சந்திசிரிக்கிறது.

கர்நாடகத்தின் முன்னாள் முதல்வர் ஹெக்டேவின் பதவி விலகலையடுத்து முதல்வர் பதவி போட்டியில் தேவகௌடாவை வென்று கடந்த ஆண்டு ஆகஸ்டில் அரியணை ஏறினார், பொம்மை. தமது 13பேர்கொண்ட மந்திரிசபையில் தேவகௌடாவுக்கும் வாய்ப்பளித்தார். ஆனால் முதல்வர் பதவிக்கு ஏங்கிய தேவகௌடா கும்பலும், ஹெக்டேவின் ஆதரவாளர்களும் பொம்மை அரசுக்குத் தீராத தலைவலியாக இருந்து வந்தனர். பின்னர் ஜனதா கட்சி லோக்தளத்துடன் இணைந்து ஜனதா தளமாக உருவானபோது, கர்நாடக பொம்மை ஆட்சியும் கட்சியும் ஜனதா தளமாக மாறியது. ஆனால் இப்படியை எதிர்க்கும் [illegible]

கௌடா தலைமையில் தம்மை தனிப்பிரிவாக அறிவித்துக் கொண்டு பொம்மை அரசுக்கு ஆதரவு தர மறுத்தனர். இதனால் 222 பேர் கொண்ட சட்டமன்றத்தில் ஜனதா தளக் கட்சி 111 பேராகச் சுருங்கியது.

இந்நிலையில், ஹெக்டே ஆதரவு கோஷ்டியின் கலகத்தாலும், சாதி வெறியர்களின் நிர்ப்பந்தத்தாலும் மூன்றாவது முறையாக தமது மந்திரிசபையை ஏப்ரல் 15ல் விரிவுபடுத்தினார் முதல்வர் பொம்மை. ஏறத்தாழ 3 எம்.எல்.ஏக்களுக்கு ஒரு மந்திரி என்ற விகிதத்தில் 35 பேர் கொண்ட ''ஏர் பஸ்'' மந்திரிசபையாக அது ஊதிப்பெருத்திருந்தது. ஆனாலும் ஹெக்டே ஆதரவாளர்கள் தான் புறக்கணிக்கப்படுவதாக எரிச்சலுற்றனர். தமக்கு மந்திரி பதவி அளிக்காத

அதே சமயம் தேவகௌடாவுடன் இன்னமும் ரகசிய உறவு வைத்துக் கொண்டுள்ள ஜனதா தள எம்.எல்.ஏக்களுக்கு முதல்வர் பொம்மை, மந்திரி பதவியளித்ததைக் கண்டு ஆத்திரமுற்றனர். தேவகௌடா ஆதரவாளர்களுடன் சேர்ந்து கொண்டு தம்மைப் பழி வாங்குவதாகக் கருதினர். அதே உத்தியை அவருக்கு எதிராகப் பயன்படுத்தி, அதாவது தேவகௌடா ஆதரவு எம்.எல் ஏக்களுடன் சேர்ந்து கொண்டு பழிவாங்கத் துடித்தனர்.

தனக்கு ஒரு கண் போனாலும் பரவாயில்லை; ஜனதாதள ஆட்சிக்கு இரண்டு கண்களும் போக வேண்டும் என்ற உயரிய லட்சியத்தைக் கொண்டு, இதுநாள் வரை காங்கிரசின் ஐந்தாம் படையாகச் செயல்பட்டு கழுத்தறுத்துவந்த தேவகௌடாவின் காய் ஜனதா [illegible]

ஆட்சிக் கவிழ்ப்பை எதிர்த்து கர்நாடக சட்டமன்றத்துக்கு வெளியே ஆர்ப்பாட்டம்



# "பொம்மை" ஆட்சி கவிழ்ப்பு!
# பொம்மையாட்சி திணிப்பு!

கொண்டு ஹெக்டே ஆதரவாளர்களை உசுப்பி விட்டது. இக்கூட்டு கும்பலின் முடிவுப்படி, முதலில் தேவகௌடா ஆதரவு ஜனதாதள எம்.எல்.ஏ. கல்யாண்ராவ், பொம்மை அரசுக்கு ஆதரவு தர மறுத்தார். அவரைத் தொடர்ந்து, பல ஹெக்டே ஆதரவு எம்.எல்.ஏக்கள் பொம்மை அரசுக்கான தமது ஆதரவை விலக்கிக் கொள்வதாக கவர்னருக்குக் கடிதம் எழுதினர். பொம்மை அரசுக்கு ஏற்பட்ட இந்த திடீர் நெருக்கடியை அறிந்து பெங்களூருக்கு ஓடோடி வந்தார் ஹெக்டே. ஆனால். அவரால் தமது சீடர்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

இந்நிலைமையை எதிர்பார்த்துக் காத்திருந்த காங்கிரசுக் கவர்னர் வெங்கிட சுப்பையா, 19 எம்.எல்.ஏக்கள் தமது ஆதரவை விலக்கிக் கொண்டுள்ளதாக கடிதம் எழுதியுள்ளதன் அடிப்படையில் பொம்மை அரசு பெரும்பான்மை ஆதரவை இழந்துவிட்டது என்றும், அரசியல் சாசனப்படி இந்த அரசு நீடிக்க உரிமையில்லை என்பதால் அதை நீக்கிவிட்டு குடியரசுத் தலைவர் ஆட்சிக்குத் தான் பரிந்துரைப்பதாகவும் ஏப்ரல் 19 அன்று டெல்லிக்கு அறிக்கை அனுப்பினார். இதற்காகவே ஏங்கிக் கிடந்த பாசிச ராஜீவ் கும்பல், தென்னாட்டில் திக்விஜயம் செய்து கொண்டிருந்த குடியரசுத்தலைவர் வெங்கட்ராமனை அவசரமாக டெல்லிக்கு அழைத்து, அவர் மூலம் குடியரசுத் தலைவர் ஆட்சியை ஏப்ரல் 21ந் தேதியன்று மாலை பிரகடனப்படுத்தியது.

இதற்கிடையே 19 எம்.எல்.ஏக்களில் 12 பேர் தமது முடிவை மாற்றிக்கொண்டு மீண்டும் பொம்மை அரசுக்கு ஆதரவளிப்பதாக கவர்னரிடம் முறையிட்டனர். முதல்வர் பொம்மை, தமது பெரும்பான்மையை ஏப்ரல் 27 அன்று கூடும் சட்டசபை கூட்டத்தில் நிரூபிக்க அவகாசம் அளிக்கக் கோரினார். ஆனால் காங்கிரசு ஏஜெண்டாகச் செயல்படும் கவர்னர், தாம் ஏற்கனவே டெல்லிக்கு அறிகை அனுப்பிவிட்டதாகவும், தமது முடிவில் எந்த மாற்றமுமில்லை என்றும் ஒருதலைப்பட்சமாக அறிவித்தார்.

மூச்சுக்கு முன்னூறு முறை, மத்திய-மாநில உறவுகள் பற்றிய சர்க்காரியா கமிஷனின் பரிந்துரைகளை தாம் பொறுப்போடு செயல்படுத்தி வருவதாகப் பீற்றிக்கொள்ளும் பாசிச ராஜீவ் கும்பலும் அதன் முன்னோடி பாசிச இந்திரா கும்பலும் அவற்றை ஒருக்காலும் மதித்ததேயில்லை. பெரும்பான்மை ஆதரவைத் தீர்மானிப்பதில் கவர்னர் அனாவசியமாகத் தலையிடக்கூடாது. சட்டசபையில் நிரூபித்துக் காட்டுமாறு கோர வேண்டும். சட்டசபை கூடாத காலத்தில் மந்திரிசபை பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவை இழந்துவிட்டதாக நம்பகமான தகவல் கிடைத்தாலும்கூட, அரசியல் சாசனத்தைக் காப்பாற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டாலும்கூட, சட்டசபையில் பெரும்பான்மையை நிரூபிக்காதவரை அந்த மந்திரிசபையைக் கலைக்கக்கூடாது....

...தமது பெரும்பான்மையை நிரூபிக்க அம்மந்திரிசபைக்கு 30 நாட்கள் அவகாசமும் சிறப்பான நிலைமைகளில் 60 நாட்கள் அவகாசமும் தரப்படவேண்டும் என்று சர்க்காரியா கமிஷன் பரிந்துரைக்கிறது. ஆனால்

www.padippakam.com

ராஜீவ் கும்பலும் இப்பரிந்துரைகளை காலில் போட்டு மிதித்தது. முதல்வர் பொம்மை அவகாசம் கோரியும்கூட மறுத்து விட்டு தன்னிச்சையாக அரசியல் சட்டத்தின் 356வது விதியைத் துஷ்பிரயோகம் செய்து சர்வாதிகாரமாக குடியரசுத் தலைவர் ஆட்சியைத் திணித்துள்ளனர்.

356வது சட்டப்பிரிவை பிரயோகிப்பது பற்றி சர்க்காரியா கமிஷன் தனது பரிந்துரையில், கடைசி முயற்சியாக, வேறு வழியே இல்லாத நிலையில், மாற்றுவழிகள் அனைத்தும் தோற்றுப்போனால் மட்டுமே இச்சட்டப் பிரிவை பயன்படுத்த வேண்டும் என்று வலியுறுத்துகிறது. ஆனால் எதிர்கட்சி ஆட்சியைக் கவிழ்க்க வேண்டுமென்ற இரட்டிப்பு வெறியோடு இவை அனைத்தையும் கழிப்பறைக் காகிதமாக இழிவுபடுத்திவிட்டது பாசிச கும்பல். தேர்ந்தெடுக்கும் உரிமை மக்களுக்கு, கலைக்கும் அதிகாரமும் கவர்னருக்கு என்பதை மீண்டும் நிரூபித்துக் காட்டிவிட்டது.

எதிர்கட்சி ஆட்சிகளை கவிழ்ப்பதும், குடியரசுத் தலைவர் ஆட்சியை சர்வாதிகாரமாகப் பிரகடனப்படுத்துவதும் பாசிச இந்திரா - ராஜீவ் கும்பலுக்குப் புதிதல்ல. ஏற்கனவே 1984ல் ஆந்திரத்தில் என்.டி.ஆர். ஆட்சியையும், காஷ்மீரத்தில் பரூக் அப்துல்லாவின் ஆட்சியையும் இதே பாணியில் பாசிச இந்திரா கவிழ்த்தார். சுருக்கமாகச் சொன்னால் 356வது சட்டப்பிரிவு என்பது மத்திய அரசின் கையிலுள்ள வலுவான ஆயுதம். அதைக்கொண்டு எதிர்கட்சி அரசுகளைக் கவிழ்க்கவும், தமக்கு சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தவும் பாசிச கும்பல் வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் பயன்படுத்தி வந்துள்ளது. பீற்றிக்கொள்ளப்படும் புனிதமான அரசியல் சட்டத்தையே தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, தமது கேடுகெட்ட ஆட்சியை நிலைநிறுத்திக் கொள்ள பாசிச கும்பல் எந்த எல்லைக்கும் செல்லத் தயங்காது என்பதை மீண்டுமொரு முறை நிரூபித்துக் காட்டிவிட்டது, இன்றைய கர்நாடக ஆட்சிக்கவிழ்ப்பு.

இது ஜனநாயகப் படுகொலை; அதிகார துஷ்பிரயோகம்; சர்வாதிகாரம் என்றெல்லாம் சட்ட விதிகளையும் மரபுகளையும் காட்டி எதிர்க்கட்சிகள் கூப்பாடு போடுகின்றன. ஆனால் இதே எதிர்க்கட்சி சூரப்புலி வி.பி.சிங் முன்பு காங்கிரசில் இருந்த போது இதே அட்டூழியங்கள் நடந்தன. அன்று வாய்மூடி பாசிச இந்திராவுக்குச் சாமரம் வீசிய வி.பி.சிங் இன்று வீரவசனம் பேசுவது நல்ல வேடிக்கை! அது ஒருபுறமிருக்க எதிர்க்கட்சிகளும் நாடாளுமன்ற விவாதக் கணைகள், பத்திரிக்கைகளுக்கு அறிக்கைகள், பொதுக்கூட்டங்கள், தர்ணா, கடையடைப்பு என்ற போராட்டங்களுக்குள் தம்மை வரம்பிட்டுக்கொண்டு உடனடியாக கர்நாடகத்தில் தேர்தல் நடத்தக்கோருகின்றன இழந்த சொர்க்கத்தை மீட்கும் வேட்கையில், மக்கள் மீதும், சிவில் உரிமைகள் மீதும் திடீர் கரிசனை காட்டுகின்றன. பாசிச கும்பல் சட்டத்தையே கேலிக்கூத்தாக்கி தமது காலில் போட்டு மிதிக்கும் வேளையில், சட்டவாத முறைகளின் மூலமே ஜனநாயகத்தை மீட்டுவிட முடியும் என்ற எதிர்கட்சிகள் பகற்கனவு காண்பது அதைவிட வேடிக்கையானது. இன்னும்கூட, எதிர்க்கட்சிகளின் அரசைக்கவிழ்க்க வரம்பற்ற அதிகாரத்தை மத்திய அரசுக்கு அளிக்கும் 356வது சட்டப்பிரிவை ரத்து செய்ய வேண்டும் என்று கூட அவர்கள் கோரவில்லை. அதை துஷ்பிரயோகம் செய்துவிட்டதாகத் தான் புலம்புகின்றனர். ஒரு வேளை தாங்கள் மத்தியில் ஆட்சியைப் பிடித்துவிட்டால் இதே சட்டங்களையும், ஆட்சி முறையையும், கவர்னரையும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையில் தான் அவர்கள் உள்ளனர்.

பாசிச ராஜீவ் கும்பலை நாடாளுமன்ற, சட்டமன்ற முறைகளின் மூலமே -தேர்தல்களின் மூலமே வீழ்த்திவிட முடியும் என்று நம்புவது பகற்கனவே! அதிலும் வலுவான எதிர்கட்சி இல்லாத நிலையில், இருக்கின்ற பலவீனமான எதிர்கட்சி கூட்டணியும் கோஷ்டி சண்டைகளால் புழுத்துநாறும் நிலையில், பாசிச கும்பலின் அட்டகாசங்களை இந்த நெல்லிக்காய் மூட்டையாக உள்ள எதிர்க்கட்சி கூட்டணியால் ஒருக்காலும் தடுத்து நிறுத்த முடியாது. முற்றாக அம்பலப்பட்டு தனிமைப்பட்ட பின்னரும் கூட பாசிச கும்பல் அதிகாரத்தில் ஒட்டிக் கொண்டு அட்டூழியங்களைப் புரிவதற்கு அடிப்டையே எதிர்க்கட்சிகளின் கையாலாகாத்தனம்தான் காரணம். சட்டவாத முறைகளுக்குள், நாடாளுமன்ற கட்டிடத்துக்குள் ராஜீவ் கும்பலை எதிர்த்து வாய்ச்சவடால் அடித்துக் கொண்டு, மக்களைத் திரட்டி பாசிச அபாயத்துக்கு எதிராக வலுவான போராட்டங்களை நடத்த இக்கட்சிகள் வக்கற்று கிடக்கும்வரை பாசிச கும்பலின் ஜனநாயகப் படுகொலைகள் தொடரவே செய்யும். நாடாளுமன்ற, சட்டவாத முறைகளுக்கு அப்பாற்பட்ட, பாட்டாளி வர்க்கத் தலைமையிலான புரட்சிகர போராட்டங்கள் மட்டுமே பாசிச கும்பலையும், படந்துவரும் பாசிச அடக்குமுறை பேரபாயத்தையும் முறியடிக்கும்.

— மனோகரன்.

## பச்சோந்தி கருணாநிதியின் பல்டி!

பதவியைப் பாதுகாத்துக் கொள்ள சமயத்துக்குத் தகுந்தாற்போல சந்தர்ப்பவாதமாக மாறுவதென்பது, 'கொள்கை அடலேறு' கருணாநிதிக்கு கைவந்த கலை! பாம்பும் சாகாமல் தடியும் நோகாமல் வித்தை காட்டுவது, அவரது 'அரசியல் சாணக்கியத்தனம்!'

கர்நாடகத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியைக் கவிழ்த்ததைக் கண்டித்தும், 356வது அரசியல் சட்டப் பிரிவை துஷ்பிரயோகம் செய்ததை எதிர்த்தும் தி.மு.க.வின் கூட்டணிக் கட்சிகள் உட்பட 5 எதிர் கட்சிகள் தமிழக சட்ட சபையில் குரலெழுப்பின. இது வேறு மாநிலமும் மத்திய அரசும் சம்பந்தப்பட்ட விவகாரம் என்று விவாதிக்க அனுமதி மறுக்கப்பட்டதையடுத்து அக்கட்சிகள் வெளிநடப்பு செய்தன. தேசிய முன்னணியில் அங்கம் வகித்து கொண்டு கர்நாடக ஆட்சிக் கவிழ்ப்பை எதிர்க்காவிட்டால் அம்பலப்பட நேரிடும்; அதேசமயம் மத்திய அரசைப் பகைத்துக் கொண்டால் பிரச்சினைகள் வரும். எனவே பாம்புக்கு வாலும் மீனுக்குத் தலையும் காட்டிக் கொண்டு, "வெளிநடப்பில் தி.மு.க. கலந்து கொள்ளவில்லை என்பதால் அது மத்திய அரசின் செயலை ஆதரிப்பதாகாது" என்று புதிய கொள்கை விளக்கத்தைக் கொடுத்தார், பச்சோந்தி கருணாநிதி.

பின்னர், "ஏப்ரல் 28 அன்று காவிரி நீர் பிரச்சினைக்காக இரு மாநில முதல்வர்களும் பேச்சுவார்த்தை நடத்தவிருந்த நேரத்தில் கர்நாடகத்தில் ஆட்சிக் கவிழ்ப்பு செய்யபபட்டுள்ளதால், கவர்னர் ஆட்சியில்,பேச்சு வார்த்தை கூடாது" என்று ஜனதா தள போலிக் கம்யூனிஸ்டு கட்சிகள் கருணாநிதியிடம் வலியுறுத்தின. ஆனால் கருணாநிதி அந்தர்பல்டிஅடித்து, "காவிரி நீர் பிரச்சினை தமிழகத்தின் உடனடி பிரச்சினை என்பதால் கர்நாடக கவர்னர் சம்மதித்தால் பேச்சுவார்த்தை நடத்த தயார்" என்று அறிவித்தார். இதனால் தேசிய முன்னணியினர் அதிருப்தி அடைவார்கள் என்று கருதிய கருணாநிதி மீண்டும் ஒரு பல்டி அடித்தார். ஏப்ரல் 27-ந் தேதியன்று பெங்களூரில் ராஜிவ் தலைமையில் நடைபெறவுள்ள தென்மாநில பஞ்சாயத்து மாநாட்டில் நாங்கள் பங்கேற்க மாட்டோம் என்று அறிவித்தார்.

பாலுக்கும் காவலனாக, பூனைக்கும் தோழனாக ஜெகஜாலம் செய்யும் இந்த பச்சோந்தியுடன் கூட்டுச் சேர்ந்து போலிக் கம்யூனிஸ்டுகளும் எதிர்கட்சிகளும் காங்கிரசை வீழ்த்தப் போகிறார்களாம்! நம்புங்கள்!

## சட்டமன்ற ரௌடித் தனங்களை அம்பலப்படுத்தி...

சட்ட மன்ற ரௌடித்தனங்களை அம்பலப்படுத்தி தேவ பாண்டலத்தில் கல்லை வட்ட விவசாயிகள் விடுதலை முன்னணி, பொதுக் கூட்டம் மற்றும் கலை நிகழ்ச்சியை நடத்தியது. தோழர் கண்ணன் தலைமையில் கடந்த ஏப்ரல் 13ந் தேதியன்று நடந்த இப்பொதுக் கூட்டத்தில் கல்லை வட்ட வி.வி.மு. அமைப்பாளர் தோழர் கதிர்வேலன் பகுதிப் பிரச்சினைகளை விளக்கி ஆட்சி மாற்றம் அரசியல்மாற்றமாகாது; மக்கள் பிரச்சினைகளும் இதனால் தீராது என்று விளக்கினார். சிறப்புரையாற்றிய தஞ்சை மக்கள் கலை இலக்கியக் கழகச் செயலர் தோழர் காளியப்பன், சட்ட மன்றத்தில் கடந்த ரௌடித் தனங்களையும் [illegible] தவிர்க்க முடியாத பாராளுமன்ற அராஜகத்தின் ஒரு விளைவே என்றும் எடுப்பாக விளக்கினார். அரசின் அற்பச் சலுகைகளையும் இலவசத் திட்டங்களையும் கண்டு ஏமாந்து விடாமல், உன்னத வாழ்வைப் பெற வி.வி.மு.வில் இணைந்து ஒரு புரட்சிநடத்த வேண்டுமென அறைகூவல் விடுத்தார். சட்ட மன்ற அராஜகத்தை தோலுரித்துக் காட்டும் புரட்சிகர பாடல்களைத் தோழர்கள் பாடிய போது மக்கள் உணர்வு பொங்க வரவேற்றனர். ஏறத்தாழ ஆயிரம் பேர் கலந்து கொண்ட இப்பொதுக்கூட்டம் இப்பகுதி மக்கள் மத்தியில் சிறப்பானதொரு தாக்கத்தை ஏற்படுத்தியது.

தகவல் : விவசாயிகள் விடுதலை முன்னணி, கல்லை வட்டம்

படிப்பகம்

www.padippakam.com




நவீன நாஜிகளுக்கு எதிராக பெர்லின் நகர வீதிகளில் மக்கள் ஆர்ப்பாட்டம். உள்ளே: நவீன நாஜிக் கட்சித்தலைவர் ஸ்கோன் ஹுபெர்.

# புற்றீசலாக கிளம்பும் புதிய நாஜிகள்

**மா**பெரும் சர்வாதிக்காரி - உலகின் மிகக் கொடிய பாசிச சர்வாதிகாரி ஹிட்லரை அவமானப்படுத்தும் வகையில், உலகின் மிகச் சிறந்த யதார்த்த நகைச் சுவை நடிகர் சார்லி சாப்ளின் நடித்த திரைப்படம். மனித குலத்தின் விரோதியான சர்வாதிகாரி ஹிட்லரை ஒரு படுமுட்டாள் கோமாளியாக இழிவு படுத்தி நகைச் சுவை இழையோட அப்படத்தில் அம்பலப்படுத்தினார் சார்லி சாப்ளின். சார்லி சாப்ளினின் நூற்றாண்டு விழாவையொட்டி உலகெங்கும் அவர் நடித்த படங்கள் திரையிடப்பட்டு வருகின்றன. வேடிக்கை என்னவென்றால் சர்வாதிகாரி ஹிட்லருக்கும் இது நூறாவது ஆண்டுதான்! ஜனநாயகத்தை நேசிக்கும் உலக மக்கள் சார்லி சாப்ளினின் நூற்றாண்டு விழாவை பெருமிதத்தோடு கொண்டாடும் அதே வேளையில், பாசிச சர்வாதிகாரி ஹிட்லரை நினைவு கூர்ந்து வெறுப்பை உமிழ்கிறார்கள். குறிப்பாக, ஜெர்மானிய மக்கள் தமது நாட்டுச் சர்வாதிகாரியின் ரத்தக்கறை படிந்த வரலாற்றை எண்ணி அவமனாத்தால் தலை குனிகிறார்கள்.

ஆனால் ஹிட்லர் உருவாக்கிய பாசிசம் முற்றாக அழிந்து விடவில்லை. மீண்டும் அது புதிய மறுமலர்ச்சியோடு அதே ஜெர்மனியில் வேர்விடத் தொடங்கியுள்ளது. ஹிட்லரின் விசுவாசிகளான நவீன நாஜிக் குழுக்கள் சமீப ஆண்டுகளாக அங்குமிங்குமாகத் தலைகாட்டத் தொடங்கி, ஸ்கோன் ஹுபர் தலைமையில் குடிமக்கள் குடியரசுக் கட்சியில் திரண்டு, கடந்த பிப்ரவரியில் நடந்த பெர்லின் நகரத் தேர்தலில் மொத்தமுள்ள 138 இடங்களில் 11 இடங்களைக் கைப்பற்றியுள்ளது. நவீன நாஜிக் கட்சியின் அசுரத் தனமான திடீர் வளர்ச்சியைக் கண்டு ஜெர்மனிய மக்கள் பீதியடைந்துள்ளார்கள். பெருகி வரும் இப் பேரபாயத்துக்கு எதிராக ஆர்பாட்டங்களைத் தொடுத்து வருகிறார்கள்.

குடி மக்கள் குடியரசுக் கட்சி என்ற பெயரில் இயங்கும் நவீன நாஜிக் கட்சியின் தலைவரான ஸ்கோன்ஹுபர் முன்னால் நாஜி எஸ்.எஸ். கொலை காரபடையில் ஒரு படைவீரராக இருந்தவர். ஹிட்லர் மீது எல்லையில்லா பக்தி கொண்டவர். ஜெர்மனியைத் தூய்மைப்படுத்தி வலிமைமிக்க நாடாக்க வேண்டும் என்று உணர்ச்சி பொங்க அவர் ஆற்றும் உரைகள் ஹிட்லரின் போதனையை அச்சாக பிரதிபலிக்கிறது. முதல் உலகப் போரைத் தொடர்ந்து ஜெர்மானிய மக்கள் பசி, பட்டினி, வேலையின்மையால் பரிதவித்த போது, தனது ஆவேச பேச்சுக்களால் அவர்களைக் கவர்ந்திழுத்து, 1933-ல் ஹிட்லர் ஆட்சியைப் பிடித்ததைப் போலவே, இன்றைய நவீன நாஜிக் குழுக்களும் பெர்லின் நகரில் பெருகிவரும் குடியிருப்பு பிரச்சினை, வேலையின்மை, விலையேற்றம் முதலான சிக்கல்களில் பரிதவிக்கும் மக்களை தமது ஆவேச உரைகளின் மூலம் கவர்ந்திழுக்கிறது.

ஹிட்லரைப்போலவே இன வெறியும், தேசிய வெறியும் பிடித்தலையும் நவீன நாஜிக்குழுக்களின் தலைவர், "குடியேறியுள்ள 10 சதவீதத்தினரான அன்னிய நாட்டினரால் பெர்லினின் புனிதம் கெட்டுவிட்டது. அன்னிய இனத்தவரை விரட்ட அணிதிரளுங்கள்!" என்று ஆவேசமாக முழங்குகிறார். கடந்த பிப்ரவரியில் இவ்வாறு அவர் தேர்தல் பரப்புரை செய்தபோது, பத்தாயிரக்கணக்கான ஜெர்மானியர்கள் வீதிகளில் திரண்டு "நாஜி நாயே! வெளியேறு!" என்று முழக்கமிட்டு விரட்டியடித்தனர்.

இவ்வளவு எதிர்ப்புகள் இருந்தபோதும், நாஜிக் குழுக்கள் தேர்தலில் போட்டியிட்டு 11 இடங்களைக் கைப்பற்றுமளவுக்கு வளர்ச்சி அடைந்தது எப்படி? இதற்கான அடிப்படை ஜெர்மானிய சமூகத்திலேயே உள்ளது. இரண்டாம் உலகப்போருக்கு முந்தைய முலாளித்துவ நெருக்கடி நிலையைப் போலவே, இன்று ஜெர்மானிய சமூகமும் வேலையின்மையாலும், பொருளாதார நெருக்கடியாலும் சிக்கித் தவிக்கிறது. பீற்றிக் கொள்ளப்படும் முதலாளித்துவ 'ஜனநாயக' ஆட்சியின் மீது மக்கள் நம்பிக்கையிழந்து விட்டனர். புரட்சிகர சக்திகள் பலவீனமாக உள்ள நிலையில், நவீன நாஜிக் குழக்களின் ஜனரஞ்சகமான ஆவேச உரைகள் மக்களை போதையூட்டி மயக்குகின்றன. படிப்படியாக அவர்கள் நவீன நாஜியிச வலையில் விழுகின்றனர்.

இதோடு, நவீன வீடியோ விளையாட்டுகள் மூலம் இளம் தலைமுறையின் சிந்தனையை திட்டமிட்டே நாஜிக் குழுக்கள் சீரழித்து வருகின்றன. 'ஆரிய சோதனை" 'சித்திரவதை முகாமின் மேலாளர்" "ஜெர்மனியைத் தூய்மைப்படுத்துவது" முதலானவை அவற்றில் பிரபலமானவை. கம்யூனிஸ்டுகள், யூதர்கள், துருக்கியர்களைக் கொன்று ஜெர்மானிய ஆரிய இனமே உயர்ந்தது என்பதை நிலைநாட்டும் வகையில் அந்த வீடியோ விளையாட்டுகள் உள்ளன. ஒரு சில விளையாட்டுகளில் ஹிட்லர் மற்றும் அவனது பிரச்சார மந்திரி கோயபல்ஸ் ஆகியோரின் பேச்சுக்கள் கூட பதிவு செய்யப்பட்டுள்ளன. இன வெறி - தேசிய வெறி - யுத்த வெறி - ஆதிக்க வெறியுணர்வை இளைஞர்களுக்கு ஊட்டி அவர்களை நவீன நாஜிகளாக்குவதில் இத்தகைய வீடியோ விளையாட்டுகள் முக்கிய பங்காற்றி வருகின்றன.

ஜெர்மானியைப் போலவே பல்வேறு ஐரோப்பிய நாடுகளிலும் இத்தகைய நவீன நாஜிக் குழுக்கள் தலைகாட்டத் தொடங்கியுள்ளன. பாசிச சர்வாதிகாரி ஹிட்லரின் நூறாவது பிறந்த நாளான ஏப்ரல் 20ம் தேதியன்று ஆஸ்திரிய நாட்டிலுள்ள அவன் பிறந்த கிராமமான ப்ரானவ் என்ற ஊருக்கு உலகெங்குமுள்ள நவீன நாஜிகள் புனித யாத்திரை புறப்பட்டனர். ஸ்வஸ்திக் சின்னம் பொறித்த நாஜிக் கொடியை ஏற்றி, நாஜிக்களின் பாணியில் கையை விறைப்பாக நீட்டி அக்காட்டுமிராண்டிக்கு வீரவணக்கம் செலுத்தினர். இதற்கெதிராக ஆஸ்திரிய மக்கள்

படிப்பகம்

www.padippakam.com

ஆர்த்தெழுந்தவுடன் போலீசார் நவீன நாஜிகளை விரட்டியடித்தனர். இதே போல, இரண்டாம் உலகப் போரில் தோல்வியடைந்து தப்பியோடி வந்து தென் மேற்கு ஆப்பிரிக்காவில் குடியேறிய நாஜி ஆதரவாளர்கள், ஸ்வாகோப்முண்ட் நகரில் நாஜிக் கொடியை ஏற்றி, ஹிட்லரின் நூற்றாண்டு விழா வைக் கொண்டாடியுள்ளனர்.

44 ஆண்டுகளுக்குப் பிறகு, ஜெர்மனியில் மீண்டும் பாசிச சக்திகள் வேர்விடத் தொடங்கியுள்ளன. ஆனால் பிற்போக்கு கும்பல்கள் ஆளும் பல்வேறு மூன்றாம் உலக நாடுகளில் பாசிசம் ஏற்கனவே நிரந்தரமாகக் குடியேறி விட்டது. அன்னை இந்திராவின் அவசர நிலை ஆட்சியில் ஆட்டம் போட்ட பாசிசம் அவரது குலக்கொழுந்து ஆளும் இன்று, மீண்டும் தலைவிரித்தாட தருணம் பார்த்துக் கொண்டிருக்கிறது. மூன்றாம் உலக நாடுகள் மட்டுமின்றி, 'ஜனநாயக'த் தொட்டிலாகச் சித்தரிக்கப்படும் பல்வேறு ஐரோப்பிய முதலாளித்துவ நாடுகளும் அமெரிக்காவும் தமது பொருளாதார நெருக்கடிக்கு ஒரே மாற்றுத் தீர்வாக பாசிசத்தையே அரங்கேற்றத் துடிக்கின்றன. அந்த தைரியத்தில், "வரலாறு மீண்டும் திரும்பும். நாஜியாசத்தின் தலைமையில் வலுமிக்க நாடாக ஜெர்மனியை மாற்றியமைப்போம்" என்று கொக்கரிக்கின்றன நவீன நாஜிக் குழுக்கள்.

உண்மைதான்! வரலாறு மீண்டும் திரும்பும். மனித குல விரோத, கொடிய பாசிசப் படைகளை முற்றாக அழித்தொழித்து, ஐரோப்பிய கண்டத்தின் பெரும் பகுதியை செங்கொடியின் கீழ் விடுதலை செய்து, அளப்பரிய தியாகத்துடனும் வெல்லற்கரிய தீர்த்துடனும் போராடியது தோழர் ஸ்டாலின் தலைமையின் கீழான சோவியத் செஞ்சேனை! அந்த புரட்சிப் பாதையில், விஷவிருட்சமாக வேர்விட்டுக் கிளம்பும் நவீன நாஜியிசத்தையும் உலகப் பாட்டாளி வர்க்கம் நிச்சயம் வெற்றி கொள்ளும்!

குமார்.

அன்பார்ந்த வாசகத் தோழர்களே,

உங்கள் அனைவருக்கும் எமது மே தினப் புரட்சி வாழ்த்துக்கள்!

வசந்தத்தின் இடி முழக்கமென மே தினத்தையொட்டிய கவிதைகளையும், வாழ்த்துச் செய்திகளையும் அனுப்பி வைத்துள்ள வாசகத் தோழர்கள் அனைவருக்கும் எமது நன்றியையும் புரட்சிகர வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். ஏற்கனவே அறிவித்தவாறு, 'புதிய ஜனநாயகம்' ஒரு அரசியல் பத்திரிக்கையாக இருப்பதாலும், அரசியல் செய்திகளை வெளியிடுவதற்கே நமது இதழில் போதிய இடமில்லாமல் இருப்பதாலும் கவிதைகளை வெளியிட இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தோழமையுடன், ஆசிரியர் குழு

# இந்திய-சீன எல்லைத் தகராறு: மறைக்கப்பட்ட வரலாற்று உண்மைகள்

## தோல்வி தந்த பீதி: நடுநிலை நாயகனின் இழிசெயல் அமெரிக்க ராணுவதிற்கு நேரு அழைப்பு.

இந்தியாதான் உரிமைகொண்டாடிய எல்லைக் கோட்டையும் தாண்டி இராணுவச் சாவடிகள் அமைத்துக் கொண்டதோடு அதற்கும் அப்பால் இருந்த சீன இராணுவ முகாமை அகற்றுவதாகப் போர்ப்பிரகடனம் செய்து ஆத்திரமூட்டும் வகையிலே முன்னேறியது. அதை முறியடித்த சீன இராணுவம் பத்து நாட்களுக்குப் பிறகு முழு அளவிலான போர் தொடுத்தது. பெருந் தோல்வியடைந்த இந்திய ராணுவம் பீதியுற்றுத் திரும்பி ஓடி வந்தது.

தோற்றுப் பின்வாங்கும் இராணுவத்துக்கு முக்கியமான பிரச்சினை எங்கு நிலை கொள்வது என்பது தான்! காலநேரம், பூகோள நிலைமை, போர்த்தந்திர உத்திகள் ஆகிய இராணுவ ரீதியிலான காரணங்களைக் கொண்டு இதைத் தீர்மானிக்க வேண்டும்; இல்லையானால் இரண்டாவதாகத் தோல்வியும் பேரழிவுகளையும் சந்திக்க வேண்டி வரும். தாவாங்கைத் தக்கவைத்துக் கொள்வது என்று தளபதிகள் தபாரும் சென்னும் முதலில் எண்ணினார்கள். ஆனால் தேஜ்பூர் பறந்து போன சென் தாவாங்கில் நிலை கொள்ளுமாறு உத்திரவு போட்ட போது அதிகாரிகள் எதிர்த்தனர். மூன்று முனைகளில் தாக்கி முன்னேறிய சீன ராணுவம் தாவாங்குக்குப் பத்து மைல்வரை வந்து விடவே அதையும் காலி செய்து விடும்படி கீழதிகாரிகள் கோரினர். அதற்கு அனுமதி கோரி நேருவைத் தலைமைத் தளபதி அணுகியபோது, "எங்கு-எப்படிப் போரிடுவது என்பதை இராணுவம் தான் தீர்மானிக்க வேண்டும்" என்று கூறி அவர் நழுவிக் கொண்டார்.

முன்னணிப் போர்முனையில் உள்ள நாலாவது காலாட்படையின் ஆணைப் பொறுப்பைக் கைவிடும்படி சூரப்புலி கௌல் நிர்பந்திக்கப்பட்டார். தாவாங்கில் இருந்து 60 மைல்கள் பின் வாங்கி பொம்மிடிலா என்ற இடத்தில் நிலை கொள்ளும்படி அப்படைக்கு உத்திரவு போனது. கௌலின் கையாளான பிரிகேடியர் பாலித், "தாவாங்கில் இருந்து 15 மைல் பின்னால் இருக்கும் சேலாவில் நிலை கொள்ள வேண்டும். எதிரி எளிதில் கைப்பற்ற முடியாத இயற்கைப் பாதுகாப்புடையது; சமவெளி பிரதேசத்துக்கு எதிரி வராமலும் தடுக்க முடியும்" என்றார். கிருஷ்ணமேனனுக்கும், தபாருக்கும் அதை கேட்க ஆறுதலாக இருந்தது. ஆனால் பல முனைகளிலிருந்தும் தாக்கி எளிதில் கைப்பற்றி விடக் கூடியதாகவும், இந்திய துருப்புகளும் ஆயுத தளவாடங்களும் எளிதில் குவிக்க முடியாததாகவும் உயர்ந்த மலைகளிடையே சேலா இருந்தது. அக்டோபர் 23-ந் தேதி தாவாங்கை இந்திய இராணுவம் காலி செய்து கொண்டு வெளியேறியது. அடுத்த நாள் அதைக் கைப்பற்றிய சீன இராணுவம் சிறிது ஓய்வெடுத்தது.

இதற்கிடையே வடக்கே லடாக் பிராந்தியத்தில் சீன இராணுவம் முன்னேறிய போதும் ஓரளவு ஒழுங்குப்படுத்தப்பட்டு பின்வாங்கியதால் பேரிழப்புகள் இல்லாமல் இந்திய இராணுவம் தப்பியது.

அவ்வாறின்றி வட கிழக்கத்திய போர் முனையின் தலைமை அதிகாரிகளை மாற்றி மேலும் குழப்பம் ஏற்பட்டது. கௌலுக்குப் பதிலாக தளபதி ஹர்பக்ஷ் சிங்கும், பிரசாத்துக்குப் பதிலாக துணை தளபதி ஏ.எஸ் பத்தானியாவும் நியமிக்கப்பட்டனர். இன்னும் சில கீழதிகாரிகளை மாற்றிய போதும் படை உத்தரவுகள் எதுவுமின்றி எங்கும் குழப்பமே நிலவியது.

இராணுவ ரீதியில் மட்டுமல்லாது அரசியல் ரீதியிலும் நேருவின் கொள்கைகள் நார் நாராக கிழிந்தன. நடுநிலை - சமாதானக் கொள்கைகளை எல்லாம் காற்றில் பறக்க விட்டுவிட்டு அமெரிக்க ஏகாதிபத்தியத்திடம் இருந்து ஆயுத தளவாடங்களை அவசர அவசரமாக இறக்குமதி செய்தார். இந்திய மக்களிடையே தேசிய வெறியை கிளறி விடுவதில் அரசியல் தலைவர்கள் போட்டி போட்டனர். இந்திய இராணுவம்தான் போர் பிரகடனம் செய்து முன்னேறி ஆத்திரத்தைத் தூண்டியது என்ற உண்மையை மறைத்து "சீனர்கள் துரோகிகள், போர்வெறியர்கள்" என்று அவதூறு செய்தனர். இராணுவத்தில் சேர பலரும் முன் வந்தனர். மாசேதுங், சௌஎன்லாய் ஆகியோரின் கொடும்பாவிகளை மாணவர்கள் கொளுத்தினர். சீனர்கள என்று கருதித் தாக்கி விடக் கூடும் என்று கருதி ஜப்பானிய கொரிய தூதர்கள் தமது நாட்டுச் சின்னங்களையும் இந்தி விளக்கங்களையும் எழுதி காரில் ஒட்டிக் கொண்டு போனார்கள். சீன வழி வந்த இந்தியர்கள் கூட எதிரிகளாக நடத்தும் உத்தரவு போட்டது அரசு. பலரும் நாட்டை விட்டு துரத்தப்பட்டனர். அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டு குடியுரிமை மற்றும் ஜனநாயக உரிமைகள் பறிக்கப்

www.padippakam.com

பட்டன. பலர் தேச துரோகிகள் என்று கைது செய்யப்பட்டனர்.

பல கேலிக் கூத்துகளும் நடந்தன. ஊர்க்காவல் படை, தேசிய துப்பாக்கிச் சுடுவோர் சங்கம் அமைப்பது என்றும், மாணவர்களின் தேசியப் படை அணியை விரிவு படுத்துவது என்று அறிவிக்கப்பட்டது. பள்ளிச் சிறுமிகள் அணி வகுப்புகளும் தேகப் பயிற்சிகளும் செய்தனர். துப்பாக்கிகளின் குறி பார்ப்பது போல எம்.பிகளின் புகைப் படங்கள் வந்தன. பஞ்சாப் மந்திரிகள் இராணுவச் சீருடையில் சட்டமன்றத் துக்குப் போனார்கள். பெரும் தரகு முதலாளி பிர்லா, டில்லிக் குடிமக்கள் கைத் துப்பாக்கிப் பயற்சிக்காக ஒரு சிறு சுடு களம் கட்டிக் கொடுத்தார். தேசத் துக்குச் சேவை செய்ய தயார் என்று கூறி இரத்தக் கையெழுத்திட்ட கடிதங்கள் வந்தன. டில்லி நகர பூங்காக்களில் பதுங்குப் குழிகளை வெட்டினர்; அரசு அலுவலகங்கள் முன்பு மணல் மூட் டைகள் அடுக்கப்பட்டன. நடிகர் நடி கைகள் ''போர்முனை''க்குப் போய் இராணுவத்தினருக்கான கலை நிகழ்ச் சிகள் நடத்தினர்.

இவ்வளவு ஆர்ப்பாட்டங்களுக்கு மத்தியில் இந்திய இராணுவத்திற்கு நேர்ந்த தோல்விகள் மறைக்கப்பட்டன. ''நாம் போரை விரும்பவில்லை. அரசி யல் தலைவர்கள் உத்தரவு போட வில்லை. இராணுவத்தினர் தான் முடிவு செய்து சாவடிகளை அமைத்து நிலை கொண்டனர்'' என்று சமாதா னம் கூறிய நேரு நீண்ட போர் சவடால் களை அடித்தார். ''ஆரம்ப தோல்வி களை முறியடித்து இந்திய இராணுவம் திருப்பித் தாக்கி முன்னேறுகிறது'' என்று பொய்ச் செய்திகள் பத்திரிக்கை களில் வந்தன. உத்தம சீலனாகச் சித்தி ரிக்கப்படும் லால் பகதூர் சாஸ்திரியே இந்த புளுகு-வதந்திகளை தலைமை யேற்று பரப்பினார்.

ஆனால் இந்திய இராணுவம் குழப் பம், பீதியிலேயே மூழ்கி கிடந்தது. பொறுப்பேற்று நான்கு நாட்களாக கள நிலைமையை பார்வையிட்டு படையை வழி நடத்த துவங்கியிருந்தார் தளபதி ஹர்பக்ஷ் சிங். ஐந்தாம் நாள் மீண்டும் தளபதி கௌல் பொறுப்பேற்றார் என்று வானொலி செய்தி வந்தது. கிழக்கு மண்டல ஆணையகத் தளபதி சென் இந்த ஆள் மாற்றம் குறித்து கடும் எதிர்ப்புத் தெரிவித்தார். இது அர சாங்க நிர்ப்பந்தம் என்று கூறி தலைமை தளபதி எதிர்ப்பை நிராகரித்தார். ஏனெனில் கௌல டில்லிக்கு ஓடி வந் ததும் அவர் கைது செய்யப்பட்டு வீட்டுக் காவலில் இருப்பதாக வதந்தி பரவியி ருந்தது. அதை மறுத்து தனது உறவுக் காரரும் செல்லப்பிள்ளையுமான கௌலின் திறமையைப் பாராட்டி நீண்ட உரையாற்றிய நேரு மீண்டும் கௌலுக்கு பதவி போட்டுக் கொடுத் தார். ஆனால் ''போர் அனுபவமோ திறமையோ இல்லாதவர்'' என்று முன் னாள் தளபதி திம்மையா வால்சாடப்பட் டவர் கௌல். கீழ் அதிகாரிகளும் அவரை மதிக்கவில்லை. இருந்தாலும் மீண்டும் பதவி-பொறுப்பேற்று வடகிழக்குப் பிராந்தியத்துக்குப் போனார்.

அடிக்கடி போர் முனை ஆணை யாளர்களை மாற்றி குழம்பிக் கிடந்த அதே சமயம் நேருவின் பிறந்த நாளான நவம்பர் 14-ந் தேதி வூலாங் முனை யிலே தாக்கி மக்மகோன் கோடு வரை விரட்டி விடுவது என்று கௌலும் அவ ரது கையாட்களும் முடிவு செய்தனர். அதற்காக படைகளை குவித்தனர்.

சீன இராணுவத்திற்கு எதிராக பல முறை போரிட்டு தோல்வியுற்று பின் வாங்கி களைத்துப் போயிருந்த குமா யூன் படைப் பிரிவினரை ''நேரு பிறந்த நாள் தாக்குதல்'' தொடுக்கும்படி கௌல் உத்தரவிட்டார். ஆறு மணி நேர சண்டைக்குப் பின் தோல்வியே கண்டனர். இருந்தபோதும் ''இந்திய இராணுவம் தாக்குகிறது'' என்று அடுத்த நாள் பத்திரிக்கைகள் எழுதின.

அன்னிய இராணுவத்தை வரவழைக்க வேண்டும் என்பது கௌலுடைய யோசனைகள்.

தலைமை தளபதி உத்தரவுப் போட் டும் தனது படையின் தலைமையகமான தேஜ்பூருக்குக் கூட கௌல் போக வில்லை. கடைசியாக நவம்பர் 17ந் தேதி ஒரு ஹெலிகாப்டர் மூலம் ஹாயூ லியாங் என்ற இடத்துக்குப் போனார். அங்கே நேரு பிறந்த நாள் தாக்குதலுக் குப் பிறகு தோற்று ஓடி வந்து குலைப் பட்டினியாய் கிடக்கும் பிரிகேடியரின் படைப் பிரிவைக் கண்டார். சில அதி காரிகளாவது தன்னுடன் வந்து பசி யாறி விட்டுத் திரும்பும் படி அழைத் தார். அவர்கள் மறுத்து விட்டனர். தள பதிகள் தபாரும் சென்னும் தேஜ்பூர் வருவதாக செய்தி வரவே கௌல் மட் டும் திரும்பினார். இதற்கிடையே வடக்கே லடாக் பிராந்தியத்தில் சீனர்



நேரு - ராதாகிருஷ்ணன்.

கள் உரிமை பாராட்டிய சுசூல் வரை முன்னேறி நிலை கொண்டனர். அங்கே இந்திய இராணுவத்துக்குப் பெரிய அளவு இழப்பின்றி கீழதிகாரிகள் திற மையினால் தப்பியது.

குமாயூன் படைப்பிரிவைத் துரத்தி வந்த சீன இராணுவம் பிரதான இரா ணுவ முகாமை தாக்கி அழித்தது. தலைமை தாங்கிய பிரிகேடியர் பத்தா னியா மட்டுமே தப்பி வந்தார். ''பன் மடங்கு பலம் வாய்ந்த சீனர்களை இனி யும் நாம் எதிர்கொள்ள முடியாது.

எனவே முன்பு நான் சொன்னதைப் போல, ஏதாவது அன்னிய இராணு வத்தின் உதவியை நாடும்படி மேலிடத் திடம் கோருகிறேன். பயத்தினால் இதைச் சொல்லவில்லை. நிதர்சன மான யதார்த்தத்தை எதிர்கொள்ள வேண்டி உள்ளது'' என்று வெட்க மின்றி செய்தி அனுப்பினார் தேசத் துரோகி கௌல். புது டில்லியில் அவர் ''ஓய்வு'' கொண்டிருந்த போது சந்தித்த அமைச்சரவை செயலாளரிடம் இப்படி ஒரு யோசனையை எழுதிக் கொடுத்தி ருந்தார். சீன துரோகி சியாங்கே ஷேக் கையும், தென் கொரியாவையும், அமெரிக்க உதவியோடு சீனாவுக்கு எதி ராகப் படையெடுக்கும் படி தூண்ட வேண்டும்; இந்தியாவின் சார்பாக

வடகிழக்கே ''சேலா''வில் நிலை கொள்வது என்று முடிவு செய்து சேலா முதல் பொம்மிடிலா வரை 60 மைல் பரப்பளவில் இராணுவத்தைப் பரத்தி வைப்பது என்ற முட்டாள்தனமான முடிவு பெரும் தோல்விக்கும் இழப்புக் கும் காரணமாக இருந்தது. தாவாங்குக் குப் பிறகு சேலா, திராங் திஜோங், பொம்மிடிலா, ஆகிய மூன்று இடங் களும் அடுத்தடுத்து உள்ளன. ''சேலா'' வுக்கும் பொம்மிடிலாவுக்கும் இடையே பழைய வர்த்தக பாதையான பெய்லி பாதை மூலமாக வந்து சீன இராணுவம் சேலாவில் நிலை கொண்டுள்ள இந்தி யப் படைப்பிரிவை வளைத்துக் கொள்ள முயன்றது. முதல் தாக்குதலை முறியடித்த பின் சேலாவிலிருந்து பின் வாங்குவதற்கு தளபதி பத்தானியா அனுமதி கோரினார். அப்போது தள

படிப்பகம்

www.padippakam.com

பதி கௌல் தலைமையகம் தேஜ்பூரில் இல்லை. அவருக்கும் மேலதிகாரிகளான தபாரும் சென்னும் இருந்தனர். அவர்களுக்கு அதிகாரம் இருந்த போதும் முடிவெடுக்கப் பயந்து நழுவிக் கொண்டனர். கௌல் வந்த பிறகு கலந்தாலோசித்து சேலாவிலிருந்து பின் வாங்க அனுமதி அளிக்கும் உத்தர விட்டார். அந்த உத்தரவு சேலா முகாமுக்குப் போகும் முன்பே தடுத்து ரத்து செய்யப்பட்டது. ஏனெனில் ''12 ஆயிரம் துருப்புகள் எதிரியைச் சந்தித்து போரிடாமல் தப்பியோடி வருவதை அறிந்தால் தேசமே கோபமடையும்'' என்று பிரிகேடியர் பாலித் கூறிய கருத்தைத் தளபதிகள் ஏற்றனர்.

''முடிந்தவரை சேலாவில் நின்று போரிடுங்கள். சேலாவுக்கும் பொம்மிடிலாவுக்கும் இடையிலான பாதையை எதிரிகள் துண்டித்து விட்டார்கள்.



கிருஷ்ணமேனன் - நேரு.

அதை முறியடிப்பதற்குப் படை அனுப்பியுள்ளோம். நீங்கள் துண்டிக்கப்பட்டு விடலாம். முடிந்தவரை போரிடுங்கள். தாக்குப் பிடிக்கவில்லையென்றால் பின் வாங்கும் அதிகாரத்தை தருகிறோம்'' என்று பொறுப்பிலிருந்து நழுவிக் கொள்ளும் அயோக்கியத்தனமான உத்தரவை அனுப்பினார்கள் போர் முனையில் உள்ள தளபதி பத்தானியாவுக்கு.

இதற்கிடையே சீனர்களின் சாலை துண்டிப்பை அகற்றும்படி பிரிகேடியர் குர்பக்ஷ் சிங் தலைமையில் ஒரு டாங்கி மற்றும் காலாட்படையை கௌல் அனுப்பினார். பொம்மிடிலா முகாம் பாதுகாப்பின்றி போகும் பனி மூடிய இரவில் சிரமமான பாதை வழியே போய் எதிரியை முறியடிக்க முடியாது என்று குர்பக்ஷ் சிங் எதிர்த்தார். அடுத்தநாள் காலை வரை அந்த உத்தரவையும் கௌல் நிறுத்தி வைத்தார்.

''பின் வாங்குவதற்கு தயாராய் இருங்கள்; காலையில் உத்தரவு வரும்''

படைக்கு கௌல் அனுப்பினார். ஆனால் அது காலையில் தான் கிடைத்தது. அதற்குள் பின் வாங்குவதே கிடையாது என்று முடிவு செய்து தாக்குதலுக்கு தயார் செய்தார் பிரிகேடியர் ஹோஷியார் சிங். ஆனால் முடிவை மாற்றிக் கொண்டு சேலாவிலிருந்து படைகள் விலக தொடங்கின. இப்படி யார் உத்தரவுப் போட்டார்கள் என்பது தெளிவாக வில்லை. பின் வாங்கிச் சென்ற இந்தியப் படையை தொடர்ந்து சென்ற சீன இராணுவத்தினர் சுட வில்லை. காலியான நிலைகளை அமைதியாகவே கைப்பற்றினர்.

திராங்தேஜோங் முகாமில் துளியும் கிளர்ச்சியுறாமல் அதிகாரிகள் உட்பட படையினர் தூங்கிக் கொண்டிருந்தனர். போர் நெருங்குவதற்கான அறிகுறியே இல்லை. சேலாவில் இருந்து பின் வாங்கும் இந்தியப் படைகளை சீனர்கள் குறுக்கிட்டு வளைத்துக் கொண்டுள்ளனர் என்ற செய்தி தளபதி பத்தானியாவுக்கு வந்தது. அதை மீட்க திராங்தேஜோங்கில் இருந்து அனுப்பப்பட்ட படை கடுந் தாக்குதலுக்குள்ளானது. பத்தானியா இருந்த கோட்டத் தலைமையகத்தை சீனப் படை நெருங்கியதும் அதையும் காலி செய்து விட்டு கவச வண்டிகள் முதலிய கனரக ஆயுதங்களைக் கைவிட்டு பொம்மிடிலாவுக்குப் படையை பின் வாங்கி நடத்திச் சென்றார். மலையடிவாரத்தில் உள்ள ஃபூடாங்கை அவர் அடைந்த போது பொம்மிடிலாவும் வீழ்ந்து விட்டதாக அறிந்தார்.

திராங்தேஜோங்கில் எஞ்சியிருந்த துருப்புகள் தலைமையின்றியே ஒன்று குவிந்து பொம்மிடிலாவுக்கு திரும்ப முடிவு செய்தனர். ஆனால் வழி மறித்து சீனா தாக்கிய போது அதுவும் கலைந்து சிறு சிறு குழுக்களாக பிரிந்து போயின. சேலாவிலிருந்து பின் வாங்கிய படைப் பிரிவும் வளைத்துத் தாக்கப்பட்டு

வரும் அழிக்கப்பட்டனர். திராங்தேஜோங் காலி செய்யப்பட்டதை அறியாத கௌல் படைத் திரட்டி சீனர்களை தாக்கும் படி பிரிகேடியர் குர்பக்ஷ் சிங்கிக்குக் கௌல் உத்தரவு போட்டார். அவர் எதிர்ப்புத் தெரிவித்ததும் ஆத்திரம் அடைந்த கௌல் என்ன நேர்ந்தாலும் தாக்கும்படி கட்டளையிட்டார். கடும் தாக்குதலுக்கும் இழப்புக்கும் இலக்காகவே ரூபா என்ற இடத்துக்கு பின்வாங்கும்படி குர்பக்ஷ் சிங் தீர்மானித்தார். அங்கு புதிய படைப்பிரிவினர் வந்து பலப்படுத்துவர் என்று எதிர்பார்த்தார். ரூபாவுக்கு முன்னமேயே ஒரு பிரிவும் பிரிகேடு தலைமையகம் காலி செய்யப்பட்ட பொம்மிடிலாவுக்கு ஒரு பிரிவும் வந்து சேர்ந்தன. சீனர்கள் தாக்கவில்லை. குர்பக்ஷ் சிங் போய் அதை மீட்டார்.

சமவெளிக்கு சற்று உயரமாக இருந்த ரூபாவின் நிலை கொள்ளும்படி கௌல் உத்தரவு கிடைத்த போது, படையினர் பின் வாங்கிக் கொண்டிருந்தனர். அவர்கள் மீண்டும் ரூபாவுக்குத் திரும்பினர். அங்கும் தாக்குதல் துவங்க சாக்கு என்ற இடத்துக்குப் பின் வாங்கும்படி உத்தரவு வந்தபோதும், ஒரு படைப்பிரிவு மட்டுமே போரிட்டு இழப்புக்குள்ளாகி சிதறிப் போனது. அத்துடன் சீன வெற்றியும் இந்திய தோல்வியும் பூரணமாகியது. ஆனால் சீனர்கள் முன்னேறி தாக்குவார்கள் என்று அஞ்சி தேஜ்பூரையும் காலி செய்து விட்டு 100 மைலுக்கு அப்பால் உள்ள கௌகாத்திக்குப் பின் வாங்குவது என்று கௌல் முடிவு செய்தார். ஒரு சிறு படைப்பிரிவு தவிர அனைவரும் கௌகாத்திக்கு ஓடினர்.

வாலோங் வீழ்ந்த செய்த நான்கு நாட்களுக்குப் பிறகு தான் டெல்லியை எட்டியது. தாக்லா மலை முகட்டு வரை தோல்வி ஏற்படுத்தியதை விட அதிகமான தோல்வியை ஏற்படுத்தியது. எதிர்பாராமல் திடீரென்று தாக்கி சீனர்கள் வாலோங்கை கைப்பற்றி விட்டார்கள் என்றே இந்தியர்கள் நம்பினார்கள். ஆனால் மூன்று வாரத் தயாரிப்புக்குப் பின் வலிந்து திட்டமிட்ட தாக்குதலில் இந்தியப் படை தோற்றது. வாலோங்கோடு சேலாவும் வீழ்ந்தது என்று நேரு நாடாளுமன்றத்தில் அறிவித்த போது அவை நிசப்தமாக கேட்டது. அன்று வானொலியில் நேரு உரையாற்றினார். அப்போது விரைவிலேயே அசாம் மாநிலம் சீன ஆக்கிரமிப்பின் கீழ் வரும் என்பதற்காக நேரு வருந்தினார். அதே சமயம் எதிரியை எப்படியும் விரட்டி விடுவோம் என்று வீம்புக்கு சூளுரைத்தார்.

''இறுதிக்கால பீதி டெல்லியைப் பற்றிக் கொண்டது பொதுமக்களின் தார்மீக ஆர்வம் - உணர்வு குன்றிப் போவதை முதன் முறையாக பார்த்தேன்'' என்று அமெரிக்கத் தூதர் நாட் குறிப்பு எழுதினார். தேஜ்பூரை சீனர்கள் கைப்பற்றுவார்கள்; விமானம் மூலம் அதிரடிப்படையினரை புதுடில்

படிப்பகம்

www.padippakam.com

போன்ற வதந்திகளும் பயங்கர பீதியும் எங்கும் நிலவியது

சீனாவுக்கு எதிராக வெடிகுண்டுகளை, வீசி தாக்கும் - போரிடும் விமானங்களை கொண்டு தலையிட்டுத் தாக்கும்படி அமெரிக்காவுக்கு நேரு நேரடியான அவசர வேண்டுகோள் விடுத்தார். இந்தியப் பிராந்தியத்தில் சீன இராணுவம் முன்னேறினாலும் சீன விமானப் படை தாக்கினாலும் அவற்றிற்கு எதிராக போரிட்டு இந்திய ராணுவத்துக்கு அமெரிக்க விமானங்கள் கவசமாக இருக்கும் என்று நேரு நம்பினார். எவ்வளவு அமெரிக்க விமானப் படைகள் வேண்டும் என்பதை கூட குறிப்பிட்டிருந்தார். (5-12-64 டைம்ஸ் ஏடு) இந்த வேண்டுகோள் பற்றி மந்திரி சபையிடம் கலந்தாலோசிக்கவோ தெரிவிக்கவோ இல்லை. இராணுவத்தினரின் சிபாரிசின் பேரில் நேருவே முடிவு செய்தார். வழக்கமாக வெளியுறவு இலாகாவில் இருக்க வேண்டிய இதன் பிரதி பிரதமரின் அலுவலகத்திலேயே மறைத்து வைக்கப் பட்டது.

(இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு அதாவது 1965-ல் சுதிர்கோஷ் என்ற காங்கிரஸ் எம்.பி., அமெரிக்க அதிபர் கென்னடியை சந்தித்த போது இதை அறிந்ததால்;நடுநிலை நாயகனாக நடித்த நேருவின் அயோக்கியத்தனம் கண்டு ஆத்திரத்தோடு வெடித்தார் சுதிர் கோஷ். அப்போது பிரதமராக ஆகி இருந்த லால் பகதூரை அழைத்து, ''அமெரிக்க ராணுவத்தை தலையிடும் படி நேரு கோரியதற்கு கோப்புகளில் ஆதாரம் இல்லை என்று சமாதானம் சொன்னார். அமெரிக்காவிடம் விசாரியுங்கள்; தவறு இருந்தால் மன்னிப்பக் கோருகிறேன்'' என்றார் சுதிர்கோஷ். அமெரிக்க தூதரகமே நேருவின் வேண்டுகோளை உறுதி செய்தது. பிறகு அமெரிக்க தூதர் கால்பிரைத்தினுடைய ''ஜர்னல்'' மூலமாக அதன் நகல் வெளியானது.

இதையெல்லாம் மறைத்து விட்டு ''அமெரிக்க விமானந் தாங்கி கப்பலை அனுப்பும்படி நேரு கோரியதாக கோஷ் சொன்னார். அதை அவர் கோரவும் இல்லை. அப்படி எதுவும் வரவில்லை'' என்று வேறொரு விவகாரம் பற்றி நாடாளுமன்றத்திலே லால்பகதூர் மழுப்பினார். அப்போது பிரச்சினையை கிளறாதுமௌனமாக இருந்து விட்ட கோஷ் பின்னர் எழுதிய தனது சுய சரிதையில் மீண்டும் உறுதிப் படுத்தினார்)

நேருவின் வேண்டுகோளை ஏற்று அமெரிக்க விமானந்தாங்கி கப்பல் இந்தியாவுக்கு புறப்பட்டது. அதற்குள்ளாகவே சீனா ஒருதலை பட்சமாக போர் நிறுத்தம் அறிவித்து விடவே அமெரிக்க கப்பல் திரும்பி விட்டது. ஆனால் நேருவின் ஆட்சி ஆட்டம் காண ஆரம்பித்து விட்டது. காங்கிரசு மற்றும் எதிர்கட்சி எம்.பிக்கள் சிலர் அரசு தலைவர் ராதாகிருஷ்ணனை சந்தித்தனர். எப்படியாவது நாடாளுமன்றத்தை கலைக்கு

**சீனாவுக்கு எதிராக வெடி குண்டுகளை வீசித் தாக்கும் -போரிடும் விமானங்களைக் கொண்டு தலையிட்டு தாக்கும்படி அமெரிக்காவுக்கு நேரு நேரடியான, அவசர வேண்டுகோள் விடுத்தார்.**

கடனப்படுத்தும் படி கோரினர். ஆனால் அதற்கு சட்டத்தில் இடம் இல்லை என்று கூறி ராதாகிருஷ்ணன் மறுத்து விட்டார். எனினும் அவர் மீது நேருவுக்கு சந்தேகம் ஏற்பட்டது. அதனால் தான் அவரது பதவியை நீட்டிப்பதை பிறகு எதிர்த்தார். இன்னும் சில மணி நேரங்களில் பிரம்மபுத்திராவின் கரையிலுள்ள தேஜ்பூரை தாக்கி சீனா கைப்பற்றும் என்ற வதந்தி நவம்பர் 18ம் தேதி பரவியது. ராணுவ நிலைமைகளை அவ்வப்போது தனக்கு தெரிவிக்கும்படியும், எச்சரிக்கைகள் செய்து மாவட்ட கலக்டருக்கு கௌல் தொலைபேசி மூலம் கட்டளையிட்டார். அவை கேட்டு பீதியடைந்தகலெக்டர் குடும்பத்தோடு கல்கத்தாவுக்கு ஓடிப் போனார். சிவில் நிர்வாகம் முற்றாகி நிலைகுலைந்து போனது. தேஜ்பூர் மக்களுடைய பாதுகாப்புக்குத் தாம் இனிமேலும் பொறுப்பல்ல என்று ஒலிப் பெருக்கி மூலம் உள்ளூர் நிர்வாகம் அறிவித்தது. உள்ளூர் அரசியல் தலைவர்கள் மக்களை திரட்டி, ''இந்திய பாதுகாப்பாக தேஜ்பூர் விளங்கும் செத்தாலும் இங்கே சாவோம் வெளியேற மாட்டோம்'' என்று வெற்றுச் சவடால் அடித்தார்கள்.

விடுதலை செய்யப்பட்ட சிறை கைதிகள், மனநோயாளிகள் உட்பட பெருங் கூட்டம் பிரம்மபுத்திரா நதிக் கரையில் கூடியது. 300, 400 பேரே ஏறக் கூடிய படகுகள் ஆயிரம் பேரைச் சுமந்து சென்றது. அரசு வங்கிகளில் 3 கோடி ரூபாய் நோட்டுக்களைக் கொளுத்திய போது எரியும் தீயிலிருந்து அவற்றை கைப்பற்ற பலர் முயன்றனர். குளத்திலே வீசப்பட்ட நாணயங்களை எடுப்பதற்குப் பலரும் பாய்ந்தனர். மின் நிலையம் போன்ற உயிராதாரமான சேவைகளை ராணுவம் மேற்கொண்டது. அஸ்ஸாம் சிவிலின் பாதுகாப்பு இயக்குனர் ''தீய்க்கும் கொள்கை (Scarching policy)''யை அமுலாக்கினார். தேஜ்பூர் விமான நிலையம், திக்போய் எண்ணெய் கிணறுகள் உட்பட சாத்தியமான அனைத்துக்கும் வெடி வைத்து தகர்த்து விட திட்டமிட்டார். தேயிலைத் தோட்டங்களுக்கும் தீயிட முடிவு செய்தார். படிப்பகம் மின் நிலையங்கள் போன்றவை தகர்ப்பதற்கு தகுந்த அட்

தேஜ்பூரை சீனர்கள் கைப்பற்றினால் இளைஞர்களை மூளைச் சலவை செய்து விடுவார்கள் என்று கருதி முதலில் அவர்களை வெளியேற்றினர். அப்புறம் அரசு அதிகாரிகளின் குடும்பத்தினரை வெளியேற்றனர். அந்தப் பட்டியலில் மந்திரிகளை சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று அஸ்ஸாம் அரசாங்கம் தீவிரமாக சிபாரிசு செய்தது. எதிரிகளிடம் மந்திரிகள் சிக்கினால் தேசிய அவமானமாகி விடும் என்று அரசு வாதிட்டது. (வரிகளுக் கிடையே என்ற குல்தீப் நய்யாரின் நூல், பக்.191). கௌகாத்தியில் சீன விமானங்கள் அதிரடிப்படையினரை இறக்கி விடுவார்கள் என்று இரண்டு மந்திரிகளிடம் கௌல் சொன்னார். படையினர் பின் வாங்கி ஓடியதால் சாலைகளில் நெரிசல்வேறு ஏற்பட்டது.

தலைமை தளபதி தபார் ராஜினாமா செய்தார். இராணுவ மந்திரியும் இல்லை. கௌலையே தலைமை தளபதியாக நியமிக்கும் படி அரசு தலைவருக்கு நேரு சிபாரிசு செய்தார். அது முட்டாள்தனமாக இருக்கும் என்று கூறி ஜே.என்.சௌதுரியை அரசு தலைவர் முன் மொழிந்தார். நேருவும் ஏற்றுக் கொண்டார். அவர் பதவியேற்றதும் கௌலுக்குக் ''கல்தா'' கொடுத்து விட்டு சாம் மனேக்ஷாவை போர் அரங்க தளபதியாக்கினார்.

தேஜ்பூர் நிர்வாகம் நிலை குலைந்ததை அறிந்து லால் பகதூர் தலைமையிலான ஒரு குழுவை அனுப்புவதென நேரு முடிவு செய்தார். புதுடில்லி விமான நிலையத்தில் அக்குழு காத்திருந்த போது, பத்திரிக்கை கடையில் கூட்டத்தை கண்டு, செய்தி அறிந்தது; சீனா போரை நிறுத்திப் பின் வாங்குவதாக பிரகடனம் செய்து விட்டது. லால் பகதூர் குழு நேருவை தேடி ஓடிய போது அவர் தூங்கி எழுந்திருந்தார். போர் நிறுத்தம் பற்றி பல மணி நேரத்துக்கு முன்பே பத்திரிக்கை செய்தி வந்தும் தனக்குத் தெரியாது என்றார், நேரு. இந்தியாவை ஆக்ரமிப்பதற்காக அல்ல, பாடம் புகட்டவே சீனா படையெடுத்தது என்பதை இப்படித் தான் அரசாங்கம் அறிந்து கொண்டது!

தேஜ்பூர் நிர்வாகம் நிலை குலைந்ததை அறிந்து லால் பகதூர் தலைமையிலான ஒரு குழுவை அனுப்புவதென நேரு முடிவு செய்தார். புதுடில்லி விமான நிலையத்தில் அக்குழு காத்திருந்த போது, பத்திரிக்கை கடையில் கூட்டத்தை கண்டு, செய்தி அறிந்தது; சீனா போரை நிறுத்திப் பின் வாங்குவதாக பிரகடனம் செய்து விட்டது. லால் பகதூர் குழு நேருவை தேடி ஓடிய போது அவர் தூங்கி எழுந்திருந்தார். போர் நிறுத்தம் பற்றி பல மணி நேரத்துக்கு முன்பே பத்திரிக்கை செய்தி வந்தும் தனக்குத் தெரியாது என்றார், நேரு. இந்தியாவை ஆக்ரமிப்பதற்காக அல்ல, பாடம் புகட்டவே சீனா படையெடுத்தது என்பதை இப்படித் தான் அரசாங்கம் அறிந்து கொண்டது!

www.padippakam.com

வாக்களிக்கும் வயது வரம்பைப் பதினெட்டாகக் குறைத்ததன் மூலம் இந்திய இளைஞர்களின் இருண்ட எதிர்கால வாழ்க்கையில் ஒளியேற்றிவிட்டதாக ஏதோ கிடைத்தற்கரிய பெரிய உரிமையை வாரிவழங்கிவிட்டதாக எல்லா ஓட்டுக் கட்சிகளுமே கூச்சல்போடுகின்றன. ஏற்கனவே பலமுறை வாக்களித்த மக்கள் தம்முடைய வாழ்விலே அதனால் சுபிட்சத்தைக் கண்டு விடவில்லை.

ஓட்டுப் போடுவதனால் தம்மை நிரந்தரமாக சுரண்டும் தரகு அதிகாரவாக்க முதலாளிகள் - நிலப்பிரபுக்களின் சர்வாதிகாரத்தை மாற்றிவிட முடியவில்லை. தம்மை நிரந்தரமாக ஒடுக்கும் அதிகார வர்க்கம், இராணுவம், போலீசு, வழக்குமன்றங்கள், சிறைச்சாலைகள் அடங்கிய வன்முறை அரசு எந்திரத்தின் சர்வாதிகாரத்தை ஒழித்துக் கட்ட முடியவில்லை. இன்னுமொரு 5 கோடி இளைஞர்கள் வாக்களிப்பதனால் என்ன சாதித்துவிட முடியும்?

பசியால் துடிக்கும் குழந்தையின் வாயிலே 'ரப்பர் காம்பை'த் திணிப்பது போல இந்திய இளைஞர்களுக்கு வாக்களிக்கும் வாய்ப்பைக் கொடுத்து ஏய்த்துவிட எத்தணிக்கிறார்கள். 'ரப்பர் காம்பை' மென்றுமென்று துப்பிடும் குழந்தையைப் போல இதையும் புறக்கணித்து புரட்சிப் பாதையை இளைஞர்கள் நிச்சயம் தெரிந்து எடுத்துக் கொள்வார்கள். ஒரு தாயின் பாசமான அணைப்பையும், ஒரு பிள்ளைப் பிடிப்பவளின் தந்திரத்தையும் எந்தக் குழந்தையும் வேறுபடுத்தி உணர முடியும். அதுபோல இந்த ஓட்டுப் பொறுக்கிகள் விரிக்கும் சூழ்ச்சி வலையில் சிக்கி நீண்ட நாட்கள் இந்திய இளைஞர்கள் ஏமாந்துவிடமாட்டார்கள்.

# 18 வயதினருக்கும் வாக்குரிமை ஓட்டுச்சீட்டு தேவையில்லை! அதிகாரம்தான் வேண்டும்!

நாடாளுமன்ற, சட்டமன்றப் பொதுத் தேர்தல்களில் வாக்களிப்பதற்கான குறைந்தபட்ச வயது வரம்பை 21-இல் இருந்து 18-ஆக குறைக்கும் தீர்மானம் சட்டபூர்வமாகி விட்டது. நாடாளுமன்றமும், பாதிக்கும் மேலான மாநிலங்களின் சட்டமன்றங்களும் அத்தீர்மானத்தை நிறைவேற்றியதோடு அரசுத்தலைவரும் கைச்சாத்திட்டு விட்டார். வாக்காளர் பட்டியலில் அவர்களையும் சேர்க்கும் பணி மும்முரமாக நடக்கிறது. மே முதல் வாரத்துக்குள் அப்பணி முடிந்து விடுமாம்.

இதனால் 4.7 கோடிப்பேர் புதிதாக வாக்குரிமை பெறுவார்கள். தேர்தல் ஜனநாயக ஆட்சி முறையிலே உலகிலேயே பெரும் புரட்சியாம்! இவ்வளவு பேர், அதுவும் இளைஞர்கள் திடீரென்று, ஒரே சமயத்தில் வேறு எங்குமே வாக்குரிமை பெற்றதில்லையாம்! ''இளைஞர்களுக்கு, குறிப்பாக மாணவர்களுக்கு அரசியல் தேவையில்லை, கூடாது'' என்று இதுவரை உபதேசம் செய்து வந்த ஓட்டுக் கட்சித் தலைவர்கள் பலரும் இப்போது இளைஞர்களைத் தேடி ஓடுகிறார்கள்.

வாக்களிக்கும் வயது வரம்பைக் குறைத்ததும் இளைஞர்கள் அரசியல் ரீதியில் முக்கியமான சக்திகளாகி விட்டார்களாம்! அதாவது ஒவ்வொரு நாடாளுமன்றத் தொகுதியிலும் சராசரி 80,000 இளைஞர்கள் புதிய வாக்காளராகச் சேர்க்கப்படுவர். இவர்களிலே பாதிப்பேர் வாக்களித்தாலும் தேர்தல் முடிவுகளைத் தீர்மானிக்கும் சக்திகளாக இருப்பார்கள்; கணிசமான தொகுதிகளில் இளைஞர்கள் யாருக்குப் பெரும்பான்மையாக வாக்களிக்கிறார்களோ அவர்கள்தான் வெற்றி பெற முடியும். அதனால்தான் ஓட்டுக் கட்சிகள் அனைத்துக்கும் இளைஞர்கள் மீது திடீர் கரிசனம் பொத்துக் கொண்டு வருகிறது.

கட்சியிலும், ஆட்சியிலும் இளைஞர்களுக்குக் கொஞ்சம் இடமளிக்கத் துவங்கியுள்ளன, ஓட்டுக்கட்சிகள். உத்திரப்பிரதேசத்தின் மாவட்டக் குழுக்கள், கோட்டப் பிரிவுகள், நகரவைகள், கிராமப் பஞ்சாயத்துக்கள் மற்றும் உள்ளூர் கூட்டுறவுகளில் 900 இளைஞர்களுக்கு காங்கிரஸ் இடமளித்துள்ளது. மாவட்ட மண்டல மக்கள் கமிட்டிகளில் நிறைய இளைஞர்களுக்குத் தெலுங்கு தேசக்கட்சி பதவிகளை ஒதுக்கியது. மூன்றில் ஒரு பகுதி எம்.எல்.ஏ மற்றும் மந்திரி பதவிகளைத் தி.மு.க அளித்தது. ''விவசாயிகள் இயக்க''த்தைச் சேர்ந்த மிகவும் இளைஞரான கோபிநாத் முண்டேயை மராட்டிய மாநிலக்கட்சித்தலைவர் ஆக்கியது பாரதீய ஜனதா.

ஓட்டுக்கட்சிகள் இளைஞர்களுக்கு இவ்வளவு முக்கியத்துவமளிப்பது தேர்தலைக் குறித்துதானே தவிர வேறு எதுவுமில்லை. ''துணிந்து சொல்கிறேன், 18-க்கும் 21-க்கும் இடையிலான வயதுக்காரர்கள் ஒவ்வொருவரையும் இப்போது நடமாடும் ஓட்டுச்சீட்டாகவே நான் பார்க்கிறேன்'' என்று காங்கிரசுக் கட்சியின் மாணவர் சங்கத் தலைவர் மணீஷ்திவாரி பகிரங்கமாகவே ஒப்புக்கொள்கிறார்.

## ஓட்டுக்கட்சிகளின் ஏணிப்படிகளாக மாணவர்கள் - இளைஞர்கள்

போலிக்கம்யூனிஸ்டுக் கட்சிகள், குறிப்பாக 'மார்க்சிஸ்டு'க் கட்சி மற்றும் பாரதீய ஜனதா ஆகிய இரண்டும் தவிர வேறு ஓட்டுக்கட்சிகள் எதற்கும் அனைத்திந்திய ரீதியிலான இளைஞர், மாணவர் அமைப்புகள் வெகுகாலமாக இல்லை. சஞ்சய் காந்தி மற்றும் ராஜீவ் காந்தி ஆகியோரை அரசியலில் திணிப்பதற்கான உந்து தளமாக உருவாக்கப்பட்டதுதான் இளைஞர் காங்கிரசு. பின்னாளில் அதுவே ஒரு நிர்பந்தக் கும்பலாக வளர்ந்து விட்டது. அதே போல கருணாநிதியின் வாரிசு ஸ்டாலினை தலைமைக்குக் கொண்டு வருவதற்கான ''பயிற்சித்தள''மாக தி.மு.க இளைஞரணி கட்டப்பட்டது. பின்னாளில் அதுவும் தாய்கழகத்துக்கு இணையான-வலுவான அமைப்பாகி விட்டது. அசாமில் குடியேறிய 'அந்நியருக்கு' எதிரான போராட்டத்தைத் தலைமையேற்று நடத்திய அனைத்து அசாம் மாணவர் சங்கம் மற்றும் அனைத்து அசாம் மக்கள் இயக்கம் ஆகிய இரண்டும் அசாம் கணபரிஷத் அமைத்து ஆட்சியைப் படித்த பின் வலுவிழந்து போய்விட்டன.

பல்கலைக்கழகங்களிலும், பள்ளிகளிலுமாக 19 லட்சம் உறுப்பினர்களைக் கொண்டதாக 'மார்க்சிஸ்டு' கட்சித் தலைமையிலான இந்திய மாணவர் சங்கம் கூறிக்கொள்கிறது. 50 லட்சம் பேரை உறுப்பினராகக் கொண்ட ஜனநாயக வாலிபர் முன்னணியும் இருப்பதாகக் கூறிக் கொள்கிறது. ஆனால் இவ்விரு அமைப்புகளிலுமே உறுப்பினர்களாக ஆவதற்கு எந்த வித வரைமுறையும் கிடையாது. ஒரு ரூபாய் நன்கொடை தரும் அனைவரையும் உறுப்பினர் பட்டியலில் சேர்த்துக் கொள்கிறார்கள். அதற்கு அவர்கள் கொள்கையையோ, அமைப்பு விதியையோஏற்றுசெயல்படவேண்டியதில்லை. ஆனால் ஒவ்வொரு கிளையிலும் ஒரு சிறு குழு திருத்தல்வாத-போலிக் கம்யூனிஸ்டு கொள்கைகள் அடிப்படையில் சில சீர்திருத்த-சமூக சேவைகளில் ஈடுபடுகிறது. கோவில் விழாக்கள் நடத்துவது, சீட்டுப் பிடிப்பது, விளையாட்டுப் போட்டிகள் நடத்துவது, மன்றங்களில் சீட்டு-கேரம் விளையாடுவது, பிற்போக்கு நடனநிகழ்ச்சிகள் நடத்து

www.padippakam.com

வது போன்ற சீரழிவு மற்றும் பொழுது போக்கு நடவடிக்கைகளிலும் ஈடுபடு கின்றனர்.

ரஷ்யா மற்றும் பிற போலி சோச லிச நாடுகளின் சலுகைகளை அனு பவிக்கும் பிழைப்புவாத நோக்கத்துக் காக டாங்கே மற்றும் ராஜேஸ்வர ராவ் தலைமையிலான போலிக்கம்யூனிஸ்டு கட்சிகளின் தலைவர்களின் வாரிசு களைக் கொண்டு மாணவர் மற்றும் இளைஞர் பெரு மன்றங்கள் இயங்கு கின்றன. ஆனால் இவை வலுவானவை அல்ல.

பாரதீய ஜனதாக் கட்சியின் மாண வர் மற்றும் இளைஞர் அமைப்புகளின் பலம் என்பது இந்து மதவெறி ஆர். எஸ்.எஸ். அமைப்பின் பின்னணியைக் கொண்டதுதான். அவை மகாராஷ் டிரம் மற்றும் அதற்கு வடக்கே அணிகள் அடிப்படையில் வலுவானவையாக உள்ளன. மற்றபிற மாநிலங்களில் திட்டமிட்ட வேகத்துடன் வளர்ந்து வருகின்றன. ஆனால் அவற்றின் எண் ணிக்கையும், செயல்பாடுகளும் இரகசி யமாகவேஸ இருக்கின்றன. பள்ளிச் சிறுவர்களாக இருக்கும் போதே மத வெறி என்ற நஞ்சூட்டி இந்த அமைப்பு களுக்குள் இழுத்து வரப்படுகிறார்கள். உண்மையில் ஒரு பாசிசப்படையாக இந்த அமைப்புகள் வளர்க்கப்படு கின்றன.

1975-77 ஆண்டுகளின் அவசர நிலை இருண்ட ஆட்சியின் போது வேசித்தனமான பிறப்பெடுத்தது இளைஞர் காங்கிரசு. காந்தீய காங்கிரசு ஊழல் பெருச்சாளிகளின் வாரிசு களைச் சுற்றி அரசியல் பிழைப்புவாதி களைக் கொண்டு உருவாக்கப்பட்டது. பிஞ்சிலேயே லஞ்ச ஊழல் அதிகார முறைகேடுகளைக் கற்றுக் கொண்ட இந்தக் கும்பலின் யோக்கியதை மாஸ் கோவில் நடந்த இளைஞர் விழாவின் போது ஆபாச-அராஜமாக வெளிப் பட்டது. இந்திராவின் குற்றங்களை விசாரித்த ஷா கமிஷன் மன்றத்திலும் கோர்ட்டுகளிலும் புகுந்து கலவரம் செய்தது. இந்திரா கைதான போது விமானத்தை கடத்தி பரபரப்பேற்படுத் தியது. போலிக் கம்யூனிஸ்டுகளுக்கு எதிராக கல்கத்தாவில் தெருச்சண்டை கள் நடத்துவது ஆகியவற்றோடு பல சமூக விரோத கிரிமினல் குற்றங்களும் இளைஞர் காங்கிரசின் சாதனைகள். இப்போது வி.பி.சிங், அரிஃ் முகமது கான், ராம் ஜெத்மலானி. போன்ற எதிர்கட்சித் தலைவர்களை தாக்கும் படியும் ஏவி விடப்பட்டுள்ளார்கள்.

அவசர நிலை ஆட்சியின் போது காங்கிரஸ் பெற்றெடுத்த இன்னொரு அராஜகக் கும்பல் இந்திய தேசிய மாணவர் சங்கம். அரசாங்கத் திட்டங் களை போலவே தூம்பிக் கிடந்த இச் சங்கம் 1984-இல் முதல் மாநாட்டை நாக்பூரில் கூட்டியது. அங்கு கூடிய காங்கிரஸ் ரவுடிகள் மக்கள் குடியிருப்பு களில் புகுந்து பெண்களை பலாத்காரம் செய்தனர். விபச்சார விடுதிகளில் புகுந்து வெறியாட்டம் போட்டனர். தம்முடன் மாநாட்டிற்கு வந்த காந்தீய மாணவிகளையும் துன்புறுத்தினர். வரும் தேர்தலையொட்டி கடந்த மாதம் டெல்லியில் கூடியபோதும் அராஜமாக நடந்தனர். பாசிச தலைவர் ராஜீவ் பேசும் போதே பூனையை போல கத்தி, விசிலடித்து கலாட்டா செய்தனர்.

இன உணர்வும் கட்டுப்பாடும் மிக்க தாக தி.மு.க இளைஞரணி காட்டிக் கொள்கிறது. அமைப்பு ரீதியிலானது என்பதைத் தவிர எம்.ஜி.ஆர்-ஜெய லலிதா ரசிகர் மன்றத்திற்கும் தி.மு.க இளைஞரணிக்கும் அவ்வளவு வேறு பாடு கிடையாது. இரண்டுமே பிழைப்பு வாத அடிப்படையில் சீரழிந்த உள்ளூர் தலைமையைக் கொண்டதுதான். தி.மு.க மீண்டும் ஆட்சிக்கு வந்த பிறகு அரசியல் சலுகைகள் என்ற எலும்புத் துண்டைக் கவ்விக் கொள்ள இவர் களும் களத்தில் இறங்கி விட்டனர்.

**ஓட்டுக்கட்சிகளின் திடீர் கரிசனை சலுகைகளை காட்டி ஏய்ப்பு**

வாக்களிக்கும் வயது வரம்பை குறைப்பதாக முடிவு செய்ததும் புது வேகத்துடன் ஓட்டுக்கட்சிகள் இளை ஞர்களிடம் ஓடி வருகின்றனர். இதிலும் முந்திக் கொண்டது ''மார்க்சிஸ்டு'' கட்சியின் மாணவர் சங்கம்தான். வழக் கமாக கட்சித்தலைவர்களை கூப்பிட்டு நடத்தும் இச்சங்கம் கடந்த பிப்ரவரி கல்கத்தா மாநாட்டுக்கு கூட்டணி கட்சித் தலைவர்களை அழைத்திருந்தது. ஒரு லட்சம் பேரைக் கூட்டிப் பேரணி நடத்தி யது. தேர்தல் வெற்றியை குறிவைத்து கூட்டணி கட்சிகளின் மாணவர், இளைஞர் அமைப்புகளோடு சேர்ந்து கூட்டு இயக்கங்கள் நடத்துவதாகத் தீர்மானித்துள்ளது.

கடந்த மாதம் கூடி குழப்பமாக நடந்த காங்கிரசின் தேசிய மாணவர் சங்க மாநாடு மே முதல் வாரத்திற்குள் வட்டார கமிட்டிகளும், இளம் வாக் காளர் மன்றங்களும் அமைப்பதாக முடிவு செய்துள்ளது. இளைஞர்களின் ஓட்டுக்களை வளைத்து போடுவதற் காகவே 2,100 கோடி ரூபாய் செலவில் ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம் துவக்கியுள்ளது. படித்து வேலையின்றி இருப்பதாக பதிவு செய்து கொண்டு உள்ள 3 கோடி இளைஞர்களுக்கு இதனால் வேலை கிடைக்குமாம். இந்த பணம் முழுவதும் அதிகார வர்க்கமும், அரசியல் இடைத்தரகர்களும் முழுங்கி விடுவர்; எஞ்சியதை காங்கிரசு ரௌடி கள் சுருட்டிக் கொள்வார்கள் என்பது தெரிந்ததே!

இதற்கிடையே, வாக்களிக்கும் வயது வரம்பை குறைத்த பெருமைக்காக ஓட்டுக் கட்சிகள் அடித்துக் கொள்கின் றன. ''நாங்கள்தான் இதைச் சட்டமாக் கினோம்'' என்கிறது பாசிச ராஜீவ் கும்பல். ''எங்கள் திட்டத்தை திருடிக் கொண்டார்கள்'' என்று குற்றம் சாட்டுகிறது ஜனதா. ஏற்கனவே மாநில அளவில் நாங்கள் அமுலாக்கியதுதான் என்று பீற்றிக் கொள்கின்றன தெலுங்கு தேசமும், 'மார்க்சிஸ்டு' கட்சியும்.

''எல்லோருக்கும் கல்வியும் வேலையும்'' என்ற முழக்கத்தை புதி தாக பொறித்துக் கொண்டது காங்கிர சின் மாணவர் சங்கம். ''10 ஆண்டு களாக நாங்கள் முழங்கியதை அவர்கள் திருடிக் கொண்டார்கள்'' என்று மூக் கால் அழுகிறது 'மார்க்சிஸ்டு'களின் மாணவர் சங்கம். ஆனால் இதைச் சட்டமாக்கும் கோரிக்கையை காங்கிரஸ் நிராகரித்தே வந்திருக்கிறது. சட்டமாக் கும் படி தீர்மானத்திற்கு தாக்கீது கொடுத்த 'மார்க்சிஸ்டு' கட்சி எம்.பி.க் கள் விவாதம் நடத்தி நிராகரித்த போது



டெல்லி பல்கலைக்கழக மாணவர்களிடையே பேசுகிறார் வி.பி.சிங். ''நீங்கள் அரிசி கொண்டு வாருங்கள்; நான் உமி கொண்டு வருகிறேன்; கலந்து ஊதித் தின்போம்!'' என்கிறாரோ?

படிப்பகம்

www.padippakam.com

ஒருவர் கூட நாடாளுமன்றத்தில் இல்லை.

**வாக்குச்சீட்டுகளால் மூட முடியாது குமுறும் எரிமலை வெடிக்கும்!**

ஓட்டு பொறுக்குவதற்காக இளைஞர்களிடம் ஓடி வரும் ஓட்டுக் கட்சிகளிடம் அவர்களுக்காக உருப்படியான திட்டம் ஏதாவது இருக்கிறதா? பாசிச ராஜீவ் கும்பல் கொண்டு வந்துள்ள புதிய கல்வி கொள்கை இளைஞர்களுக்கான கல்வி உரிமையை பறிப்பது. உயர் கல்வியை சுயநிதிக் கல்வி நிலையங்களை நடத்தும் ஜாதி மத வெறி நிலப்பிரபுகளிடமும், தரகு முதலாளிகளிடமும் ஒப்படைப்பது. இளைஞர்களின் நிரந்தர வேலைக்கான திட்டங்கள் எதுவும் இல்லை. சத்துணவு திட்டம் போன்றதுதான் ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம். ஏற்கனவே கிராம புற ஒருகிணைந்த வளர்ச்சித் திட்டம், ஊரகத் தொழில் திட்டம் போன்ற

தாடும் இச்சமயத்தில் இந்து, சீக்கிய, முஸ்லிம் மதவெறியர்கள் இளைஞர்களைத் தமது நோக்கங்களுக்காக பயன் படுத்துவதும் அதிகமானது. பஞ்சாபிலே சீக்கிய மதவெறி பயங்கரவாதமும், ஷாரியத், சாத்தானின் பாசுரங்கள் ஆகிய விவகாரங்களில் முஸ்லிம் மத வெறியும், ராம ஜென்ம பூமி-பாப்ரி மசூதி மதமாற்ற விவகாரங்களில் இந்து மதவெறியும் கலவரங்களாகியும் இளைஞர்களை ஏராளமாக காவு கொள்கின்றன.

இன்னொரு புறம் நாகா, மிஜோ, மணிப்புரி, காஷ்மீர் மற்றும் போடோ, ஜார்கன் போன்ற தேசிய இன, தேசிய சிறுபான்மை இன போராட்டங்களில் இளைஞர்கள் தீவிரமாக பங்கேற்கின்றனர். நக்சல்பாரி புரட்சி இயக்கம் இன்னமும் இளைஞர்களின் ஈர்ப்பு மையமாக இருக்கிறது. சுருக்கமாக சொன்னால் எப்போதும் வெடிப்பதற்கு தயாராக இருக்கும் எரிமலையாக



பாசிச ராஜீவ் கும்பலின் சதி வழக்குகளை எதிர்த்து வாதாடும் எதிர்க்கட்சி வக்கீல் ராம்ஜெத்மலானியின் வீட்டைத் தாக்குவதற்கு பாய்கிறது இளைஞர் காங்கிரசு ரவுடிக் கும்பல்

வறுமை ஒழிப்புத் திட்டங்கள், பிழைப்பு வாத அரசியல் தரகர்களின் வளர்ச்சிக் குத்தான் போயின.

கடந்த ஐந்தாண்டுகளாக ஐந்து நட்சத்திர கலாச்சாரத்தை பரப்பி அந்நிய ஆபாச வக்கிர வாழ்க்கை நெறிகளுக்கு பழக்கப்படுத்தி, மாணவர்கள் இளைஞர்களை சீரழிவு படுகுழிக்குள் தள்ளுவதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்தது பாசிச ராஜீவ் கும்பல். ''வீடியோ விளையாட்டுக்கள், இரவு விடுதிகள், அந்நிய ஆபாச சினிமாக்கள் ஆகியவற்றை தாராளமாக இறக்குமதி செய்தது. இவற்றோடு பாரதீய ஜனதா கட்சி, ஆர்.எஸ்.எஸ்ஸின் மதவெறி மற்றும் போலி கம்யூனிஸ்டுகளின் பொருளாதார சீர்திருத்த வாதங்கள் ஆகியவைதான் இளைஞர்களுக்கான தேசிய மாற்றாகப் பிற ஓட்டுக்கட்சிகள் முன் வைத்தவை.

வேலையில்லாத் திண்டாட்டமும், கலாச்சாரச் சீரழிவுகளும் தலைவிரித்

இந்திய இளைஞர்கள் குமுறிக் கொண்டிருக்கிறார்கள். சரியான லட்சியமும், புரட்சிகரமான பாதையுமே அவர்களுக்குத் தேவையாக இருக்கிறது; சில்லரை சலுகைகள் அல்ல!

இந்திய இளைஞர்களின் குமுறும் எரிமலை வெடித்து விடக்கூடாது என்பதற்காக ஊற்றப்படும் நீர்தான் சீரழிவு கலாச்சாரம். எரிமலையின் வாயை அடைப்பதற்காக போடப்படும் வைக்கோல் மூடிதான் ஓட்டுச்சீட்டு உரிமை! இதுவரை அரசியலில் இருந்து இளைஞர்களை ஒதுக்கி வைப்பதன் மூலம் தங்களுடைய ஆதிக்க ஆட்சிக்கு ஆபத்தின்றி பார்த்துக் கொண்டார்கள். இப்போது தமது சுயநலனுக்காக இளைஞர்களை பெருமளவில் அரசியலுக்கு இழுத்து வருகிறார்கள்! புரட்சிகரமான லட்சியத்தையும் பாதையையும் இளைஞர்கள் பற்றிக் கொண்டு விடுவதற்கு வெகு நாளாகாது!

-ஆர்.கே.

## போலிகளின் புதிய குரு!

கடந்த ஏப்ரல் 23 அன்று கேரளாவில் இந்து மத ஸ்தாபகரமான ஆதிசங்கரர் பிறந்த ஊரான காலடியில் அவரது 12 வது நூற்றாண்டு விழாவை மத்திய - மாநில அரசுகள் கோலாகலமாகக் கொண்டாடின. பிரம்ம சூத்திரத்துக்கு பாஷ்யம் (விளக்கவுரை) எழுதிய ஆதிசங்கரர் இந்து மதத்தைப் புனரமைத்த வரலாறு ரத்தக்கறை படிந்தது; மதவெறியும் கொலை வெறியுமிக்கது! அக் காலத்தில் இந்தியாவில் செல்வாக்கோடு நிகழ்ந்த பௌத்த, ஜைன மதங்களைப் பூண்டோடு ஒழிக்கும் திருப் பணியில் சங்கரர் இறங்கினார். பௌத்த - ஜைன மதக் கோயில்களும் நூல்களும் தீக்கிரையாக்கப்பட்டன. மதகுருமார்கள் இந்து வெறியர்களால் கொல்லப்பட்டனர். அதன்பிறகே இந்து மதம் நிலைபெறலாயிற்று. இதைப் பல வரலாற்று ஆசிரியர்களும் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இந்த உண்மைகளை மூடி மறைத்துவிட்டு மாபெரும் தத்துவ - வித்தக மாமுனிவராக இந்து வெறியர்களும் இந்திய அரசும் - சங்கரரை ஏற்றிப் போற்றுகிறது. விழாவில் கலந்து கொண்ட குடியரசுத் துணைத் தலைவர் சங்கர் தயாள் சர்மா, ஆதிசங்கரரின் பெயரில் சமஸ்கிருத பல்கலைக் கழகம் துவங்க மத்திய அரசு ஒரு கோடி ரூபாய் வழங்க முடிவு செய்திருப்பதாகக் கூறினார். மத்திய மந்திரி கிருஷ்ண குமார், தேசிய அளவில் சங்கரஜெயந்தியைக் கொண்டாட மத்திய அரசு பரிசீலித்து வருவதாகக் கூறினார்.

மதசார்பற்ற அரசுஎன்று பீற்றிக் கொண்டு மந்திரி பிரதானிகள் மக்களது வரிப்பணத்தில் இப்படிக் கூத்தடித்தபோது, அந்த விழாவில் வெட்கமின்றி போலிக் கம்யூனிஸ்டுகள் பங்கேற்றதோடு, இந்துமத ஞான குருவுக்குப் புகழாரமும் சூட்டி புளகாங்கிதமடைந்தனர்.

கேரள போலிக்கம்யூனிஸ்டு முதல்வர்நாயனார் ''சங்கரரின் போதனைகளும் சிந்தனைகளும் மகத்தானவை; இன்றைய மாறிய சூழ்நிலையில் அவற்றுக்கு விளக்கம் தருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டார். போலிக் கம்யூனிஸ்டுக் கட்சியின் பொதுச் செயலாளரான ஈ.எம். சங்கர நம்பூதிரி தன் பங்குக்கு ''சங்கராச்சாரியும் நவீன உலகமும்'' என்ற தலைப்பில் கருத்தரங்கம் ஒன்றைத் துவக்கி வைத்து புகழ்ந்து தள்ளினார். போலிக் கம்யூனிஸ்டு மந்திரிகளும் பக்தி சிரத்தையோடு வந்து விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மறைந்த போலிக் கம்யூனிஸ்டுதலைவர் பி.ராமமூர்த்தி, வேதங்களிலும் உபநிடதங்களிலும் இசைநயமிக்க கவிதைகளில் தம் மனதைப் பறிகொடுத்ததாகப் பெருமைப்பட்டுக் கொண்டார். பின்னர் கேரளத்தில் அவரது வாரிசுகள் குருவாயூர் கோயில் நிர்வாகக் கமிட்டித் தலைவர் பதவிக்காக, பட்டையடித்துக்கொண்டு பக்தியில் மூழ்கிய 'மார்க்சிஸ்டு'' களானார்கள். மே. வங்கத்து போலிகள் தமது கட்சிப் பத்திரிக்கையை இந்து சனாதனிகளின் புகழ் பாடும் பஞ்சாங்கப் பத்திரிக்கையாகமாற்றினார்கள். இன்று ஒருபடி மேலே போய் சங்கராச்சாரியையே பூஜிக்குமளவுக்கு இந்து மத பக்தியில் மூழ்கிவிட்டார்கள். நல்ல முன்னேற்றம்தான்!

படிப்பகம்

www.padippakam.com




கருணாநிதியின் ஆண்டுக்கு ஐந்து நன்(!)நாட்களில் 5 கிலோ இலவச அரிசி வழங்கும் திட்டம்.

''நாளும் கிழமையும் நலிந்தோருக்கு இல்லை என்ற நிலையை மாற்றி வறுமைக் கோட்டிற்கு கீழே வாழும் ஏழை எளிய தமிழர் இல்லமெல்லாம் மகிழ்ச்சி குதுகுலம்'' என்று பலவண்ண ஆளுயர போஸ்டர்கள்; தலைவர்கள் மீது வாழ்த்துப்பா பாடி கை அகலம், கால் அகலம், முறம் அகலம் பிரசுரங்கள். சம்மந்தப்பட்ட ரேஷன் கடை முன்னால், தானைத்தலைவரின் அரிய நிழற் படங்கள். தட்டேந்தும் தரித்திர நிலையிலுள்ள தமிழர்களின் குழந்தைகளுடன் 'சரித்திர நாயகன், தானைத்தலைவர்' கலைஞர் கருணாநிதி சத்துணவு சாப்பிடுவது போல், இலவச அரிசி வாங்க வந்த பஞ்சைப் பராரி தமிழர்களை அன்போடு கையசைத்து அழைப்பதுபோல், மடியேந்தி, கையேந்தி, பையேந்தி வந்த, கல்தோன்றி மண்தோன்றிய காலத்திற்கு முன் தோன்றிய மூத்த குடி மறத்தமிழர்களிடம் 'இனாம்' அரிசியை ஒப்படைக்க காத்திருக்கும் கழக உடன்பிறப்புக்கள்! 'டாலடிக்கும் வெள்ளை தும்பைப்பூ வெங்காயச் சருகுச் சட்டையுடன், தாம்பு கயிறு 'சைஸ்' தங்க 'செயின்' 'டாலரில், கைவிரல் மோதிரங்களில்; கைக் கெடிகாரப் பட்டைகளில் - இப்படி உடம்பெல்லாம் தங்கமாய் 'கலைஞரை' சுமந்து கொண்டு 'கடமை'யே உருவாக காத்திருந்து கருணாநிதியின் புகழ்பாடிய அன்புத் தம்பிகளான உள்ளூர் எம்.எல்.ஏ.க்கள், மாண்புமிகு மந்திரிகள். இந்த மக்கள் ஊழியர்களின் இடுப்பு வரை குனிந்து குசலம் விசாரித்த 'நெறி' பிறழ்ாத அதிகாரிகள். காய்ந்த தலையுடன் அழுக்கடைந்த உடையுடன் கண்ணெல்லாம் பஞ்சாய் அடைந்திருக்க, முகத்தில் சிரிப்பை ஒட்டிக் கொண்டு மந்திரியுடன். சேர்ந்து போட்டோவுக்கு முகத்தைக் காண்பித்து விட்டு 'இனாம்' அரிசியை வாங்கிச் சென்ற உழைத்து ஓடாகிப்போன உழைப்பாளி தமிழ் மக்கள்.

ஐயகோ! தன்மானம் உள்ள எந்த தமிழனும் இந்தக் காட்சியைக் ... டு பூரித்துப் போக மாட்டான் கொ... ப்படைவான்! ஆனால் 'இனாம்' அரிசியில் சுருட்டிக் கொண்ட எச்சில் சோற்றில் வயிறு வளர்க்கும் கழக அடலேறுகள் குதூகலித்துப் போனார்கள்!

300 ரூபாய்க்கும் குறைவான மாத வருமானமுள்ள 81 லட்சம் குடும்பங்களுக்கு தலா 5 கிலோ இலவச அரிசி வழங்கிய திட்டத்தினால் அரசுக்கு 7 கோடி ரூபாய் செலவானதாக கணக்கு சொன்னார்கள், மாண்புமிகு மந்திரிகள். அவர்கள் கணக்குப்படியே வழங்கிய அரிசியின் மதிப்பு மட்டும்தான் 7 கோடி ரூபாய். அதை வழங்குவதற்கு அவர்கள் எடுத்த விளம்பரச் செலவு பல கோடி ரூபாய்! அதை வசதியாக மறைத்துவிட்டார்கள். ஏறக்குறைய தமிழகம் முழுவதும் 21,124 மையங்களின் மூலம் இந்த இலவச அரிசி வழங்கும் வைபவத்தை நடத்தினார்கள்.

இன்னும் இதே மாதிரி நகர்புறத்திலிருக்கும் ரிக்ஷா, 'ஆட்டோ' மற்றும் 'டாக்ஸி' ஓட்டுநர்களுக்கு என்று ஆரவாரமான அறிவிப்பு ஒன்றை அவிழ்த்துவிட்டு, அவர்களை வண்ணக் கனவுகளில் மிதக்கவிட்டது, கருணாநிதி கட்சி. ''ஆட்டோ ஓட்டுநர்களுக்கு ஆட்டோ சொந்தம்'' என்று தலைப்புச் செய்திகள் வெளியிட்டன ஆளுங்கட்சிக்கு 'லாலி' பாடும் பத்திரிக்கை கூட்டம். இந்த செய்தியைக் கண்ட ஆட்டோ ஓட்டுநர்கள் எல்லாம் இன்ப அதிர்ச்சியில் மயங்கிப் போனார்கள். வேறுசிலர், அரண்டு போனார்கள். ''அப்படியென்றால், வாடகை வீட்டில் குடியிருப்பவர்களுக்கு எல்லாம் வீடு சொந்தம் என்று சட்டம் போடுவார்களா?'' என்று ஆச்சரியமாக விவாதித்தார்கள். செய்தியை முழுமையாக படித்தவர்களுக்கு மட்டும்தான், கருணாநிதி கும்பலை விளம்பரப்பித்து எந்த அளவுக்கு பிடித்தாட்டுகிறது என்ற உண்மை தெரிந்திருக்கும்.

மேற்படி வாகனங்களை வாடகைக்கு ஓட்டிக் கொண்டிருக்கும் ஓட்டுநர்களை விரும்பினால், அரசு அவர்களுக்கு கடனுதவி வழங்கும்! விரும்பினால் மட்டும் போதாது; ஓட்டுனர், ஓட்டுனர் உரிமம் வைத்திருப்பதுடன் ஆட்டோ 'பர்மிட்'ம் வேண்டும். அப்படியிருக்கும் பட்சத்தில் அவர் அரசின் சிறுதொழில் முதலீட்டு கழகத்திடம் கடன் கோரினால் பரிசீலிக்கப்படும்! அதற்கும் வாகனங்களின் மதிப்பில் 10 சதவிகிதம் முன் பணமாக கட்டவேண்டும். இவ்வளவு நிபந்தனைகளையும் எவர் ஒருவர் பூர்த்தி செய்கிறாரோ அவருக்கு அரசு விரும்பினால் மட்டுமே கடன் கொடுக்கும். இப்படி ஏழுமலை தாவி ஏழுகடல் தாவி கடன்பெறும் பாக்கியசாலிக்கு 14 சதவிகிதம் வட்டியில் வழங்கப்படும் கடனில் (அசலில் அல்ல) ரிக்ஷா, ஆட்டோ, டாக்ஸிக்கென முறையே 7%, 4.5%, 2% அரசு மான்யம் வழங்கும். ஆக, ஆண்டுக்கு சில நூறு ஓட்டுநர்களுக்கு, அரசு வழங்கும் சில

## கட்சி விழாவா?

தஞ்சை மாவட்டம் வரகூர் கிராம அங்காடியில் 14.4.89 அன்று 'இலவச' அரிசி வழங்கும் அரசு விழாவில் கட்சித்தோரணம், விளம்பரப் பலகை, இனிப்புகள் சகிதமாக தி.மு.கவினர் கட்சிப்பிரச்சாரம் செய்து கொண்டிருந்தனர். இந்த அயோக்கியத்தனத்தை கண்டதும் திருவையாறு ஒன்றிய விவசாயிகள் விடுதலை முன்னணி, ஊரின் முக்கிய இடத்தில் பின்வருமாறு தட்டி எழுதி வைத்தது.

''இலவச அரிசி எங்கிருந்து வந்தது?''

''இன்று விநியோகிக்கப்படும் அரிசியை, கருணாநிதி கதை வசனம் எழுதி சம்பாதித்து மக்களுக்கு இலவசமாகப் போடவில்லை! தி.மு.க தலைமைக்கழகத்திலிருந்து லாரியில் ஏற்றி வந்து இலவசமாகப் போடவில்லை!

நேரடியாகவும் மறைமுகமாவும் நமது செல்வங்களை பிடுங்கி கொண்டு அதில் பெரும்பாலானவற்றை மக்களுக்கு எதிராக வாரியிறைத்து விட்டு, சிறு எலும்புத்துண்டுகளை நம்மிடம் தூக்கி எறிகிறது அரசு! அதில் ஒன்று தான் இந்த இலவச அரிசி வழங்கும் திட்டம்!

கையேந்தி நிற்கும் நமது நிலையை மாற்ற அல்ல; மறைக்கவே, இந்த இலவச அரிசி! சலுகை-சீர்திருத்தங்களில் மயங்க மாட்டோம்! நிலத்துக்காகவும் அதிகாரத்துக்காகவும் போராடுவோம்!''

-மேற்கண்ட எமது துரித நடவடிக்கையையும் போர்க்குணத்தையும் பகுதி வாழ் மக்கள் வெகுவாகப் பாராட்டியதோடு கழகக்கண்மணிகளின் சுய விளம்பர-பிழைப்பு வாதத்தையும் நன்றாகவே உணர்ந்து கொண்டனர்.

-விவசாயிகள் விடுதலை முன்னணி
திருவையாறு ஒன்றியம்

படிப்பகம்

www.padippakam.com

ஆயிரம் ரூபாய் வட்டிச் சலுகைகளுக்கு "ஆட்டோ தொழிலாளர்களுக்கு ஆட்டோ சொந்தம்" என்று பகிரங்கமான மோசடி விளம்பரம், அரசு செய்தி என்று தலைப் பிட்டு பரப்பப்பட்டது.

கிராமப்புறங்களில் நடக்கும் தெருக் கூத்துகளில், கோமாளிக்கு ஒரு பரிசு கொடுப்பார்கள். பரிசுப் பொருளை பார்க் கும் ஆவலோடு அதன்மேல் சுற்றியிருக்கும் காகிதத்தை வேர்க்க விறுவிறுக்க கோமாளி பிரித்துப் போடுவார். கடைசியில் தவளை அல்லது தண்ணீர் பாம்பு அதனுள்ளிருந்து எகிறி குதிக்கும். பார்வையாளர்கள் விழுந்து விழுந்து சிரிப்பார்கள். அதுபோல் இங்கு மக் களை கோமாளிகளாக்கி கைக்கொட்டி சிரிக் கிறது, 'தமிழன் தலை நிமிர்ந்து வாழ' ஓட் டுப் பொறுக்கிய கழகக் கண்மணிகள் கூட் டம்.

இவ்வாறு, ஆட்சிக்கட்டில் ஏறிய 60 நாட்களில் தேர்தல் வாக்குறுதிகளில் 75 சத விகிதத்தை நிறைவேற்றிவிட்டதாக, மூலைக்கு மூலை கூட்டம் போட்டு மேடை யில் முழங்குகிறது, கருணாநிதி அரசு.

பள்ளிச் சிறுவர்களுக்கு முட்டையுடன் கூடிய உண்மையான சத்துணவு, இலவச பட் டப்படிப்பு, முதன்மையாக தேர்ச்சிபெறும் மாணவர்களுக்கு அரசின் பரிசுத்தொகை அதிகரிப்பு, மணமாகாத பெண்களுக்கு திரு மண உதவித்தொகை, கர்ப்பிணிப் பெண்க ளுக்கு ரூ.200 நிதிஉதவி, அநாதைகளுக்கு உதவித்தொகை அதிகரிப்பு, பெண்களுக்கு 30 சதவிகித இட ஒதுக்கீடு இன்னும் இது மாதிரி ஏராளமான "இலவச திட்டங்கள்". "ஆட்சி அமைத்த அறுபதே நாட்களில் சாராய சாம்ராஜ்யம் தகர்ப்பு, தேர்தல் வாக் குறுதிகளை வரிசையாக நிறைவேற்றும் அர சாணைகள்", "கழக வேழத்தின் (யானை) கம்பீரநடைக் கண்டு, கலங்கிடும் சிறு மதியா ளர்களின் சில்லறை விஷமங்கள்" - இப்படி தி.மு.க. ஆட்சியின் சாதனைகள் எண்ணில டங்காத காப்பியங்களாக நீண்டுகொண்டே போகிறது. கூடவே, அதில் அரசியல் எதிரி களை சாடும் துணைக் காண்டங்களும் தொடர்கிறது.

## தீராத நோயாக குடிநீர் பிரச்சினை! தீர்க்கக் கோரி ஆர்ப்பாட்ட இயக்கம்!

தென்னாற்காடு மாவட்டம், சங் கராபுரம் வட்டாரத்தில் குடிநீர் பிரச் சினை கடுமையானதை ஒட்டி கல்லை வட்ட வி.வி.மு. ஒரு பிரச்சார இயக்கத் தை நடத்தியது. குடிநீர் பிரச்சினையைப் பற்றி ஊர் ஊராகச் சென்று மக்கள் மத் தியில் ஆய்வு செய்து பிரச்சினைகளை யும் கோரிக்கைகளையும் மனுவாகத் தயாரித்து ஊர் மக்களிடம் கையெழுத்து பெறப்பட்டது. மக்களின் அடிப்படைத் தேவையான குடிநீர்ப் பிரச்சினையைக் கூட 41 ஆண்டு கொள்ளையராட்சி தீர்க்கவில்லை என்பதை விளக்கும் தட் டிகளும், சுவரொட்டிகளும் தயாரித்து பிரச்சாரம் செய்யப் பட்டது. பிரசுர மும் விநியோகிக்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக 25.4.89 அன்று மாலை 100க்கும் மேற்பட்ட ஆதரவாளர்களுடன், விண்ணதிர முழக்கமிட்டபடி ஊர்வலமாகச் சென்று, சங்கராபுரம் ஊராட்சி ஒன் றிய அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம் செய்து, கோரிக்கைகள் அடங்கிய மனுக்கள் ஆணையாளரிடம் தரப்பட் டது. அதன் பின்னர் அமைப்பாளர் தோழர் கதிர்வேலன் குடிநீர் பிரச் சினையையும், குறிப்பாக பெண்கள் படும் அவதியையும், மக்களின் அடிப் படைத் தேவைகள் பற்றி ஓட்டுக் கட்சி களும், அதிகார வர்க்கமும், அக்கறை யற்று இருக்கும் அதே நேரத்தில் ஊதா ரித் திட்டங்களுக்கு ஏராளமாக செல வழிப்பதை அம்பலப்படுத்தியும் உரை யாற்றினார். அதிகாரிகள் உரிய நட வடிக்கை எடுக்காவிடில் அடுத்த கட்ட போராட்டத்தை நாம் தொடர வேண் டுமென வலியுறுத்தினார்.

இந்த இயக்கம் மக்கள் மத்தியில் சிறப்பான வரவேற்பைப் பெற்றதோடு, மக்கள் நலனுக்காகப் போராடும் ஒரே அமைப்பு வி.வி.மு.தான் என்ற அபிப் பிராயத்தையும் மக்கள் மனதில் ஆழப் பதித்துள்ளது.

தகவல் : விவசாயிகள் விடுதலை முன்னணி, கல்லை வட்டம்

பதினைந்து நாட்களுக்கு ஒரு முட்டை போடுவதையும் 50 விழுக்காடு மாணவர்க ளுக்கு மட்டுமே வழங்கப்படும் இலவச பட் டப்படிப்பு திட்டத்தையும், (பள்ளி செல் வோரின் எண்ணிக்கை மொத்த மக்கள் தொகையில் 60 விழுக்காட்டிற்கும் குறைவு. அதில் பட்டப்படிப்பு வரை செல்வோரின் எண்ணிக்கை 5 விழுக்காட்டிற்கும் குறைவு. இதில் பாதி பேருக்கு மட்டும்தான் இலவசப் பட்டப்படிப்பு!). விரல்விட்டு எண்ணக்கூ டிய ஒருசில மாணவர்களை மட்டுமே ஊக் கப்படுத்தக் கூடிய பரிசுத் தொகையையும், 18 வயதைத் தாண்டியதோடு 8ஆம் வகுப்பு வரை படித்திருக்கும் பெண்களுக்கு மட் டுமே வழங்கப் போவதாக கூறும் திருமண உதவி தொகையையும் இப்படி மொட்டை யான வார்த்தைகள் மூலம் கொட்டையாக விளம்பரங்கள் செய்து தமிழகத்தில் புதிதா கப் பிறக்கும் குழந்தைகளையும் சேர்த்து கரு ணாநிதி இலவசத் திட்டங்களை அமுலாக்கி யிருப்பதாக காதில் மட்டுமல்ல மூக்கிலும் சேர்த்து பூ சுற்றுகிறது, தி.மு.க.வின் ஆட்சி யும் கட்சியும்.

எப்படியோ; பத்திரிகைகளில் தினமும் தனது அறிவிப்புகள் தலைப்புச் செய்திக ளாக வந்து, ஏற்கனவே மக்கள் மனங்களில் தன்னைப்பற்றி இருக்கும் கறையைக் கழுவி விட வேண்டும் என்பதற்காக, சரஞ்சரமாக மோசடி விளம்பரங்களை திட்டமிட்டு பரப்பி வருகிறார், கருணாநிதி. இக்கட்டுரை

## சுய விளம்பரப் பித்தர்களின் முகமூடியைக் கிழித்து...

தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று, எங்கள் ஊரான கண்டியூரில் உள்ள கூட்டுறவுத் தொடக்க வங்கியின், தி.மு.க அரசால் அறிவிக்கப்பட்ட இலவச அரிசியை எங்கள் தொகுதி தி.மு.க. எம்.எல்.ஏ. துரை சந்திர சேகரன் வழங்குவதாக அறிவித்து விழாவுக்கு ஏற்பாடு செய்தனர். காலை 7 மணியிலிருந்தே மேடையிலும் அதைச் சுற்றியும் தி.மு.க தோரணங் களைக் கட்டியும், தி.மு.க கொள்கைப் பாடல்களை ஒலிபரப்பிக் கொண்டும் இருந்தனர்.

நான் அங்கு பணி புரிந்து கொண்டி ருந்த வங்கி ஊழியரான அபுசாலி என் பவரிடம் அரசு விழாவை இப்படி கட்சி விழாவாக்குகிறீர்களே, இது முறை தானா? என்று கேட்டேன். எரிச்ச லடைந்த அவர் நாங்கள் அப்படித்தான் செய்வோம்! என்றார். கிராம நிர்வாக அலுவலரான (VAO) ரவி என்பவர் என்ன ஏது என்று கூட விசாரிக்காமல், "இவரைப் பிடித்து வையுங்கள். நான் போலீசுக்கு போன் செய்கிறேன்" என்று மிரட்டினார். "இதற்கு நான் ஒன்றும் பயந்து ஓடி விட மாட்டேன். போலீசு வரட்டும்; நியாயத்தைக் கேட்போம்" என்று தைரியமாகக் கூறினேன்.

சிறிது நேரத்தில் அங்கு வந்த திருவையாறு காவல்துறை சப்இன்ஸ் பெக்டர் அருள்சாமியிடம் நானே பேசிக் கொண்டிருக்கும்போது கண்டி யூர் சரக வரு[illegible]ளர் (RI) உசேன் என்பவர் ஓடி வந்து "சார்! இந்த ஆள் அரிசியை போட வேண் டாம் என்று கலாட்டா செய்கிறார்." என்று என் மீது அபாண்டமான பழியைச் சுமத்தினார்.

இதற்கிடையே போலீசைக் கண் டதும் ஓடி ஒளிந்துக் கொண்ட, என் னைத் தாக்க முற்பட்ட கழக கண்மணி கள், என் வீட்டிற்குச் சென்று என் தாயையும், மனைவியையும் தரக் குறைவாக ஏசி என் வீட்டைச் சேதப் படுத்த முயன்றனர். உடனே என் மனைவி, "இருப்பது ஒரு உயிர்; அது போவதும் ஒரு முறைதான்! தைரிய மான ஆண்களாக இருந்தால் வீட்டில் கை வைத்துப் பாருங்கள்!" என்று எச் சரித்ததும் கழகக் காலிகள் நழுவி விட்டனர்.

தகவல்: சீனிவாசன் (விவசாயிகள் விடுதலை முன்னணி ஆதரவாளர்) கண்டியூர்

படிப்பகம்

www.padippakam.com

எழுதும்போது கடைசியாக வந்த 'கருணை அறிவிப்புகள் இரண்டு. ஒன்று ''கட்டாய ஹெல்மட்' சட்டம் ரத்து''; இரண்டு ''சந்தேக வழக்கு ரத்து''. பட்டாசு வெடி சத்தத்தில் கதாநாயகனைச் சுட்டுக்கொன்றுவிட்டு தப்பிக்கும் தமிழ் சினிமா வில்லனைப்போல தான் ஒரு குயுக்தி கிரிமினல் பேர்வழி என்பதை இக்கருணை அறிவிப்பு மூலம் நிரூபித்துக் கொண்டார், கருணாநிதி. எந்தக் கட்டுப்பாட்டையுமே தொல்லையாகக் கருதும் நடுத்தர - மேல்மட்ட வர்க்கத்தின் அராஜகப் போக்கை சாதகமாக பயன்படுத்திக் கொண்டு ஹெல்மட் ரத்து சட்டத்தின் மூலம் ஏதோ ஒரு பெரிய அரசியல் உரிமையை மீட்டுக் கொடுத்துவிட்டதாக 'புகழ்' தேடிக் கொண்டார். அந்த ஆரவாரத்தில் தான் ரத்து செய்யாத, 'சந்தேக வழக்கு சட்டத்தை, ரத்து செய்ய சட்டமே போட்டுவிட்டதாக இந்த புளுகுணி அறிவிப்பையும் அவிழ்த்து விட்டு மக்களை பகிரங்கமாக மோசடி செய்தார். உண்மையென்னவெனில், சகட்டுமேனிக்கு சந்தேக வழக்கை பயன்படுத்த வேண்டாம் என்று போலீசு கும்பலுக்கு இவர் அறிவுரை வழங்கியிருப்பதாக சட்டசபையில் தான் கூறியதை இப்படி திரித்துப்போட தன்னுடைய எடுபிடி பத்திரிகைகளுக்கு 'ஊக்கம்' கொடுத்திருக்கிறார். தான் என்ன கூறினாலும் எப்படியும் மக்களை ஏமாற்றலாம் என்கிற அதிகாரத்திமிர், தனக்கு முதுகுசொறியும் கூட்டத்தின் மூலம் எதையும் நியாயப்படுத்திவிடலாம் என்ற அகங்காரம், எதையும் மக்கள் தாங்கிக் கொள்வார்கள், முடியாவிட்டால் ஒதுங்கிக் கொள்வாகள், எதிர்த்துக் கேட்க மட்டும் துணியமாட்டார்கள், அதற்கு நம் கழக உடன்பிறப்புக்கள் விடவும் மாட்டார்கள் என்ற மமதையில் மிதக்கின்றார்.

இப்படித்தான் இவர் ஆட்சிக்கட்டில் ஏறியவுடன், இவருடைய எடுபிடி கூட்டம், கருணாநிதியின் ஆரம்ப சூரத்தனங்களைப் பற்றி சாதனை மலைகளாக எழுதிக்குவித்தன. சாராய சாம்ராஜ்ஜியத்தை தகர்த்தெறிந்தார், நிர்வாகத்தை செப்பனிடுகிறார், கடந்த ஆட்சியின் ஊழல் பேர்வழிகளை முச்சந்தியில் நிறுத்துகிறார், ஆடம்பர தர்பாரை வெறுத்தொதுக்குகிறார், பயன் கிடைக்கும் என்றாலும் கவர்ச்சித் திட்டங்களை எதிர்க்கிறார், வளர்ச்சி திட்டங்களுக்கு அக்கறை செலுத்துகிறார், தம் சொந்த மகன் ஸ்டாலினுக்குக் கூட மற்ற எம்.எல்.ஏ.க்களுக்கு கொடுக்கும் அந்தஸ்தைதான் கொடுக்கிறார்; பாசம் வேறு பதவி வேறு என்பதற்கு இலக்கணமாகத் திகழ்கிறார் என்று எந்த விபர அடிப்படையும் இல்லாமல் கூச்சம் இல்லாமல் வேசித்தனமாக கருணாநிதியின் புகழ் பரப்பினார்கள். கருணாநிதியைப் பற்றி அவர்கள் தீட்டிய வண்ண ஓவியங்கள் எல்லாம், வெகு சீக்கிரத்திலேயே விரிசலடைந்து பல்லிளிக்கின்றன.

''முதல் கட்ட பேரம்: 25 கோடி 'லபக்'? சாராய உடையாரிடம் மீண்டும் சரணாகதி! -நல்லையா அவுட்'' (தராசு - 28.4.89) ''சாராய சாம்ராஜ்யம் நிமிரும்?'' (ஜூ.வி. 19.4.89) ''சத்துணவுடன் முட்டை வழங்கப்படும் என்ற கருணாநிதியின் அறிவிப்பு வந்தவுடன், கோழிப் பண்ணைக்கு ''லோன்'' கேட்டு பேங்க் வாசலில்களில் ஏகப்பட்ட



## மே நாள் சூளுரை!

* அமெரிக்க, ருசிய மேல்நிலை வல்லரசுகளை முறியடிப்போம்!

* இந்திய ஆளும் வர்க்கங்களின் நேபாளத் தலையீட்டையும், இலங்கை ஆக்கிரமிப்பையும் முடிவுக்குக் கொண்டு வருவோம்! அதன் பிராந்திய விரிவாதிக்க - துணை வல்லரசுக் கொள்கைகளை முறியடிப்போம்!

* ராஜீவ் கும்பலின் பாசிச சதிகளை முறியடிப்போம்!

* தரகு முதலாளிகள், நிலப்பிரபுக்களின் அரசைத் தூக்கியெறிந்து, நக்சல்பாரிப் புரட்சி பாதையில் புதிய ஜனநாயகத்தைப் படைப்போம்!

தி.மு.க. தலைகள். எல்லாம் ''லோன் வாங்கி பின்னர் பேங்குக்கு முட்டைபோட...'' ''ஆஹா! அப்படியா!'' (நக்கீரன் 3.5.89) ஓட்டல்பண்ட விலை குறைப்பு முயற்சி தொடர்பாக.. இரண்டரை கோடி வரை பேரம்! மந்திரிசபைக் கூட்டத்தில் இதற்கு சம்மதம்' (விசிட்டர் 21.4.89) 'கலைஞர் தன் மச்சான் மாறனுக்கு ரொம்பவும்தான் இடம் கொடுக்கிறார்... கோட்டையில் தனி அறை... அங்கே போய் ஆபீஸ் நேரம் போல் அமர்ந்துவிடுகிறார்... முதல்வருக்கு ஆலோசனை கூறுகிறார்'' (விசிட்டர் 21.4.89) இவ்வளவுக்கும் மாறன், எம்.எல்.ஏ. கூட கிடையாது! இன்னும், இலவச அரிசி வழங்கும் திட்டத்தில், கருணாநிதி மனைவி, மகள் நேரிடையாக பங்கேற்று அரிசி வழங்கினார்கள். கோட்டையில் இன்னமும் பழைய பிரபல அ.தி.மு.க ஊழல் தலைகள் இப்போதும் தி.மு.க. மந்திரிகளின் அறையில் அவர்களுடன் அரட்டை அடிக்கின்றனர். கூட்டமாக காரியங்களை சாதிக்கின்றனர். இவையெல்லாம், கருணாநிதி ஆட்சியின் 'நன்னடத்தை' பற்றியான ஒரு சில சான்றுகள். இருந்தும், இதையும் கருணாநிதிக்கு பெருமை சேர்க்கும் விபரங்களாக வெட்கங்கெட்ட முறையில் நியாயப்படுத்துகிறது, எடுபிடி கூட்டம். 'கலைஞர் கனிந்துவிட்டார்', 'பகையை பாராட்டாமல் பெருந்தன்மையுடன் நடந்து கொள்கிறார்' என்கிறார்கள்.

பாசிஸ்ட்டுகளின் பாதந்தாங்கி, குரூர கோமாளி, எம்.ஜி.ஆர். ஆட்சியையும், அவரது இலவசத் திட்டங்களையும் இப்படித்தான் தலையில் தூக்கிவைத்துக்கொண்டு ஆடியது இதே எடுபிடி கூட்டம். இப்போது கருணாநிதி ஆட்சிக்கும் அதே முறையில் காவடி தூக்கி தங்கள் வயிறைப் பேணி பாதுகாத்துக் கொள்கிறது. தேசிய முன்னணியில் இணைந்து, ராஜீவ் கும்பலுக்கு எதிராக வீர வசனங்கள் பேசிய கருணாநிதி ஆட்சிக் கட்டிலைப் பிடித்தவுடன் அந்தர் பல்டியடித்து ராஜீவுடன் 'கொள்கை' கூட்டணிக்கு நாயாய் அலைவதை, மக்களை ஏய்த்து இலவச திட்டங்களை இறைத்து, எப்படியாவது பதவியில் அட்டையாய் ஒட்டிக் கொள்வதற்கு படாதபாடு படுவதை, ராஜதந்திரமாகவும் தர்மசிந்தனையாகவும் ஒளிவட்டம் அமைக்கின்றனர்.

முந்தைய எம்.ஜி.ஆர். ஆட்சி இமாலய ஊழல்கள் புரிந்தும், இலவசத் திட்டங்களை வாரியிறைத்தும், கஜானாவையும் களஞ்சியத்தையும் காலி செய்துவிட்டதாக, ஆட்சிக் கட்டில் ஏறியதும் ஒப்பாரி வைத்தார், கருணாநிதி. தோல்வி பீதியில் பின் வாங்கும் படைகள் தீய்க்கும் கொள்கையை அமுல்படுத்துவது போல, எம்.ஜி.ஆர். தமிழ் நாட்டையே போண்டியாக்கி விட்டு போய்விட்டார் என்று கூறினார். திவாலான தமிழக ஆட்சிதான் தன்னிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாக, முதலைக் கண்ணீர் வடித்தார்.

ஆனால், உத்தம சீலர், 'நிர்வாகப் புலி' கருணாநிதியோ, ஆட்சிக்கட்டில் ஏறிய 60 நாட்களுக்குள்ளேயே, எம்.ஜி.ஆர் ஆட்சியின் 10 ஆண்டுகால 'இமாலய' இலவச திட்டங்களையும் சுயவிளம்பர அரசியல் வாண வேடிக்கைகளையும் சிறு துரும்பாக்கி விட்டார். வேகம் என்றால் அப்படியொரு வேகம்! சூறாவளி போல, நாள்தோறும் ஏதாவதொரு இலவச திட்டங்கள்; எண்ணிலடங்காத ஊழல் முறைகேடுகள் கொடிக்கட்டி பறக்கிறது. சாராய சாம்ராஜ்ஜியத்திலிருந்து சாதாரண இலவச குடிநீர் வழங்கும் திட்டம் வரை அனைத்தையும் கிரமமான முறையில் கழக உடன்பிறப்புகளுக்கு பிரித்தொதுக்கி இருக்கிறார். எம்.ஜி.ஆர். ஆட்சியில் அ.தி.மு.க கொடியுடன், சின்னத்துடன் தமிழ்நாட்டை சூறையாடிய கும்பல் இப்போது தி.மு.க கொடியுடனும் சின்னத்துடனும் அத்தொழிலைத் தொடர்கிறது. பொது இடங்களை ஆக்கிரமிப்பது முதல் போலீசு கும்பலுக்கு தரகு வேலை செய்வது வரை அச்சாக நடக்கிறது. 'வந்தால் மலை; போனால் மயிர்' - இந்த பிழைப்புவாத அரசியல் சூத்திரத்தையே தனது வழிகாட்டும் நெறிமுறையாகக் கொண்டு வேகமாக செயல்படுகிறது, கருணாநிதி ஆட்சி. தமிழக மக்களை ஆட்டிப் படைக்கும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பற்றியோ, வறட்சி, வெள்ளம் இவற்றால் தொடர்ந்து போண்டியாகி வரும் விவசாயிகளின் வாழ்க்கை நிலைமையை உயர்த்துவதற்கான நிரந்தர திட்டம் பற்றியான சிந்தனைகூட இல்லாமல், அதையே தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டு கருணை வள்ளலாக அரசியல் வாண வேடிக்கை காட்டி மக்களை ஏய்க்கிறார். கருணாநிதி உருவத்தில் இன்னொரு எம்.ஜி.ஆர். என்பதை தொழில் சுத்தமாக நிரூபித்து வருகிறார்.

— பச்சையப்பன்.

படிப்பகம்

www.padippakam.com



## கேரள ரயில் விபத்து:
## அரசின், குரூர கேலி தீர்ப்பு.

**நா**ட்டு மக்களுடைய உயிரை எவ்வளவு மலிவானவையாக -துச்சமானவையாக பாசிச ஆட்சியாளர்கள் மதிக்கிறார்கள் என்பதை மீண்டும் ஒருமுறை தெட்டத்தெளிவாகக் காட்டிக் கொண்டுள்ளனர். ஒன்பது மாதங்களுக்கு முன்பு கேரளா - கொல்லம் அருகே பெருமனில் உள்ள அஸ்தமுடி கடல் நீர் ஏரியைக் கடக்கும்போது பெங்களூர் -திருவனந்தபுரம் துரித ரயில்வண்டி கவிழ்ந்ததில் 300 பேருக்கும் மேல் மாண்டனர். 105 பேர்தான் என்று இன்னமும் அரசு கூறுகிறது.

இந்தக் கோர விபத்துக்கான காரணம் ''அந்தச் சமயத்தில் ஒரு பெரிய சூறாவளி வீசி அப்படியே ரயிலைக் கவிழ்த்து விட்டது'' என்று ரயில்வே பாதுகாப்புக் கமிஷனர் சத்தியநாராயண ஓர் அறிக்கை கொடுத்து அரசும் ஏற்று அங்கீகரித்துள்ளது.

இந்திய அரசும் அதிகாரிகளும் விபத்துக்கான காரணமாக சூறாவளி என்று கூறுவது மனிதர்களின் பொது அறிவை கேளிக்குரியதாகவும் அவமானப்படுத்துவதும் ஆகும். விபத்து நடந்த சமயம், அந்த பகுதியில் வாழும் மக்கள் ஒரு சிறு சுழற்காற்றையோ, லேசான தென்றல் காற்றையோ கூட உணரவில்லை. ஏராளமான தென்னந் தோப்புகளும், ஓட்டு வீடுகளும் ஓலைக்குடிசைகளும் அங்குள்ளன. மரங்கள் சாய்வதை விடுங்கள்; ஒரு தென்ன மட்டையும் விழவில்லை; ஒரு ஓடுகூட நகரவில்லை; ஒரு கீற்றுக்கூட பறக்கவில்லை. விபத்து நடந்து ஏரிக்குள் ரயில் கவிழ்ந்த அதே சமயம் பாலத்தின் தூண்மீது ஒண்டிக்கொண்டு நின்றிருந்த ஒருவரின் குடையைச் சிறிதுகூட அசைக்கவில்லை. அந்தச் சமயத்தில் லேசாக வானம் தூறிக்கொண்டிருந்தது தவிர சிறு அசைவுகூட இல்லை. யாருக்குமே தெரியாமல் இரகசியமாக வந்து மிகமிகக் கனமான ரயிலின் நடுப்பகுதியை மட்டும் தாக்கி ஒரு சூறாவளி கவிழ்ந்துவிட்டது என்று புளுகுகிறார்கள்.

''விபத்து நடந்தபோது காதைத் துளைக்கும் மளவு பலமான விசில் -சீழ்க்கை சத்தம் கேட்டது'' என்று ரயிலில் சென்ற பேராசிரியர் ஒருவர் கூறியதை வைத்து மத்திய விண்ணியல்த்துறை பத்திரிக்கை சூறாவளி வீசியதாக ஊகம் செய்து எழுதியது. விபத்து நடந்ததற்குக் காரணம் ரயில்வே ஊழியர்கள்தாம் என்று இடைக்கால அறிக்கை கொடுத்திருந்ததை மாற்றிக்கொண்டு ''சூறாவளி''யை உருவாக்கினார்கள்.

உண்மையில் 154 ஆண்டுகளாக தென்னாட்டில் எங்குமே சூறாவளி வீசியதில்லை. பூமத்தியரேகைப் பிரதேசத்தில் சூறாவளி வீசவும் வாய்ப்புக் குளைவு. 1952இல் திருவனந்தபுரத்தில் சூறாவளி வீசியதாக கூறப்பட்டதுகூட வதந்திதான் என நிரூபிக்கப்பட்டு விட்டது. அரசின் உள்ளூர் விண்ணியல் மற்றும் பிற துறைகளும்கூட சூறாவளி வீசி விபத்து நடந்ததை மறுத்துள்ளது. பெருமன் -அஸ்தமுடி விபத்து நடந்ததும் பதவி விலகுவதாக நாடகமாடிய ரயில்வே மந்திரி இப்போது சூறாவளி என்று புளுகும் அறிக்கையை நியாயப்படுத்துகிறார்.

ஆண்டுக்கு ஆண்டு கட்டணத்தை ஏற்றிக் கொண்டே போகும் மந்திரி, விபத்துக்கள் குறைந்து வருவதாகப் பீற்றிக்கொள்கிறார். விபத்துக்கள் குறைந்து வருவது உண்மை தான். ஆனால் சாவு எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. அதாவது ஆண்டுக்கு 805 விபத்துக்கள் நடக்கின்றன. 244 பேர் பலியாகின்றனர். ரயில் பாதைகள் போன்ற சாதனங்கள், ஊழியர்களின் வேலை நிலைமைகள் ஆகியவற்றை அபிவிருத்தி செய்யாத அதே சமயம் ரயில்களின் வேகத்தையும், எண்ணிக்கையையும் கூட்டிக்கொண்டே போவதுதான் விபத்துக்களுக்குக் காரணம். இந்தக் காரணங்களை ஒப்புக் கொண்டால் ஏராளமான நட்டஈடுதர வேண்டும், பொறுப்பு ஏற்க வேண்டும் என்பதற்காக நாச வேலை, சூறாவளி போன்ற அண்டப் புளுகு மூட்டைகளை அவிழ்த்துவிடுகிறார்கள். நன்கு அறிந்தே மனித உயிர்களைப் பலிகொடுக்கும், இந்தக் கிரிமினல் குற்றவாளிகளை விடக்கூடாது. குற்றவாளிகளை மீண்டும் மக்களே தண்டிக்க வேண்டும்.

## திருச்சி காந்தி மார்க்கெட்டின் அவலங்கள்!

திருச்சி நகர மக்கள் அனைவரது பிரச்சினையாக -- அன்றாட வாழ்வின் போராட்டமாக உயர்ந்து நிற்கிறது, காந்தி மார்க்கெட்டின் போக்குவரத்து நெரிசல்.

லாரிகளும் சரக்கு வண்டிகளும் மார்க்கெட்டிற்குள் இரவில் மட்டுமே சென்று ஏற்றுமதி - இறக்குமதிகளை செய்ய வேண்டும் என்ற விதி இருந்தாலும், பகலில் தான் பெரும்பாலான லாரிகள் போக்குவரத்துக்கு இடையூறாக வழியில் நிறுத்தப்பட்டு சரக்குகளை ஏற்றுவதும் இறக்குவதுமாக உள்ளன. மேலும், காய்கறி - பழம் மற்றும் வெல்ல மண்டி வியாபாரிகள் தங்கள் கடைக்குள் பொருட்களை வைத்து விற்காமல், வாடிக்கையாளர்களைக் கவர்ந்திழுக்க கடைக்கு வெளியே பொதுவழியில் குவித்துக் கொண்டு விற்கிறார்கள் - ஏலம் விடுகிறார்கள். இதை நகராட்சியோ, போலீஸ் துறையோ கண்டு கொள்வதில்லை. உள்ளூர் லாரிகளுக்கு 2 ரூபாய், வெளியூர் லாரிகளுக்கு ரூபாய் 5 முதல் 10 வரை மாமூல் வாங்கிக் கொண்டு மார்க்கெட்டிற்குள் லாரிகளை பகலில் சரக்கு இறக்க அனுமதிப்பதே போலீஸ் துறை தான்!

மேலும் மார்க்கெட்டில் உள்ள நகராட்சி கடைகளுக்கு வசூலிக்கும் வாடகைக்கும் முறையான ரசீது கொடுக்கப் படுவதில்லை. அதோடு மார்க்கெட்டிற்குள் செல்லும் சைக்கிள்களுக்கு வாய்க்கு வந்தபடி ஏலக்காரர்கள் கட்டணம் வசூலிக்கின்றனர். இதை எதிர்த்துக் கேட்க முற்பட்டால் ரௌடி கோஷ்டிகள் பதில் சொல்ல முன் வருகின்றன. இதற்கென்றே நாடார் - முத்தையா கோஷ்டி, ரத்தினம் கோஷ்டி, சாத்தையன் கோஷ்டி முதலான ரௌடி கோஷ்டி களைப் பக்கபலமாக வைத்துக் கொண்டு அராஜகம் செய்துவரும் பெருவியாபாரிகளையும், காண்டிராக்டர்களையும் நகராட்சி நிர்வாகம் கண்டு கொள்வதே இல்லை.

மேலும் சாக்கடை நீர் பாதையில் தேங்கி நிற்பதும், மக்கள் பலர் வழுக்கி விழுவதும் அன்றாட நிகழ்ச்சியாகி விட்டது. அழுகிப் போன காய்கறி - பழங்களை பொது வழியில் கடைக்காரர்கள் கொட்டிக் குவிப்பதும், நகராட்சி அதை அப்புறப்படுத்தாமல் இருப்பதும் நிரந்தரமாகி விட்டது.

பெருவியாபாரிகளிடம் நாக்கைத் தொங்கவிட்டுக் கொண்டு நிற்கும் ஒட்டுண்ணி அதிகார வர்க்கமும், போலீசு நாய்களும் உள்ளவரை, திருச்சி நகர மக்களுக்கு 21 - ஆம் நூற்றாண்டே வந்தாலும் பிரச்சினைகள் தீரப்போவதில்லை.

தகவல் : மான், திருச்சி.

www.padippakam.com


இதோ, இது சென்னை அடுத்து ஒரு நூறு கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கும் கல்பாக்கம் அணு உலை கட்டிடம். திறுவிய நாளிலிருந்து இன்று வரை, அதன் மின் உற்பத்தி இலக்கில் 50 சதவிகிதத்தை கூட எட்டியதில்லை. இயங்குவது ஒரு மாதம் என்றால் முடங்கியிருப்பது பல மாதங்கள் என்று தொடர்ந்து மரணபடுக்கையில் இருக்கிறது. தற்போது தமிழகத்தில் ஏற்பட்டுள்ள 60 சதவிகித மின்வெட்டிற்கும் பிரதான காரணம் இவ்வணு உலைதான்! அதனுடைய ஆக்கச் சக்திதான் எதிர்பார்த்ததை விட குறைவாக இருக்கிறதே அன்றி அழிவு சக்தியல்ல. இவ்வணு உலையால் தமிழக மக்களுக்கு நாளுக்கு நாள் ஆபத்து பெருகி வருகிறது. அவ்வணு உலையில் ஏற்படும் ஆபத்தை மக்களுக்கு தெரிவிப்பது என்பது கூட இல்லாமல், "பழுது" என்ற ஒரு வார்த்தையில் அனைத்தையும் அமுக்கி விடுகிறது அணுசக்தி துறைக்கு பொறுப்பேற்றிருக்கும், அதிகார வர்க்கம். இப்போதே அப்பகுதியில் உள்ள மீனவர்களுக்கு 50 சதவிகிதத்திற்கும் மேல் தொழில் குறைந்து விட்டது. அவ்வணு உலையைச் சுற்றி பல பத்து மைல் தூரத்திற்கு கடலில் மீனே கிடைப்பதில்லை என்று வேதனையுடன் கூறுகிறார்கள் மீனவர்கள். சமீப காலங்களில் அப்பகுதி மக்களுக்கு, குறிப்பாக அவ்வணு உலையின் அருகில் வசிக்கும் மீனவர்களின் குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் இனம் புரியாத பல்வேறு நோய்கள் அதிகரித்திருப்பதாக ஆய்வறிக்கைகள் கூறுகின்றன. தெரிந்தும் இவ்வறிக்கைகளை அரசு அலட்சியம் செய்கிறது.

இதோ, இவர் நேற்று வரை இந்திய அரசின் அணு எரிசக்தி நிலைய சுற்று சூழல் ஆய்வுத்துறை தலைமை விஞ்ஞானி. இன்று இவர் ஒரு துணி கடை வியாபாரி! தேசப்பாதுகாப்பு, இரகசியம் என்ற மூடுதிரையின் பின்னே, பாதுகாப்பற்ற அணு உலை மற்றும் அதைச் சார்ந்த ஆய்வு நிலையங்களின் கழிவுகள் மூலம் இந்திய மக்களை படுகொலைக்கும், நீராத பல்வேறு நோய்களுக்கும் ஆளாக்கும் இந்திய பாசிச கும்பலின் கோர முகத்தை கிழித்தெறிந்த தேசபக்தி விஞ்ஞானி கான்!

ஆந்திர மாநிலம் ஐதராபாத் நகரிலுள்ள, அணு எரிசக்தி நிலையத்தின் ஆராய்ச்சி மற்றும் வடிவமைப்பு பிரிவில் இவர் நிலத்தடி நீர் மற்றும் மண்ணியல் ஆய்வுத்துறையின் தலைமை விஞ்ஞானி. 70-ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட அந்நிலையத்தின் கழிவுகளால் 78-ஆம் ஆண்டுக்குள் ஐதராபாத் நகரத்தின் நிலத்தடி நீரில் நைட்ரேட் என்னும் அதிபயங்





கர ரசாயன தாது ஆபத்து அளவையும் விட அதிகமாக கலந்திருப்பதை அணுசக்திதுறை தலைமைக்கு தெரிவித்து-எச்சரித்தார். ஓராண்டுக்கு மேலாகியும் அதைப்பற்றி அக்கறை காட்டாமல் இருந்த அணுசக்தி துறை தலைமையையும் அரசையும் அம்பலப்படுத்தி அந்நகர மக்களிடம் தனி மனிதராகப் பிரச்சாரம் செய்தார். அரண்டு போன அதிகார வர்க்கம், அவசரமாக தனது கைக்கூலி தனியார் ஆய்வு நிறுவனங்களிலிருந்து அவ்வாறு ஆபத்து இல்லை என்று அறிக்கை வாங்கி எதிர் பிரச்சாரம் செய்தது. விஞ்ஞானி கானுக்கு பைத்தியம் பிடித்திருப்பதாகவும் சமீப காலமாக ஏதோ ஏதோ உளறுகிறார் என்றும் கொச்சைப்படுத்தியது. பலவழிகளிலும் அவரை மிரட்டியது. இனியும் இக்கேடு கெட்ட அரசிடம் பணி புரிவதில் அர்த்தமில்லை என்று ராஜினாமா கடிதம் கொடுத்து விட்டு அந்நகரத்திலேயே கவுரமான வாழ்க்கையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார். இன்றளவும் இவருக்கு சேர வேண்டிய சம்பள பிடித்தங்களையும், ஓய்வு கால ஊதியத்தையும் தராமல் இழுத்தடிக்கிறது கொலை வெறி பிடித்த பாசிச அரசு.

மக்களின் மீதும், தேசத்தின் மீதும் எல்லையற்ற பற்றுக் கொண்ட எத்தனையோ இந்திய விஞ்ஞானிகள், இந்திய அரசால் இவரைப் போலவே கேவலப்படுத்தப் படுகின்றனர்.

எதிர்க்கும் துணிவின்றி சிலர் தற்கொலைக்கு ஆளாகி மடிந்து போனார்கள்; சிலர் மௌனமாக, சிறிது சிறிதாக செத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அடக்குமுறைச் சட்டங்கள், அரசு பயங்கரவாதம் மூலம் பகிரங்கமாகவும், இயற்கை சீற்றங்கள், எதிர்பாராத விபத்துக்கள், நச்சு கழிவுகள் என்ற மூடுதிரையின் பின்னே மறைமுகமாகவும் சொந்த நாட்டு மக்களின் மீது வெகுஜன படுகொலைகளை கட்டவிழ்த்து விடும் பாசிச கும்பலை நாம் ஒன்று திரண்டு மரணக் குழியில் கள்ளுவது எப்போது?

# இதுதான் இன்றைய இந்தியா



படிப்பகம்